விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே



சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 மார்கழி 03 திங்கட்கிழமை (18.12.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 364

இளைஞர்களுக்கு நான் கூறவருவது,

"உங்கள் எழுச்சியில் எவ்வாறு முதலமைச்சரை இதுவரை நிலைத்து நிற்க வைத்தீர்களோ, அதே எழுச்சியை மக்கள் இயக்கமாக பரிணமித்து அரசுக்கு காட்ட வேண்டிய தருணம் நெருங்கிக் கொண்டிருக்கிறது. ஆகவே தருணம் பார்த்திருங்கள்." 4-ம் பக்.

பிரதேசசபை ஊழியர்களுக்கு இடையூறு;

## ஆசிரியை உள்ளிட்ட இருவர் அரியாலை கிழக்கில் கைது

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட அரியாலை கிழக்கில் பிரதேச சபை ஊழியர்களின் கடமைக்கு இடையூறு விளைவித்தனர் என்ற குற்றச்சாட்டில் ஆசிரியை உள்ளிட்ட இருவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டனர் என்று யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்தனர்.

நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட அரியாலை கிழக்கு கருப்பையா வீதியைச் சீரமைக்க நடப்பாண்டில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. அதற்கமைய அந்த வீதியைச் சீரமைப்பதற்கான பணிகள் நல்லூர் பிரதேச சபையால் முன்னெடுக்கப் 23☛

# கட்சிகளை பொருட்படுத்தாது தகுதியானவர்களுக்கு வாக்களியுங்கள்

## முதலமைச்சர் அறைகூவல்

(யாழ்ப்பாணம்) கட்சிகளைப் பொருட்படுத்தாது தகுதியானவர்களுக்கு வாக்களியுங்கள். உங்கள் பகுதியை உள்ளன்புடன் நேசிக்கும் ஒருவரைத் தேர்ந்தெடுங்கள். அவருக்கு இருக்கும் தகுதி, நேர்மையும், திறமையுமே. அத்துடன் அவர் ஊழலை வெறுப்பவராகவும் மக்களை நேசிப்பவராகவும் இருக்க வேண்டும் என முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார். (04-ம் பக்கம் பார்க்க...)




## மின்சார சபை எச்சரிக்கை!

(கொழும்பு)

தமது கோரிக்கைகளுக்கு இன்றைய தினம் தீர்வு கிடைக்காதவிடத்து தொடர் பணி புறக்கணிப்பில் ஈடுபடப்போவதாக இலங்கை மின்சார சபை சேவையாளர் 24☛

## பதின்நான்காயிரம் சிறுவர்கள் பராமரிப்பு நிலையங்களில் - ஐ.நா

(கொழும்பு)

இலங்கையில் 14 ஆயிரம் சிறுவர்கள் சிறுவர் பராமரிப்பு நிலையங்களில் வாழ்ந்து வருவதாக தன்னிச்சையான தடுப்புக்கள் தொடர்பான ஐக்கிய நாடுகளின் 23☛

## சிறு அரசியல் கட்சிகளிடம் மக்கள் சிக்கியுள்ளனர் - நிமால்

(கொழும்பு)

பெரும் அரசியல் கட்சிகளை விட, சிறு அரசியல் கட்சிகள் இனங்களையும் மதங்களையும் மையப்படுத்தியே செயற்பட்டு கொள்கின்றன. இந்த இரண்டையும் 23☛

## நாட்டின் பின்னடைவை மாற்றவே முடியாதா?

சபாநாயகர் கரு ஜயசூரிய ஆதங்கம்



(கொழும்பு)

நாடு முன்னோக்கி பயணிக்க வேண்டுமானால் அதற்கு ஒரு நோக்கம் மற்றும் இலக்கு என்பன அவசியமாவதோடு, நாட்டு மற்றும் அவசியப்படுகின்றது. ஆசியாவில் 70 வருட ஜனநாயக அரசி 23☛

## 248 உள்ளூராட்சி மன்றங்களுக்கு வேட்புமனு தாக்கல் இன்று ஆரம்பம்

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான இரண்டாம் கட்ட கட்டுப்பணம் மற்றும் வேட்புமனுக்களைப் பொறுப்பேற்கும் பணி இன்று ஆரம்பமாகவுள்ளது.

248 உள்ளூராட்சி மன்றங்களுக்காக இதன்போது கட்டுப்பணமும் வேட்புமனுவும் பொறுப்பேற்கப்படும். இதன் கீழ் 17 மாநகர சபைகளுக்கும், 23 நகர சபைகளுக்கும், 208 பிரதேச சபைகளுக்குமாக இரண்டாம் கட்ட தேர்தல் பணிகள் இடம்பெறுகின்றன.

கட்டுப்பணத்தை ஏற்றுக் கொள்ளும் நடவடிக்கை நாளை மறுதினம் புதன்கிழமை நண்பகல் 12 மணியுடன் நிறைவு பெறுகிறது. வேட்புமனுக்களை பொறுப்பேற்கும் பணி எதிர்வரும் வியாழக்கிழமை நண்பகல் 12 மணியுடன் நிறைவுபெறும்.

உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கான முதலாம் கட்டப் பணியின் கீழ் கட்டுப்பணம் செலுத்துதல், வேட்புமனுக்களை பொறுப்பேற்கும பணி கடந்த வியாழக்கி 23☛

## தேர்தலை பயன்படுத்துக - ஜனாதிபதி

(கொழும்பு)

சிறந்த அரசியல் கலாசாரத்தை உருவாக்குதற்கான முதல் படியாக உள்ளூராட்சி மன்ற தேர்தலை பயன படுத்த வேண்டும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். 23☛

## மன்னாரில் படகு கவிழ்ந்து விபத்து ஒருவர் மாயம்; மற்றொருவர் மீட்பு



(மன்னார்)

மீன்பிடித்துக்கொண்டிருந்த போது படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் மன்னார் பகுதியை சேர்ந்த மீனவர் ஒருவர் கடலில் மாயமாகியுள்ளதுடன் மற்றொரு மீனவர் இராமேஸ்வரம் மீனவர்களால் மீட்கப்பட்டுள்ளார்.

இலங்கை தலைமன் 24☛

## பவித்திரமான ஒருவரை தேர்ந்தெடுக்க முடியவில்லை

ஜே.வி.பி கவலை

(கொழும்பு)

பொது மக்களின் சொத்துக்களை கொள்ளையடிக்காத மக்கள் பிரதிநிதி ஒருவரை தெரிவு செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக மக்கள் விடுதலை முன்னணி தெரிவித்துள்ளது. மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி இதனை தெரிவித்துள்ளார். (மு)



நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# தமிழக மீனவர்கள் மீது இலங்கை கடற்படை தாக்குதல்!

இந்திய எல்லையில் இலங்கை கடற்படையினர் கற்கள் மற்றும் கண்ணாடி போத்தல்களைக் கொண்டு, இந்திய மீனவர்களை தாக்கி விரட்டியடித்துள்ளதாக இந்திய செய்திகள் தெரிவிக்கின்றன.

மீன்பிடி அனுமதிச் சீட்டு பெற்று 900க்கும் குறைவான படகுகளில் சுமார் 3000க்கும் மேற்பட்ட தமிழக மீனவர்கள் நேற்று முன்தினம் மீன்பிடிக்கச் சென்றுள்ளனர்.

இவர்கள் தனுஷ்கோடிக்கும் கச்சதீவுக்கும் இடையே மீன்பிடிக்க முயன்றபோது 10இக்கும் மேற்பட்ட ரோந்து படகுகளில் வந்த இலங்கை கடற்படையினர் கண்ணாடி போத்தல்கள், கற்கள் மற்றும் இரும்பு கம்பிகளை தமிழக மீனவர்கள் மீது வீசி எறிந்து அச்சுறுத்தியுள்ளனர்.

இதனால் 100க்கும் மேற்பட்ட மீனவர்கள் இரவோடு இரவாக கரை திரும்பியுள்ளனர்.

மேலும், மீன்பிடித்து விட்டு நேற்று அதிகாலை கரைதிரும்பிய 100க்கும் மேற்பட்ட படகுகளிலிருந்த சுமார் மூன்று இலட்சம் மதிப்பிலான மீன்பிடி சாதனங்களை சேதப்படுத்தி கடலில் தூக்கி வீசியுள்ளனர்.

இதனால் மண்டபம் கோயில்வாடி பகுதியைச் சேர்ந்த அகஸ்டின் என்ற மீனவருக்கு தலையில் பலத்த காயம் ஏற்பட்டுள்ளதாகவும் தமிழக மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

**கடற்படை மறுப்பு**

தமிழக மீனவர்கள் மீது தாம் தாக்குதல் நடத்தியதாக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களை இலங்கை கடற்படையினர் நிராகரித்துள்ளனர். (மு-1)

# ஆலய விக்கிரகங்கள் காங்கேசன்துறையில் திருட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் காங்கேசன்துறை நல்லிணக்கபுரம் பகுதியில் ஆலயம் ஒன்றில் இனந்தெரியாதவர்களால் ஆலய விக்கிரகங்கள் திருடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

நல்லிணக்கபுரம் பகுதியில் உள்ள ஆலயம் ஒன்றில் காணப்பட்ட பிள்ளையார் மற்றும் முருகனின் கருங்கல்லினால் செய்யப்பட்ட விக்கிரகமே இவ்வாறு இனந்தெரியாத நபர்களினால் திருடப்பட்டுள்ளது.

இச் சிலை திருடப்பட்ட சம்பவம் தொடர்பில் நல்லிணக்கபுரம் மக்கள் காங்கேசன் துறைப்பொலிஸில் முறைப்பாடு ஒன்றை பதிவு செய்துள்ளனர். காங்கேசன்துறை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (மு-1)

# தேர்தலுக்கு முன்பாகவே 5 சபைகளை இழந்த மகிந்த!

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான கூட்டு எதிரணியின் கீழ் விண்ணப்பிக்கப்பட்ட ஐந்து உள்ளூராட்சி சபைகளுக்கான வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

மகரகம நகரசபை உட்பட ஆறு சபைகளுக்கான ஸ்ரீலங்கா பொதுஜன ஐக்கிய முன்னணியின் வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

அதனால், வேட்புமனுத் தாக்கலுக்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்டிருந்த குழுவை முனனாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ஷ கடுமையாகத் திட்டித் தீர்த்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

பதுளை, மகியங்கனை, அகலவத்த ஆகிய பிரதேச சபைகளுக்காகவும், மகரகம, பாணந்துறை, வெலிகம ஆகிய நகர சபைகளுக்காகவும் மகிந்த அணியால் தாக்கல் செய்யப்பட்ட வேட்புமனுக்கள் நேற்றுமுன்தினம் நிராகரிக்கப்பட்டன.

இதையடுத்து மாவட்டப் பொறுப்பாளர்களுக்கு அழைப்பை ஏற்படுத்திய மகிந்த ராஜபக்ஷ வேட்புமனு நிராகரிப்புக்கான காரணத்தைக் கேட்டறிந்தார். அதன் பின்னர் நாடாளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்தனவுக்கு அழைப்பை ஏற்படுத்தினார்.

சிறு சிறு தவறுகளால்தான் வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன. நீதிமன்றத்தை நாடினால் நிவாரணம் கிடைப்பதற்குரிய வாய்ப்பிருக்கின்றது என்று தினேஷ் கூறியுள்ளார்.

இதற்குப் பதிலளித்த மகிந்த, பேராசிரியர் ஜி.எல்.பீரிஸிடம் இது சம்பந்தமாகப் பேசி தேவையான நடவடிக்கையை முன்னெடுக்குமாறு ஆலோசனை வழங்கியுள்ளார். (மு-1)


## காணி விற்பனைக்குண்டு

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு எதிரே A9 வீதியிலிருந்து சுமார் 70 மீற்றர் தூரத்தில் 04 பரப்புக் காணி கிணறுடன் விற்பனைக்குண்டு.

**தொடர்புக்கு:-**

**0775210901 / 0775216663**

(சி-737)


# கூட்டமைப்பும் சட்ட நடவடிக்கை

(கொழும்பு)

கிழக்கு மாகாணம் அம்பாறை மாவட்டத்திலுள்ள சம்மாந்துறை, ஆலையடிவேம்பு ஆகிய உள்ளூராட்சி மன்றங்களுக்காக தாக்கல் செய்யப்பட்ட தமது வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டதை எதிர்த்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வழக்குத்தாக்கல் செய்யவுள்ளது.

புதிய தேர்தல் முறைமைக்கு அமைவாக சகல சட்டத் திட்டங்களுக்கும் உட்பட்ட வகையிலேயே தங்களுடைய வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டதாகவும் கையளிக்கும் போது ஏற்பட்ட சில குறைபாட்டின் காரணமாகவே தமது வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளது என்றும் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன் தெரிவித்தார்.

இதுகுறித்து மேலும் குறிப்பிட்ட அவர், இந்த விவகாரம் தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உயர்பீடத்தின் கவனத்துக்கு கொண்டுவந்துள்ளேன். வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டமைக்கு எதிராக நீதி கோரி விரைவில் நாம் வழக்குத்தாக்கல் செய்யவுள்ளோம் என்றார். (மு-1)


## கோணேஸ்வரனின் ஜேர்மன் கல்லூரி

ஜேர்மன், சுவிஸ், ஒஸ்ரியா ஆகிய நாடுகளுக்கான A1 டொச் மொழியை ஜேர்மன் தூதரகத்தினால் கேட்கும் A1 சான்றிதழுக்கு ஏற்ற வகையில் Mr.S. கோணேஸ்வரன் அவர்களால் கற்பிக்கப்படுகின்றது.

**தொடர்புகளுக்கு:-ஆரியகுளம் சந்தி**

**(புத்தர் விகாரைக்கு எதிரே)**

**1-ம் மாடி, யாழ்ப்பாணம்**

**0779707322**

(1860)

வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு

021 221 7603, 021 567 1532


# மரண அறிவித்தல்கள்

## சின்னத்தம்பி வேலாயுதபிள்ளை



வன்னியர் கோயிலடி, வயாவிளானைப் பிறப்பிடமாகவும், சேமப்புலம் வீதி, உரும்பிராய் தெற்கு, உரும்பிராயை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி வேலாயுதபிள்ளை கடந்த (16.12.2017) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி-கதிரிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான இளையதம்பி-மீனாட்சி தம்பதியரின் அன்பு மருமகனும், நாகேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற ஆறுமுகம் மற்றும் நாகம்மா, சுப்பிரமணியம், யோகம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற கேதீஸ்வரன் மற்றும் விக்கினேஸ்வரன் (சுவிஸ்), ஜெகதீஸ்வரன் (சுவிஸ்), பாமினி (ஜேர்மனி), மகேந்திரன் (ஆஸ்திரேலியா), காலஞ்சென்ற விமலேந்திரன் மற்றும் கமலேந்திரன் (காணி பயன்பாட்டு உத்தியோகத்தர் பிரதேச செயலகம் வேலணை) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், அருணன் (ஜேர்மனி), ஜெயரூபி, மஞ்சுளா (சுவிஸ்), நிதினி (சுவிஸ்), தனுஷா (ஆஸ்திரேலியா), நிசந்தா ஆகியோரின் அன்பு மாமனாரும், நிதர்சன், டிலானி, நோசிதா, மகிழினி, கிருத்திகா, ஹருணிகா, விகிர்தன், ராகவி, சங்கவி, கீர்த்திகா, டினேஷ், துபிஷா, யானுஷா, லதுஷா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.12.2017) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக உரும்பிராய் இளங்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**சேமப்புலம் வீதி,**
**உரும்பிராய் தெற்கு, உரும்பிராய்.** (1864)

**தகவல்:குடும்பத்தினர்.**
**0771999655**

## திருமதி சவுந்தலேஸ்வரி நவரத்தினராசா



அராலி தெற்கு வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சவுந்தலேஸ்வரி நவரத்தினராசா அவர்கள் 17.12.2017 ஞாயிற்றுக்கிழமை அன்று சிவபதம் அடைந்து விட்டார்.

அன்னார் க.நவரத்தினராசா (ஓய்வுபெற்ற விற்பனை முகாமையாளர்-மில்க்குவைற் நிறுவனம்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சிவசுப்பிரமணியம் (ஓய்வுபெற்ற அதிபர்)-நாகரத்தினம் தம்பதியரின் அன்பு மகளும், கனகசபை (மனேச்சர் கனகர்)-ஆதலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், யோகேஸ்வரன் அவர்களின் அன்புச் சகோதரியும், கௌரி, அமரர்களான தையல்நாயகி, கணேசமூர்த்தி மற்றும் சூரியகுமாரி, சந்திரகுமாரி ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.12.2017) திங்கட்கிழமை காலை 7.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக காலை 10.00 மணியளவில் அராலி தெற்கு பூனாவோடை இந்து மயானத்திற்கு பூதவுடல் எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**ஆலடிச் சந்தி,**
**அராலி தெற்கு, வட்டுக்கோட்டை** (1865)

**தகவல்:க.நவரத்தினராசா**
**(கணவன்) 0770883257**

# சர்வதேசத்திற்குள் புலிகள் பலமாக செயற்படுகின்றனர்

## ஐ.நா.அதிகாரிகள் மீது விமல் குற்றச்சாட்டு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பு தொடர்ந்தும் சர்வதேசத்திற்குள் பலமாக செயற்பட்டு வருகிறது எனவும் ஐக்கிய நாடுகள் அமைப்பின் பிரதிநிதிகள், விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் உறுப்பினர்களின் உரிமைகள் பற்றி தேடி அறிய வந்தபோதிலும் இலங்கைப் படையினரின் உரிமையை தேடிப்பார்க்க மறுத்துள்ளதாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச குற்றம்சாட்டியுள்ளார்.



கொட்டாவ பிரதேசத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குற்றம்சாட்டினார்.

அண்மையில் இலங்கைக்கு வந்த ஐக்கிய நாடுகளின் பிரதிநிதிகள், சிறைகளிலுள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் உறுப்பினர்களின் உரிமைகள் குறித்து தேடிப் பார்ப்பதற்காக சிறைகளுக்கு சென்றனர்.

கடற்படையின் முன்னாள் பேச்சாளர் கொமடோர் டி.கே.பி.தசநாயக்க உள்ளிட்ட தடுத்து வைக்கப்பட்டுள்ள படையினரின் உரிமைகள் குறித்து அவர்கள் தேடவில்லை. டி.கே.பி.தசநாயக்கவின் மகள் கொடுத்த மனுவையும் ஐ.நா.அதிகாரிகள் ஏற்றுக்கொள்ளவில்லை என தெரிவித்துள்ளார்.

அத்துடன் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு தொடர்ந்தும் சர்வதேசத்திற்குள் பலமாக செயற்பட்டு வருகின்றது எனவும் விமல் வீரவன்ச தெரிவித்தார். (இ-7)

## மலேஷிய பிரதமர் இலங்கையில்

(கொழும்பு)

மலேஷிய பிரதமர் நஜீப் பின் துன் அப்துல் ரஸாக் இலங்கைக்கான விஜயத்தை மேற்கொண்டு நேற்று கொழும்பை வந்தடைந்தார்.

இவரை வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் திலக் மாரப்பன தலைமையிலான குழுவினர் விமான நிலையத்தில் வரவேற்றனர்.

இவர் நாளை செவ்வாய்க் கிழமை வரையில் இலங்கையில் தங்கியிருப்பார்.

ஜனாதிபதி செயலகத்திற்கு அருகாமையில் பிரதமரை வரவேற்பதற்கான விசேட வைபவம் இன்று திங்கட்கிழமை இடம்பெறும்.

ஜனாதிபதியின் அழைப்பை ஏற்று இலங்கை வந்துள்ள மலேசிய பிரதமருடன் இருதரப்பு பேச்சுவார்த்தை நடத்தப்படவுள்ளது.



விஞ்ஞான தொழில்நுட்பம், புதிய உற்பத்திக்கான உடன்படிக்கை ஆகியன தொடர்பில் இரண்டு நாடுகளுக்கிடையில் மூன்று புரிந்துணர்வு உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்படவுள்ளன.

இந்த உடன்படிக்கையின் மூலம் பொருளாதார அபிவிருத்தி மற்றும் இராஜதந்திர பயிற்சிகளுக்கும் திட்டமிடப்பட்டுள்ளன. இரண்டு நாடுகளுக்கிடையிலான இராஜதந்திர உறவுகள் 60 வருடங்கள் நிறைவடைவதை முன்னிட்டு விசேட முத்திரை ஒன்றும் கடித உறையொன்றும் வெளியிட ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (இ-7)

## அதிபர்கள் மோசடியில் ஈடுபடுவது நிரூபிக்கப்பட்டால் பதவி நீக்கம்

### கல்வி இராஜாங்க அமைச்சர் எச்சரிக்கை

(கொழும்பு)

அண்மையில் கல்வி அமைச்சின் மூலமாக பாடசாலை நூலகங்களுக்கு புத்தகங்களைக் கொள்வனவு செய்வதற்காக, நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் இலவச சீருடைகளும் வழங்கப்பட்டன. இவற்றில் ஒரு சில அதிபர்கள் மோசடியில் ஈடுபடுவதாக எமக்கு தகவல்கள் கிடைத்துள்ளன. அவ்வாறான அதிபர்கள் இனம் காணப்பட்டால் அவர்களை பதவி நீக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என, கல்வி இராஜாங்க அமைச்சரும் மலையக மக்கள் முன்னணியின் தலைவருமான வேலுச்சாமி இராதாகிருஸ்ணன் எச்சரித்துள்ளார்.



ஒரு சில மலையக பாடசாலைகளில் இருந்து மேற்படி விடயங்கள் தொடர்பாக எனக்கு பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. இது தொடர்பாக நான் கல்வி அமைச்சின் அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளேன். அவர்கள் இது தொடர்பாக நடவடிக்கை எடுத்து வருகின்றார்கள். அது மாத்திரமன்றி கல்வி அமைச்சின் மூலமாக மிக விரைவில் சுற்று நிருபம் ஒன்றையும் பாடசாலைகளுக்கு அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அண்மையில் கல்வி அமைச்சின் ஏற்பாட்டில் பாடசாலை மாணவர்களின் வாசிப்பு திறனை அபிவிருத்தி செய்கின்ற நோக்கத்துடன் பாடசாலை வாசிகசாலைகளுக்கு புத்தகங்களை கொள்வனவு செய்வதற்காக பணம் வழங்கப்பட்டது. ஆனால் ஒரு சில அதிபர்கள் இந்த பணம் கிடைத்தவுடன் பாடசாலைகளில் நூலகங்களுக்கு பொறுப்பாக இருந்த ஆசிரியர்களை உடனடியாக நீக்கி விட்டு அந்த பதவியை தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்துள்ளதாக தெரியவருகின்றது.

இதன் மூலம் அதிபர்கள் ஏதோ ஒரு விடயத்தை திட்டமிடுவது தெளிவாக தெரிகின்றது. ஆனால், அதற்கு எந்த வகையிலும் சந்தர்ப்பம் வழங்கப்பட மாட்டாது. அதேநேரத்தில் சீருடைகள் தொடர்பாகவும் பல முறைப்பாடுகள் நுவரெலியா மாவட்டத்தில் இருந்து கிடைத்துள்ளன. அதிபர்கள் சிலர் தற்பொழுது துணி வியாபாரத்தில் ஈடுபட்டு வருவதாகவும் தகவல்கள் வந்துள்ளன.

இதனை கல்வி அமைச்சு எந்த வகையிலும் அனுமதிக்காது. அரசாங்கம் மாணவர்களின் முன்னேற்றத்தை கருத்தில் கொண்டே இவ்வாறான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது. அந்த பணத்தை பிழையான முறையில் கையாள முடியாது. பாடசாலைகளுக்கு வழங்கப்பட்ட நிதியில் அவர்கள் உரிய முறையில் புத்தகங்களை கொள்வனவு செய்து அவற்றை முறையாக பட்டியலிட்டு அதனை வாசிகசாலைக்கு பொறுப்பான ஆசிரியர்கையொப்பமிட்டு, பின் அதிபர் உறுதிப்படுத்தி கல்வி அமைச்சிற்கு அனுப்பி வைக்க வேண்டும்.

அரசாங்கம் மாணவர்களின் நலனைக் கருத்தில் கொண்டு பல்வேறு வளங்களை வழங்கி வருகின்றது. அதனை எமது பாடசாலைகளுக்கு பெற்றுக் கொடுப்பதற்கு நான் பல சிரமங்களுக்கு மத்தியில் நடவடிக்கை எடுத்து வருகின்றேன். அதனை ஒரு சில அதிபர்கள் தவறாக பயன்படுத்தினால் அவர்களை எந்த காரணம் கொண்டும் மன்னிக்க முடியாது.

இது தொடர்பாக பெற்றோர்கள், பழைய மாணவர்கள், பாடசாலை நலன் விரும்பிகள் ஆகியோரும் உரிய கவனம்செலுத்த வேண்டும். அவ்வாறான செயல்களில் ஈடுபடுகின்றவர்கள் தொடர்பாக எந்தவித தயவு தாட்சண்யமும் இன்றி நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

## தேயிலை இறக்குமதித் தடையை நீக்குமாறு ரஷ்ய ஜனாதிபதியிடம் ஜனாதிபதி மைத்திரி கோரிக்கை



(கொழும்பு)

இலங்கையின் தேயிலை இறக்குமதிக்கு விதிக்கப்பட்டுள்ள தற்காலிக தடையை நீக்குமாறு ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினிடம், இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கோரிக்கை விடுத்துள்ளார்.

இலங்கையிலிருந்து தேயிலை இறக்குமதி செய்வதற்கு ரஷ்யா தற்காலிக தடை விதித்துள்ளது.

இந்த நிலையில், குறித்த தடையை நீக்குமாறு ரஷ்ய ஜனாதிபதியிடம் தாம் கோரிக்கை விடுத்துள்ளதாக மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

ஹப்புத்தளையில் நேற்று இடம்பெற்ற நிகழ்வில் உரையாற்றியபோதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்துள்ளார். (இ-7)

## ஜனாதிபதி யாழ்.வருகிறார்

(யாழ்ப்பாணம்)

தேசிய மீலாதுன் நபி விழா, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் எதிர்வரும் 23 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். ஒஸ்மானியா கல்லூரியின் கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக் களத்தின் ஏற்பாட்டில் முதன் முறையாக யாழில் நடைபெற வுள்ள இந்த விழாவில் கலை, கலாசார நிகழ்வுகள் இடம் பெறவுள்ளதுடன் மக்கள் பிரதிநிதிகள், அதிகாரிகள் , பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-9)

## திருப்பத்தை ஏற்படுத்தினார் குல்தீப்; தவானின் மிரட்டலான சதத்தால்

# இந்தியாவுக்கு 8வது தொடர்ச்சியான ஒரு நாள் தொடர் வெற்றி

விசாகப்பட்டின ஒரு நாள். போட்டியில், குல்தீப்பின் அசத்தலான சுழலும் தவானின் மிரட்டலான துடுப்பாட்டமும் கைகொடுக்க இந்திய அணி 8 விக்கெட்டுக்களால் சுலப வெற்றி பெற்றது. இதன் மூலம் 2-1 என்ற கணக்கில் தொடரை வென்று, கிண்ணத்தை கைப்பற்றியது. இலங்கை அணி மீண்டும் ஏமாற்றம் அடைந்தது.

இந்தியாவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை அணி, அங்கு 3 போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரில் பங்கேற்றது. முதலிரண்டு போட்டிகள் முடிவில் தொடர் 1-1 என சமநிலையில் இருந்தது.

இந்நிலையில் 3ஆவதும் இறுதியுமான போட்டி நேற்று ஆந்திராவில் உள்ள விசாகப்பட்டனத்தில் நடந்தது. இதில், கட்டாய வெற்றியை எதிர்நோக்கி இரு அணிகளும் களமிறங்கின.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற இந்திய அணி பந்து வீச்சை தேர்வு செய்தது. இந்திய அணியில் உடல் நிலை சரியில்லாத தமிழகத்தின் வாஷிங்டன் சுந்தருக்குப்பதில், குல்தீப் யாதவ் வாய்ப்பு பெற்றார்.

**தரங்க அரைசதம்**

இலங்கை அணிக்கு குணதிலக (13) ஏமாற்றினார். பாண்ட்யாவின் 9 ஆவது ஓவரில் வரிசையாக 5 பவுண்டரிகள் விளாசிய தரங்க அரை சதம் கடந்தார். இரண்டாவது விக்கெட்டுக்கு 121 ஓட்டங்கள் சேர்த்தபோது, சமரவிக்ரம(42)ஆட்டமிழந்தார்.

**குல்தீப் திருப்பம்**

இந்த நேரத்தில், 28வது ஓவரில் வரமாக வந்தார் குல்தீப். 'சைனாமேன்' பந்து வீச்சாளரான இவரது 'சுழல்' பந்தில், கண் இமைக்கும் நேரத்தில் துடிப்பாக செயல் பட்ட தோனி 'ஸ்ரம்பிங்' செய்ய தரங்க (95) வெளியேறினார். அதே ஓவரில் டிக்வெலவையும் (8) வெளியேற்றி குல்தீப் இரட்டை 'அடி' கொடுத்தார். தன் பங்கிற்கு சுழற்பந்துவீச்சாளர் சகால் 'சீனியர்' மத்யூஸை (17) அருமையாக போல்டாக்கினார். அணித் தலைவர் திசர பெரேராவையும் (6) வெளியேற்றினார் சகால்.




**பரிதாப நிலை**

பாண்ட்யா பந்தில் பதிரண (7) ஆட்டமிழந்தார். அகில தனஞ்செய, லக்மல் தலா ஒரு ஓட்டத்தில் திரும்பினர். பின் வந்தவர்களும் ஏமாற்றினர். 160 ஓட்டங்களுக்கு 3 விக்கெட் என்ற வலுவான நிலையில் இருந்த இலங்கை அணி, அடுத்த 55 ஓட்டங்களை எடுப்பதற்குள் 7 விக்கெட்டை பறிகொடுத்தது. இறுதியில் இலங்கை 44.5 ஓவர்களில் 215 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. இந்தியா சார்பில் குல்தீப், சகால தலா 3 விக்கெட் வீழ்த்தினர்.

**ரோகித் 'ஷாக்**

எளிய இலக்கை விரட்டிய இந்திய அணிக்கு அணித் தலைவர் ரோகித் 7 ஓட்டங்களில் ஆட்டமிழந்து 'ஷாக்' தந்தார். பின் தவானுடன் கைகோர்த்த ஸ்ரேயாஸ் அபாரமாக விளையாடினார்.

**தவான் சதம்**

அகில தனஞ்செய பந்தை சிக்ஸருக்கு பறக்கவிட்ட ஸ்ரேயாஸ் இரண்டாவது அரை சதம் எட்டினார். மறுபுறம், இலங்கை பந்து வீச்சை தவான் விளாசினார். இவர்களின் சிறப்பான ஆட்டத்தால் வெற்றி எளிதானது. 2ஆவது விக்கெட்டுக்கு 135 ஓட்டங்கள் சேர்த்தபோது, ஸ்ரேயாஸ் (65) ஆட்டமிழந்தார். குணரத்ன பந்தை பவுண்டரிக்கு விரட்டிய தவான் ஒரு நாள் அரங்கில் 12 ஆவது சதம் எட்டினார். டினேஷ் கார்த்திக் பவுண்டரி அடித்து வெற்றியை உறுதி செய்தார்.

இந்திய அணி 32.1 ஓவரில் 2 விக்கெட்டுக்கு 219 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது. தவான்(100), டினேஷ் கார்த்திக் (26) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

ஆட்ட நாயகன் விருதை குல்தீப் வென்றார். தொடர் நாயகன் விருதை தவான் கைப்பற்றினார்.

**தொடரும் வெற்றிநடை**

கடந்த 2016ல் ஆஸி மண்ணில் நடந்த ஒரு நாள் தொடரில் இந்திய அணி 1-4 என வீழ்ந்தது. இதன்பின், சிம்பாப்வே (3-0), நியூசிலாந்து (3-2), இங்கி. (2-1), மே.தீ (3-1), இலங்கை (5-0), ஆஸி (4-1), நியூ. (2-1) அணிகளுக்கு எதிரான தொடரை கைப்பற்றியிருந்தது.

# வருணபகவான் தலையிடேல் ஆஷஸ் அவுஸ்திரேலியா வசமாகும்

அவுஸ்திரேலிய அணியின் கைக்கு எட்டும் தூரத்தில் ஆஷஸ் கிண்ணம் உள்ளது. இன்றைய இறுதி நாள் ஆட்டத்தில் மழை குறுக்கிடாத பட்சத்தில், சுலபமாக வெற்றி பெறும்.

அவுஸ்திரேலியாவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இங்கிலாந்து அணி, அங்கு 5 போட்டிகள் கொண்ட ஆஷஸ் டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது. முதலிரண்டு போட்டியில் வென்ற அவுஸ்திரேலியா 2-0 என்ற கணக்கில் தொடரில் முன்னிலை வகிக்கிறது.

இந்நிலையில் 3ஆவது டெஸ்ட் கடந்த 14ஆம் திகதி பேர்த்தில் ஆரம்பமானது. நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற இங்கிலாந்து அணி முதல் இன்னிங்ஸில் 403 ஓட்டங்கள் எடுத்தது. தொடர்ந்து முதல் இன்னிங்சுக்காக துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய அவுஸ்திரேலியா 3ஆம் நாள் ஆட்ட நேர நிறைவில், 4 விக்கெட்டுக்களை இழந்து 549 ஓட்டங்கள்எடுத்திருந்தது.

நேற்று 4ஆம் நாள் ஆட்டம் நடந்தது. அண்டர்சன் 'வேகத்தில்' மிட்சல் மார்ஷ் (181), அணித் தலைவர் ஸ்மித் (239) ஆட்டமிழந்தனர். ஸ்ரார்க் ஒரு ஓட்டம் எடுத்தார். மீண்டும் வந்த அண்டர்சன் இம்முறை கம்மின்ஸ் (41), லயனை (4) வெளியேற்றினார். அவுஸ்திரேலிய அணி முதல் இன்னிங்ஸில் 9 விக்கெட்டுக்களை இழந்து 662 ஓட்டங்கள் எடுத்து 'டிக்ளேர்' செய்தது. பெய்ன் (49) ஆட்டமிழக்காமல் இருந்தார்.

**வின்சி அரைசதம்**

பின், களமிறங்கிய இங்கிலாந்து அணிக்கு ஹேசல்வுட் தொல்லை கொடுத்தார். இவரது வேகப்பந்துவீச்சில் ஸ்டோன்மேன் (3), குக் (14) சிக்கினர். அணித் தலைவர் ரூட் 14 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். பொறுப்புடன் விளையாடிய வின்ஸ் அரைசதம் அடித்தார். இவர் ஸ்ரார்க் பந்தில் 55 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். இங்கிலாந்து அணி இரண்டாவது இன்னிங்ஸில் 4 விக்கெட்டுக்களை இழந்து 132 ஓட்டங்கள் எடுத்து, 127 ஓட்டங்களால் பின்தங்கி இருந்தபோது, மழை குறுக்கிட்டது. தொடர்ந்து மழை பெய்ததால், ஆட்டம் முன்னரே முடிவுக்கு வந்தது.

களத்தில் மலான் (28), பேர்ஸ்டோவ்(14) இருந்தனர்.

இன்றைய ஐந்தாவது மற்றும் கடைசி நாள் ஆட்டத்தில் மழை வர 90 சதவீதம் வாய்ப்புள்ளது. ஆட்டம் நடந்தால், அவுஸ்திரேலியா வெற்றி பெறலாம், இதன்மூலம் தொடரை 3-0 என வென்று கிண்ணத்தை வெல்லலாம்.

**இதுதான் அதிகம்**

அவுஸ்திரேலிய மண்ணில் நடந்த ஆஷஸ் டெஸ்ட் தொடரில் ஆஸி அணி எடுத்த அதிகபட்ச ஓட்ட எண்ணிக்கையாக (662) இது அமைந்தது. இதற்கு முன், கடந்த டிசம்பர் 1946ல் சிட்னியில் நடந்த டெஸ்டில் 659 ஓட்டங்கள் எடுத்ததே அதிகமாக இருந்தது. ஒட்டுமொத்த ஆஷஸ் டெஸ்ட் அரங்கில் அவுஸ்திரேலியா எடுத்த 5ஆவது அதிகபட்ச ஓட்ட எண்ணிக்கை இதுதான்.


சொந்த மண்ணில் முதல் இன்னிங்ஸில் தனது 3ஆவது அதிகபட்ச ஓட்ட எண்ணிக்கையை (662) பதிவு செய்தது அவுஸ்திரேலியா. ஒட்டுமொத்தமாக, சொந்த மண்ணில் அவுஸ்திரேலியாவின் 3ஆவது அதிகபட்ச ஓட்டஎண்ணிக்கை.

**இங்கிலாந்து மோசம்**

ஜனவரி 2016 முதல் தற்போது வரை டெஸ்ட் அரங்கில், எதிரணிக்கு 600 ஓட்டங்களுக்கு கூடுதலாக, அதிக முறை (4) விட்டுக்கொடுத்த அணி என்ற மோசமான சாதனை படைத்தது இங்கிலாந்து. இதே காலகட்டத்தில் இப்படி 3 முறை செய்துள்ள இலங்கை அணி இரண்டாவது இடத்தில் உள்ளது.

**ஏமாற்றிய பிரோட்**

முதல் இன்னிங்ஸில் 35 ஓவர் வீசிய இங்கிலாந்தின் பிரோட் 142 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு விக்கெட் கூட வீழ்த்தவில்லை. இதன் மூலம், டெஸ்ட் அரங்கில்தனது மோசமான பந்துவீச்சை பதிவு செய்தார். இதற்கு முன்,



தென்னாபிரிக்காவுக்கு எதிராக ஓவலில் நடந்த டெஸ்டில் 118 ஓட்டங்களுக்கு (2012, 34 ஓவர்) ஒரு விக்கெட் கூட வீழ்த்தாமல் இருந்தார்.

**3ஆவது தலைவர்**

ஸ்மித் 239 ஓட்டங்கள் எடுத்ததன் மூலம், ஆஷஸ் தொடரில் ஒரே இன்னிங்ஸில் அதிக ஓட்டங்கள் எடுத்த 3ஆவது அவுஸ்திரேலிய அணித் தலைவர் ஆனார். முதலிரண்டு இடங்களில் முறையே பொப் சிம்ப்சன் (311 ஓட்., மான்செஸ்டர், 1964), பிரட்மன் (270 ஓட்., மெல்போர்ன், 1937) உள்ளனர்.

**சொதப்பும் குக்**

இங்கிலாந்து வீரர் குக் கடந்த ஓகஸ்டில் மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிராக பேர்மிங்காமில் நடந்த டெஸ்டில் 243 ஓட் எடுத்தார். இதன்பின், விளையாடிய 10 இன்னிங்ஸில் ஒரு அரை சதம கூட அடிக்கவில்லை. அதிகபட்சமாக, ஆஷஸ் தொடரின் 2ஆவது டெஸ்டின் முதல் இன்னிங்சில்37 ஓட் எடுத்திருந்தார.

## தகுதியான..

மேலும் எந்தக் கட்சி என்பது முக்கியமல்ல, ஊழலற்ற உயர்ந்த குணமுடைய ஒருவரைத் தேர்ந்தெடுங்கள் என நேற்றுக் காலை யாழ்.பத்திரிகையாளர் சங்க விஜயத்தின்போது, கேட்கப்பட்ட கேள்விகளுக்கு பதிலளிக்கையில் அவர் கருத்து வெளியிட்டுள்ளார்.

இதன்போது வடக்கு முதல்வரிடம் வினவப்பட்டவையும் அவர் அதற்கு அளித்த பதில்களின் தொகுப்பும் வருமாறு,

தமிழ் இளைஞர்கள் எழுச்சி கொண்டு பாரிய மக்கள் இயக்கமாக அரசுக்கு காண்பிக்கவேண்டிய தருணம் நெருங்கிவிட்டது.

கட்சி ரீதியான உட்பூசல்களை வெறுக்கும் எமது மக்கள், உள்ளூராட்சிதேர்தலில உங்கள் பிரதேசத்தை உள் அன்புடன் நேசிக்கும் ஒருவரை தேர்ந்தெடுங்கள் எனவும் தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

வடமாகாண முதலமைச்சருக்கு (எனக்கு) பாதிப்பு வந்தபோது தன்னார்வமாக தன்னியக்கமாக திமர் எழுச்சி கொண்டு இளைஞர்கள் எழுச்சி கொண்டமை ஒரு விடயத்தை மிக தெளிவாக காட்டியது.

அது என்னவென்றால் கட்சிரீதியான உட்பூசல்களை மக்கள் குறிப்பாக இளைஞர்கள் வெறுக்கிறார்கள் என்பதே. மேலும் தெளிவாக சொன்னால் கட்சிகள் மக்கள் சேவையிலும் பார்க்க தமது கட்டுக்கோப்பின் கரிசனையில் அதிக நாட்டம் காட்டுகிறார்கள். நாம்காணுமயதார்த்தம், கட்டுக்கோப்பு என்னும்போது கட்சிகளின் தலைமைத்துவத்தின் ஆதிக்கம் அங்கு நிலவுகிறது.

கட்சி தலைமைத்துவம் நினைப்பதை உறுப்பினர்கள் கேள்விக்குட்படுத்தினால் உறுப்பினர்பாடு அதோகதிதான். அடுத்த தேர்தலுக்கு துண்டு தரப்படாது. ஒரு சில கட்சிகளே ஜனநாயக செயற்பாட்டைத் தமது கட்சியை நடத்துவதில் கடைப்பிடிக்கின்றார்கள்.

ஆகவே அன்று எனக்காக திரண்ட இளைஞர் சமூகத்திற்கு நான் கூற விரும்புவது, உங்கள் எழுச்சியால் எப்படி முதலமைச்சரை இதுவரை நிலைத்து நிற்க வைத்தீர்களோ அதே எழுச்சியுடன் பாரிய மக்கள் இயக்கமாக நீங்கள் பரிணமித்து அரசுக்கு காண்பிக்க வேண்டியதருணம்நெருங்கி விட்டது.

நாங்கள் எதிர்பார்க்கும் எங்கள் நீண்ட நாள் பிரச்சினைகளுக்கு நிரந்தரமான தீர்வு கிட்டப்போவதில்லை என்பது என்னுடைய கணிப்பாக இருக்கின்றது. ஆகவே இளைஞர்கள் தருணம் பார்த்து காத்திருங்கள். உங்கள் தகைமைகள் வெளிப்படப் போகும் காலம் வெகு தூரத்தில் இல்லை என தெரிவித்தார்.

உள்ளூராட்சி தேர்தல் தொடர்பில் கருத்து தெரிவிக்கையில்,

தமிழ் தேசிய கூட்டமைப்பின் 2013ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்ட மாகாண சபை தேர்தல் விஞ்ஞாபனத்தின்படி உள்ளூராட்சி சபை தேர்தலில் போட்டியிடுவதே சிறந்தது.

உள்ளூராட்சி சபைகள் எமது அதிகாரத்தின் கீழ் உள்ளன. நாம் எதைக் கூறி மக்களின் ஏகோபித்த ஆதரவை பெற்றோமோ அவற்றின் அடிப்படையில் தேர்தலில் போட்டியிடுபவர்கள், தெரிபட்டு வருவதுதான் சிறந்தது. அப்போதுதான் எமக்குள் ஐக்கியம் இருக்கும்.

தமக்குள் என்னதான் போட்டி போட்டாலும் போட்டி போடும் கட்சிகள் இணைந்து உருவாக்கியதுதான் 2013 ஆம் ஆண்டு மாகாண சபை தேர்தல் விஞ்ஞாபனம் என்பதை யாரும் மறந்து விடக்கூடாது. மேலும் கூட்டமைப்பின் பங்காளி கட்சிகள் இணைந்தே அந்த தேர்தல் விஞ்ஞானபத்தை உருவாக்கி மக்களுக்கு கொடுத்தார்கள்.


அதில் தமிழர் தாயகம், வடகிழக்கு இணைப்பு, உள்ளக சுயநிர்ணயம், சமஷ்டி போன்றவை அதில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

அவற்றுடன் சேர்ந்து முக்கியமாக தேர்தல் விஞ்ஞானத்தில் ஊழலற்ற ஆட்சி மற்றும் நிர்வாகத்திறன், உறுப்பினர்களின் தற்கால தேவைக்கேற்ப தகைமைகள் மேலதிகமாக சில விடயங்களும் சேர்க்கப்பட வேண்டும்.

இன்று உள்ளூராட்சி சபை தேர்தலில் அவர்கள் தமக்குள் போட்டி போட்டு

*(23ஆம் பக்கம் பார்க்க)*

# ஞானசாரரின் கோரிக்கை நீதிமன்றால் நிராகரிப்பு



(கொழும்பு)

பொதுபலசேனா அமைப்பின் பொதுச் செயலர் கலகொட அத்தே ஞானசார தேரருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கை எதிர்வரும் மார்ச் 23ஆம் திகதிக்கு கொழும்பு தலைமை நீதிமன்ற மேலதிக நீதவான் புத்திக சிறிராகல ஒத்திவைத்தார்.

பொலிஸாரின் கடமைக்கு இடையூறு விளைவித்தார் என்ற குற்றச்சாட்டில் தண்டனைச் சட்டக்கோவையின் 140, 183, 186, 347ஆம் பிரிவுகளின் கீழ் ஞானசார தேரருக்கு எதிராக ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்களைத் தடுக்கும் பிரிவினரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்த வழக்குத் தொடர்பில் பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்த அவர், கடந்த ஜூன் மாதம் 21ஆம் திகதியன்று தனது சட்டத்தரணி திரந்த வலலியத்தவினூடாக கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் சரணடைந்திருந்தார்.

அன்றைய தினம், ஒரு இலட்சம் ரூபா ரொக்கப் பிணையிலும் 2 இலட்சம் பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகளிலும் விடுவிக்கப்பட்டிருந்தார்.

இந்த வழக்கு நேற்று முன்தினம் எடுத்துக் கொள்ளப்பட்டபோது, சட்டமா அதிபரின் ஆலோசனை தமக்குக் கிடைக்கப் பெறவில்லை என்று ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்களைத் தடுக்கும் பிரிவினரால் நீதவானின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டதையடுத்தே மேற்குறிப்பிட்ட தினம் அறிவிக்கப்பட்டது.

மேலும், வெளிநாடு செல்வதற்காக அனுமதி கோரிய ஞானசாரரின் கோரிக்கையும் நீதவானால் நிராகரிக்கப்பட்டது. (இ-7)

45000/= ரூபாவுடன்
உங்கள் வீட்டின் பாதுகாப்பை உறுதி செய்யுங்கள்!
CCTV கமரா
உங்களது வீடுகள் வியாபார நிலையங்களுக்கு தரமான
CCTV கமரா தொகுதியினை மிகக்குறைந்த விலையில்
உத்தரவாதத்துடன் பொருத்தி தருகிறோம்.
கமரா+இணைப்புபொருள்+பொருத்துதல் கட்டணம்= 45000/=
GUNA BEST PC
லப்டொப் கணினிகள் சிசிரிவி கமரா
திருத்தம் விற்றல் வாங்குதல் பொருத்துதல் 0764164171
522 மானிப்பாய் வீதி ஓட்டுமடம் யாழ்ப்பாணம். Mob. 0779086737

# பெற்றோல் தயாரிக்கும் திட்டத்தினால் அரசாங்கத்திற்கு 25கோடி ரூபா நட்டம்

(கொழும்பு)

பிளாஸ்ரிக் கழிவுகளைக் கொண்டு பெற்றோல் தயாரிக்கும் திட்டத்தினால் அரசாங்கத்திற்கு சுமார் 25 கோடி ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது.

இலங்கை பெற்றோலிய வள அபிவிருத்தி அமைச்சினால் இந்தத் திட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இந்த திட்டத்திற்காக அமைச்சு, திறைசேரியிலிருந்து 25 கோடி ரூபாவினை பெற்றுக் கொண்டிருந்தது.

எனினும், இந்த பணம் விரயமாக்கப்பட்டுள்ளதாக கணக்காய்வு தகவல்களின் மூலம் தெரிய வந்துள்ளது.

இதேவேளை, கழிவுப் பொருட்களைக் கொண்டு உற்பத்தி செய்யப்படும் எரிபொருள் ஒரு லீற்றருக்கான உற்பத்தி செலவு 350 ரூபாவினை விடவும் அதிகம் என்றபோதிலும் அதனை 40 ரூபாவிற்கே விற்பனை செய்ய முடியும் என தெரிவிக்கப்படுகிறது. (இ-7)

# 5 இலட்சம் வாக்காளர்களுக்கு அடையாள அட்டை இல்லை

(கொழும்பு)

தேசிய அடையாள அட்டை இல்லாமல் 5 இலட்சம் பேர் இலங்கையில் இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில் 3 இலட்சம் பேர் பதிவு செய்யப்பட்ட வாக்காளர்கள் எனவும் பிறப்புச் சான்றிதழ் உள்ளிட்ட தேவையான தகவல்கள் இன்மையே அடையாள அட்டை இல்லாமைக்கான காரணம் என ஆட்பதிவு திணைக்களம் தெரிவித்துள்ளது.

எனினும் பிறப்புச் சான்றிதழ் இல்லாதவர்கள் ஏனைய தேவையான ஆவணங்களை சமர்ப்பித்து அடையாள அட்டையைப் பெறும் வேலைத் திட்டம் ஒன்று ஏற்பாடாகி வருவதாகவும் ஆட்பதிவு திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இது தொடர்பில் சகல மாவட்ட செயலாளர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதாகவும், பிறப்புச் சான்றிதழ் இல்லாதவர்கள் தமக்கு நெருங்கிய உறவு அல்லது பிரதேசவாசிகள் மூவருடன் உறுதிப்படுத்துவது அவசியம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த திட்டமானது எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு முன்பு வாக்காளர்கள் தேசிய அடையாள அட்டையினைப் பெறுவதற்கான தற்காலிக வேலைத்திட்டம் என்றும் ஆட்பதிவு திணைக்களம் தெரிவித்துள்ளது. (இ-7)


# 31ஆம் நாள் நினைவஞ்சலி

திதி: பூர்வபக்கம்

தோற்றம்
1943
-
-
21



மறைவு
2017
-
11
-
18

## வெற்றியர் திருநாமம் (CTB)

மறப்பதற்கு உங்களை மனதில் வைக்கவில்லை
இழப்பதற்கு உங்களை இதயத்தில் வைக்கவில்லை
உயிராய் வைத்திருக்கின்றோம் தந்தையே உங்களை
நாங்கள் இறக்கும்வரை உங்கள் பாசம், அரவணைப்பு
உங்கள் வழிகாட்டல்கள் என்றும் மறவோம்

இதனை ஓர் தனிப்பட்ட அழைப்பாக கருதி நடைபெறும் ஆத்ம சாந்திக் கிரியையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

"மிதுனாலயா"
கொற்றாவத்தை,
வல்வெட்டித்துறை.

(C-732)

பிள்ளைகள்
தி.திருஞானசேகரன்(ஆசிரியர்)
திருமதி. யோகராணி உதயகுமார்.


# இராசி பலன்

18.12.2017
(மார்கழி 03, திங்கட்கிழமை)
சூரிய உதயம் காலை 6.23 மணிக்கு
அமாவாசை பிற்பகல் 12.21 மணிவரை
கேட்டை காலை 7.56 மணிவரை
சுபநேரம் 12.23-1.53 மணி வரை
இராகுகாலம் 7.53-9.23 மணிவரை

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | கிரகநிலை சந்திராஷ்டமம் ரோகினி காலை 7.48 மணிக்கு தனு-சந் | | ராகு |
| கேது | | | |
| சூரி, சந் | புத, சனி, சுக் | குரு, செவ் | |

**மேஷம்:** தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், மற்றவர்கள் மத்தியில் உங்களின் மதிப்பும் மரியாதையும் உயரும், தூரதேசச் செய்திகள் வந்து சேரலாம்.

**இடபம்:** வீட்டை அழகாக வைத்திருப்பதில் அக்கறை காட்டுவீர்கள், பெரிய மனிதர்களின் ஒத்துழைப்புகள் கிடைக்கும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**மிதுனம்:** குடும்பத்தினரிடையே சிறுசிறு கருத்து முரண்பாடுகள் தோன்றி மறையும், உடல் நலன் பற்றிய கவலைகள் ஏற்படலாம், பணப் பற்றாக்குறையுண்டு.

**கடகம்:** நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர், வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, விருந்தினர் வருகையுண்டு.

**கும்பம்:** எடுத்த காரியத்தை எளிதில் முடிக்கும் நாள், செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும் நாள், கௌரவமான நாள்.

**சிம்மம்:** பல நாட்களாக செய்ய நினைத்த வேலையொன்றை இன்று செய்து முடிப்பீர்கள், பொல்லாதவர்கள் உங்களை விட்டு விலகுவர், தொழில் விருத்தியுண்டு.

**மகரம்:** குடும்ப ஒற்றுமைக்கு பெரியவர்களின் ஆலோசனைகளைக் கேட்டு நடப்பது நல்லது, தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், சயனசுகக் குறைவான நாள்.

**கன்னி:** அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், பூர்வீகச் சொத்துக்களால் ஆதாயமுண்டு, பிள்ளைகளின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

**தனுசு:** விருப்பங்கள் நிறைவேற விநாயகரை வழிபட வேண்டிய நாள், சவால்களை சாமர்த்தியமாகச் சமாளிப்பீர்கள், உடல் நலனில் கவனம் தேவை. போசனசுகமுண்டு.

**விருச்சிகம்:** வருங்கால நலன்கருதி சேமிக்க முற்படுவீர்கள், நண்பர்களின் ஒத்துழைப்பால் நலம் காண்பீர்கள், தொழில் வளர்ச்சி கூடும், விருந்துகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**துலாம்:** நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறும் நாள், நல்லவர்களின் தொடர்புகள் அதிகரிக்கும், உடன் பிறப்புகள் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும்.

**கன்னி:** கடன்சுமை குறையும் நாள், இல்லத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும், கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம், பயணங்கள் கைகூடும்.



மருதனார்மடம் ஸ்ரீசுந்தர ஆஞ்சநேயர் ஆலயத் தேர்த்திருவிழா நேற்று ஞாயிற்றுக் கிழமை காலை இடம் பெற்றபோது... (படங்கள்:- ஐ.சிவசாந்தன்)

# தொழிற்பயிற்சி கற்கைநெறிகள்

(யாழ்ப்பாணம்)

இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையானது யாழ். மாவட்டத்தில் தற்கால வேலை வாய்ப்பினை மையமாக கொண்டு முழுநேர மற்றும் பகுதி நேர தொழிற்பயிற்சி கற்கை நெறிகளை நடத்தி வருகின்றது. தெல்லிப்பழை தொழிற்பயிற்சி நிலையத்தில் பின்வரும் கற்கைநெறிகள் முற்றிலும் இலவசமாக 02.01.2018 இல் ஆரம்பிக்கவுள்ளன. இக் கற்கை நெறிகளாவன, மரவேலை தொழில் நுட்பவியலாளர், சிறுவர் மற்றும் பெண்களிற்கான ஆடை வடிமைப்பாளர், கட்டட நிர்மாண உதவியாளர், விவசாய இயந்திர உபகரணங்கள் திருத்துநர் ஆகும். இக்கற்கை நெறிகள் அனைத்தும் தேசிய தொழில் தகைமை (NVQ) சான்றிதழுக்கானபயிற்சிகளாகும்.

இக்கற்கைநெறிகளை கற்க விரும்புவர்கள் தங்கள் பதிவுகளை அலுவலக நேரத்தில் மாவட்ட அலுவலகம், நான்காம் மாடி, வீரசிங்கம் மண்டபம், இல.12, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம் (021 222 7949) எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் மேற்கொள்ளுமாறுஇலங்கைதொழிற்பயிற்சிஅதிகார சபையின்யாழ். உதவிப்பணிப்பாளர் கு. நிரஞ்சன் அறிவித்துள்ளார். (இ)

# சமாதான நீத்வானாக சத்தியப்பிரமாணம்

(யாழ்ப்பாணம்)



கிளிநொச்சி மாவட்ட செயலக உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தரும் தேசாபிமானிய, தேசபந்து, சாமஸ்ரீ தேசகீர்த்தி போன்ற விருதுகளைப் பெற்றுக்கொண்டவரும் யாழ்.பல்கலைக்கழகத்தில் முகாமைத்துவப்பட்டப் படிப்பை மேற்கொண்டவரும் யாழ்.சென் ஜோசப் மகா வித்தியாலயம், யாழ். சென் பற்றிக்ஸ் கல்லூரியின் பழைய மாணவருமான யாழ் பாசையூர் சென் செபஸ்ரியன் வீதியைச்சேர்ந்த மரியதாஸ் ரிறோன், யாழ்.மேல் நீதிமன்றநீதிபதி மாணிக்க வாசகர் இளஞ்செழியன் முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதவானாக அண்மையில் சத்தியப் பிரமாணம்செய்து கொண்டார்.(இ-7)



இராணுவத்தினரின் ஏற்பாட்டில் மாகாண உணவுத் திருவிழா கடந்த 15 ஆம் திகதி யாழ்.முற்றவெளி பகுதியில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. வடமாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரே பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு இந்த நிகழ்வை ஆரம்பித்து வைத்தார். இந்த உணவு திருவிழாவில் ஒன்பது மாகாணங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் முகமாக உணவுவகைகள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. இலங்கையின் அனைத்து பிரதேசங்களிலும் பிரசித்தி பெற்ற சுவை மிக்க உணவுகளை யாழ்.நகரில் ஒன்றாக சுவைக்க யாழ்ப்பாணம் சுவை உதயம் என்னும் பெயரில் இவ் உணவு கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. மூன்று நாட்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த நிகழ்வின ஆரம்ப நாள் நிகழ்வில் சிறப்பு விருந்தினராக யாழ்மாவட்ட கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல்தர்சன ஹெட்டியாராட்சி, 51ஆவது படைப்பிரிவின் கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் மேர்வின் பெரேரா மற்றும் படை உயர் அதிகாரிகள், மதகுருமார்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# வாகன இலக்கத் தகடுகள்

(யாழ்ப்பாணம்)

மோட்டார் போக்குவரத்து திணைக்கள தலைமை அலுவலகத்திலிருந்து 2017.12.14 ஆம் திகதி கிடைக்கப்பெற்ற வாகன இல்க்கத்தகடுகளின் பட்டியல் யாழ். மாவட்டத்திலுள்ள அனைத்து பிரதேச செயலகங்களிலும் மாவட்ட செயலகத்திலுள்ள மாவட்ட மோட்டார் வாகன போக்குவரத்து அலுவலகத்திலும் பொது மக்களின் பார்வைக்காக அறிவிப்பு பலகையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. மேலும் மாவட்டச் செயலக இணையத்தளத்திலும் பார்வையிடலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

AAA-4715, AAA-6450,AAB-2541, AAB-6944, AAF-7201,AAG-1600,AAH-3292, AAI-7384,AAJ-8115,AAL-4615,AAM-8387,AAR-9167,AAS-0131,AAS-6753,AAX-9676,AAY-7683,ABE-6003,ABF-4075,ABI-4555, ABQ-5681, ABQ-5939, ABQ-5960, ABQ-5962, ABQ-6215, ABQ-6234, ABQ-6467,ABQ-6586,ABQ-6659,ABQ-6732, ABQ-6743, ABQ-6990, ABQ-7217, ABQ-7248, ABQ-7259,ABQ-7278, ABQ-7395

ABQ-7403, ABQ-7574, ABQ-7598,ABR-1549,ABR-2008,ABR-2626,ABR-5775,ABR-8527,ABT-0810, BAG-2169,BAI-7079,BAM-9846,BAS-9678,BAX-3973,BAX-9584,BBF-8842,BBH-2266,BCG-9450,BCH-9190,BCJ-2321,BCL-2098,BCW-6935,BCX-0170,BDC-2749,BDI-2310,BEJ-6766,BES-9959,BET-6758,BFE-6139,CAD-9811,CAF-7232,CAJ-5173,CAM-3481,CAR-7635,CAY-0010.

DAA-0651,DAA-7111,DAA-9189,DAB-8549,DAE-4992, DAF-0735, GD-0113,GD-0865,GE-4805,GF-8755,GG-6556, GH-2753,GI-0882,GI-9088,GJ-4787, GJ-5298,GK-1652,GK-3739,GN-7648,GO-2562,GQ-2157, GQ-4527, GS-7108, GV-0035, GV-2404,GV-2601, GX-5752, GY-8999, HA-6358, HB-4688,HE-1034,HE-8351, HF-0204, HF-8648, HG-2676, HH-6945

HK-5954,,HK-9932,HM-2264,HL-7195,HO-6941,HP-3123, HQ-7415, HR-3196,HS-3100,HT-2508,HV-1860, HW-5798,HW-7136,HX-1974, JB-7235, JC-3241,JD-9067, JE-1076, JF-1379, JG-0819, JI-2280, JI-9316, JJ-2970,JJ-8417,JL-2910,JL-7274,JM-5425,JP-1140,JR-2547,JT-2447,JT-5100,JU-5104,JU-7171,JU-8557,JW-1456,JX-2457

JY-5650,JZ-0693,KA-5455,KB-1242,KB-6120,KD-7284, KD-7347,KF-8303,KG-9146, KH-3768,KH-4184,KI-4329,KI-9994,KJ-0359,KK-1798,KL-5842,KM-7546, KN-4525, KO-0154,KO-6674,KQ-0475,KU-1665,KV-8532, KW-3228, KY-9875, LC-0790, LI-3386,LI-4889,LL-4374, MC-8630,MD-7607,MD-7905,MF-4681,MF-7464,MG-6638,MH-0028,MH-0353,MJ-5021,ML-4542,MP-4483, MS-3215,MU-5756,MV-2401,NA-8722, NB-0248,NC-2651,PA-0838, PA-2683, PA-7333,PB-3087,PB-6705,PC-6976, PD-0443, PD-1238, PD-7585, PD-7855, PE-6465, PG-0870,PG-0958, PG-4386, PG-4849, PH-0469, PH-0527, PH-0559, PP-0586, PP-6828, PP-9873, PU-7094, PV-2886,PV-8436,QA-6169, QA-6998.

QA-9503, QB-1276,QB-2730,QB-2888,QB-3545, QB-4550, QB-9799, QC-2814, QC-3900, QC-4677, QC-8348,QD-0314, QD-8279, QD-8444, QE-0350,QE-6369, QE-7961,QF-0638, QF-0736, QF-5188, QF-6878, QG-2906, QG-5928,QG-8358,QH-0483, QH-6911,QH-8543,QI-0474,QI-3061,QI-3219,QI-3426,QI-5691,QI-5898,QI-7476,QJ-0410,QK-8556

QR-7552,QU-7138,QX-5963,RA-1997,SG-0041,TP-5151,TS-7973, UG-7152, UH-8030, UJ-6172,UR-0389, UT-6015,UW-2907,UW-3591,UY-7694,VA-2211,VA-9850,VB-2698,VD-0723,VD-4722,VF-8505, VM-7870, VP-1808,VQ-0614,VQ-4385,VR-7037,VW-9384, VX-9903,VZ-7216,VZ-8966, WA-3112, WC-2422,WD-7085, WG-3611, WG-5575, WH-8159, WQ-2927, WX-2260, WY-5477,WZ-4293,XB-0630,XC-2527,XO-9880,YA-2957,YB-3214,YD-0298,YD-1838,YD-5974,YG-8165,YI-6617,YN-0732,YN-1349,YN-5430,YR-3079,YR-3150,YR-6773,YR-6979,ZA-5674,YV-1924. (இ)

# நத்தார் வருடப்பிறப்பை முன்னிட்டு இரவு நேரக் கட்டுப்பாடு தளர்த்தல்

(யாழ்ப்பாணம்)

நத்தார்மற்றும்புதுவருடப் பிறப்பினை முன்னிட்டு 19.12.2017 முதல் 31.12.2017 வரையான காலப்பகுதியில் இரவு நேரக் கட்டுப்பாடு தளர்த்தப்பட்டுள்ளது. 24.12.2017 மற்றும் 31.12.2017ஆகிய ஞாயிற்றுக்கிழமைகளில் தொழில் நிலையம் திறந்து வேலை செய்யலாம். 25.12.2017 திங்கட்கிழமை நத்தார் பண்டிகையினைமுன்னிட்டுவிடுமுறை தினமாகும். 01.01.2018 முதல் வழமையான நேரக் கட்டுப்பாடு அமுல்படுத்தப்படும் என்பதையும் அறியத்தருகின்றோம் என யாழ். மாவட்ட சிகை ஒப்பனையாளர் கூட்டுறவுச்சங்க ஒன்றியத் தலைவர் அறிவித்துள்ளார். (இ)

ABI அபி பஷன் வேல்ட் இன்
Fashion World
நத்தார், புதுவருட
விசேட விலைக்கழிவுகள்



நத்தார், புதுவருடத்தை
முன்னிட்டு வாங்கும் அனைத்து
விதமான ஆடைகளுக்கும்

30% விசேட விலைக்கழிவுகள்
இச்சலுகை
31.12.2017 வரை மட்டும்

021 222 3738
abifashionworld
(C-720)

112, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
(சத்திரச்சந்திக்கும் பிரதம தபாலகத்திற்கும் இடையில்)
பாடசாலை மாணவர்களுக்கான சீருடை விநியோகமும் நடைபெறுகின்றது.

# நல்லிணக்கம் இல்லாத அமெரிக்கா இலங்கைக்கு நல்லிணக்கத்தை கற்பிக்க முயற்சிக்கின்றதாம்

## அமைச்சர் நிமால் விசனம்



(கொழும்பு)

அமெரிக்கா, இங்கிலாந்து உட்பட மேற்குலக நாடுகள் இலங்கைக்கு நல்லிணக்கத்தை கற்பிக்க முயற்சித்த போதிலும் அந்நாடுகளில் நல்லிணக்கம் இல்லை என அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

பதுளையிலுள்ள ஹோட்டல் ஒன்றில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

உலக அரசியலை எடுத்துக்கொண்டால், அமெரிக்கா, இங்கிலாந்து என அனைத்து நாடுகளும் எமக்கு நல்லிணக்கத்தை கற்றுக்கொடுக்க வருகின்றன.

அவர்களின் எண்ணக் கருவை எமது தலைக்குள் இடுகின்றனர்.

எனினும் அமெரிக்காவின் ஜனாதிபதி ட்ரம்பின் எண்ணக்கருவில் நல்லிணக்கம் இல்லை. அது உக்கிரமான இனவாதம்.

மேற்குலக நாடுகள் உலகத்திற்கு திறந்து விடப்படவில்லை. நாமே அனைத்தையும் திறந்து வருகின்றோம்.

நல்லிணக்கத்தை ஏற்படுத்துமாறு எம்மிடம் கூறினாலும் அந்நாடுகளில் நல்லிணக்கம் என்பது கிடையாது. எமக்கு வெளிநாடுகளின் ஆலோசனைகள் தேவையில்லை.

நாம் நமது நாட்டுக்கே உரிய தீர்வை பெற்றுக்கொள்ள வேண்டும் எனவும் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா மேலும் தெரிவித்தார். (இ-7)

யாரிடம் பேசுவது?
யார் என்னைப் புரிந்து கொள்வார்?
நான் வாழ்ந்து என்ன பிரயோசனம்?
நான் என்ன தவறு செய்தேன்?
என்னால் எதுவுமே முடியவில்லை ....
என்பன போன்ற எண்ணங்களா?
எம்முடன் பேசுங்கள்.
கை கொடுக்கும் நண்பர்கள்
104, 4 ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்
*மதசார்பற்றது *ரகசியமானது * இலவச சேவை
021 222 8117, 077 900 8776
வவுனியாவில்: (024) 324 4444
(சனி, ஞாயிறு காலை 9.00 - 1.00)

English வகுப்புக்கள்
குழுவாக (யாழ்ப்பாணத்தை அண்டிய பகுதியில்) தரம் 6,7,8,9,10,11 மற்றும் பாடசாலை முடித்துள்ளோர்கள், வேலை செய்வோர் போன்றவர்களுக்கும் spoken English வருகை தந்து கற்பிக்கப்படும்.
தொடர்புகளுக்கு:- 077 601 4996
(1829)

இலங்கை தொலைத் தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு

கம்பி (கேபள்) மற்றும்
செய்மதி தொலைக்காட்சி சேவைகளை வழங்குகின்றவர்கள்
தொடர்பாக மேற்கொள்ளப்படும் அறிவித்தல்

1996 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 1991 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க இலங்கை தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் சட்டத்தின் 17 ஆம் பிரிவின் பிரகாரம், இலங்கை தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் சிபாரிசின் பேரில் அமைச்சரினால் வெளியிடப்பட்ட அனுமதிப்பத்திரம் இன்றி, யாரேனும் ஒருவர், இலங்கையினுள் தொலைத் தொடர்புகள் முறைமையொன்றை செயற்படுத்தக் கூடாது என இத்தால் அறிவிப்புச் செய்யப்படுகின்றது.

செல்லுபடியாகும் அனுமதிப்பத்திரமொன்று இல்லாமல் கம்பி (கேபள்) மற்றும் செய்மதி தொலைக்காட்சி சேவையொன்றை நடாத்திச் செல்லல் இலங்கை தொலைத் தொடர்புகள் சட்டத்தின் கீழ் தண்டனைக்குரிய குற்றமொன்றாகும்.

செல்லுபடியாகும் அனுமதிப் பத்திரமொன்று இல்லாமல் கம்பி (கேபள்) மற்றும் செய்மதி தொலைக்காட்சி சேவைகளை நடாத்திச் செல்பவர்களை ஆய்வு செய்வதற்கு இலங்கை தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது என இத்தால் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மின் அஞ்சல் : dgtsl@trc.gov.lk
இணையதளம் : www.trc.gov.lk
தொலைபேசி : 0112689345
பெக்ஸ் : 011-2689341

பணிப்பாளர் நாயகம்
இலங்கை தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு
இல. 276, எல்விடிகல மாவத்தை,
கொழும்பு - 08

கல்யாணமாலை
சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1977 இந்து<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி<br>கி.பா: 20<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்:A/L/வியாபாரம்<br>தொ.இ: B/8075 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: மூலம்<br>கி.பா: 36 செவ் 12 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: BSc/தனியார் தொழில்<br>தொ.இ: G/7372 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கி.பா: 54செவ் 4 இல்<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்A/L/வங்கியாளர் (அரச)<br>தொ.இ: B/8076 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>செவ் 4 இல்<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்: BBA/அரசதொழில்<br>தொ.இ: G/7377 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: பூரம் செவ் 8 இல்<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்:BBM/அரசதொழில் நியூசிலாந்து<br>தொ.இ: B/8077 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா: 23 செவ் 8 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: MBBS/DEMO<br>தொ.இ: G/7382 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்:BSc, MSc/ பொறியியலாளர் சிங்கப்பூர்<br>தொ.இ: B/8078 | பிறப்பு: 1976 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கி.பா: 30<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: A/L<br>தொ.இ: G/7385 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

## பரந்தன் இரசாயனக்குளம் புனரமைக்கப்படாமையால்

# ஆயிரத்து 800ஏக்கர் பயிர்ச்செய்கை நிலத்திற்கு நீர்ப்பாசனம் செய்வதில் சிரமம்

(கண்டாவளை)

கிளிநொச்சி பரந்தன் இரசாயனக்குளம் உரிய முறையில் புனரமைக்கப்படாத நிலையில் இதற்குட்பட்ட சுமார் ஆயிரத்து 800 ஏக்கர் வரையான நிலப்பரப்பில் பயிர்ச்செய்கை மேற்கொண்டுள்ள விவசாயிகள் நீர்ப்பாசனம் செய்வதில் பாரிய சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.



கிளிநொச்சி பரந்தன் பகுதியில் அமைந்துள்ள இரசாயனக்குளம் கடந்த 2010ம் ஆண்டுக்குப் பின்னர் இரண்டு தடவை புனரமைக்கப்பட்டபோதும், குளத்திலிருந்து நீரை விவசாய நிலங்களுக்கு விடுவதற்குரிய துருசு வேலைகள் செய்யப்படாத நிலையில் மேற்படி துருசு சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றது.

இதேவேளை இக்குளத்தில் காணப்பட்ட மற்றுமொரு நீர் விநியோகம் மேற்கொள்ளும் துருசு முற்றாக அகற்றப்பட்டுள்ளது.

இக் குளத்தின் கீழ் உள்ள நீர் விநியோக வாய்க்கால்களும் புனரமைக்கப்படாது அரைகுறையாக விடப்பட்டுள்ளது.

இவ்வாறு குளத்தின் பணிகள் அரைகுறையாக விடப்பட்டபோதும், குளத்தில் போதிய நீர் காணப்படுகின்ற நிலையில் பரந்தன் நகரக் கமக்கார அமைப்பிற்குட்பட்ட ஆயிரத்து 200 ஏக்கர் நிலப்பரப்பிற்கும் உமையாளர்புரம் கமக்கார அமைப்பிற்குட்பட்ட 600 ஏக்கர் நிலப்பரப்பிற்கும் நீர் விநியோகம் செய்ய முடியாத நிலையில் காணப்படுகின்றது.

ஏற்கனவே பல தடவைகள் இக்குளத்தின் நீர் விநியோக வாய்க்கால்களை புனரமைத்துத் தருமாறு பல தடவைகள் கோரிக்கை விடுத்த போதும், இதுவரை எந்த விதமான நடவடிக்கைகளும் எடுக்கவில்லை எனவும் தெரிவித்துள்ள விவசாயிகள் தற்போது குளத்தில் உள்ள நீரை நீர் இறைக்கும் இயந்திரக் குழாய்கள் மூலம் குளத்தில் இருந்து வெளியேற்றி அதன் மூலம் விவசாய நிலங்களுக்கு நீர் விநியோகம் மேற்கொண்டு வருகின்றனர். (2-315)




# 23,363 மாணவர்களுக்கு காலணிக் கொடுப்பனவுகள்

(பரந்தன்)

கிளிநொச்சி கல்வி வலயத்தில் அதி கஷ்டம், கஷ்டப் பிரதேசங்களை சேர்ந்த மாணவர்களுக்கு அரசின் காலணிகளுக்கான கொடுப்பனவு வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த 23ஆயிரத்து 363 மாணவர்களுக்கும் 1200,1300,1400,1500 ரூபா பெறுமதியில் காலணிகளுக்கான கொடுப்பனவுகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளதாக கிளிநொச்சி வலயக் கல்வித் திணைக்களம் தெரிவித்துள்ளது. (2-312)

# பயன்பாடின்றி சேதமடைந்த குழாய்க்கிணறு திருத்தம்

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாங்குளம் பகுதியில் கடந்த பத்து வருடங்களிற்கு மேலாக பயன்பாடின்றி சேதமடைந்த நிலையில் காணப்பட்ட குழாய்க் கிணறு திருத்தியமைக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாங்குளம் சந்திப் பகுதியில் பொது மக்களின் தேவை கருதி இப் பகுதியில் அமைக்கப்பட்ட குழாய்க்கிணறு சேதமடைந்து பயன்பாடற்ற நிலையில் கடந்த பத்து வருடங்களிற்கு மேலாக காணப்பட்டது.

இந் நிலையில் இதனைப் புனரமைத்துத் தருமாறு இப் பகுதி மக்கள் விடுத்த கோரிக்கையையடுத்து குறித்த குழாய்க்கிணறு புதுக்குடியிருப்பு பிரதேச சபையினால் புனரமைக்கப்பட்டுள்ளது. (2-315)

# கசிப்பு உற்பத்தி நிலையம் சுற்றிவளைப்பு; உபகரணங்களுடன் கசிப்பு கைப்பற்று

(மல்லாவி)

தருமபுரம் பொலிஸ் நிலையப் பிரிவில் உள்ள கல்மடு சம்புக்குளம் காட்டுப் பகுதியில் சட்ட விரோதமான முறையில் இயங்கி வந்த கசிப்பு உற்பத்தி நிலையத்தை சுற்றிவளைத்து நிர்மூலமாக்கிய பின்னர் ஏழு போத்தல் கசிப்பைக் கைப்பற்றியுள்ளதுடன், கசிப்புக் காய்ச்சுவதற்குப் பயன்படுத்திய உபகரணங்களையும் கைப்பற்றிய நிலையில் சம்பவ இடத்தில் வைத்து பெண் ஒருவர் உட்பட இரண்டு சந்தேக நபர்களைக் கைது செய்துள்ளதாக கிளிநொச்சி/ முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கான பிரதிப்பொலிஸ்மா அதிபரின் அலுவலகத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று முன்தினம் முற்பகல் 10.30, மணியளவில் நடைபெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

கிளிநொச்சி/ முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கான பிரதிப் பொலிஸ்மா அதிபர் மகேஷ் வெலிகன்னவின் விசேட உத்தரவுக்கு அமைய தருமபுரம் பொலிஸ் நிலையப் பிரிவில் கிளிநொச்சி/ முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கான போதைப் பொருள் தடுப்பு மற்றும் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்தும் படைப்பிரிவின் பொலிஸ் அணியினருக்கு கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலையடுத்து, தருமபுரம் பொலிஸ் நிலையப் பிரிவில் உள்ள கல்மடு சம்புக்குளம் காட்டுப் பகுதியில் சட்டவிரோதமான முறையில் இயங்கி வந்த கசிப்பு உற்பத்தி நிலையம் ஒன்றை சுற்றி வளைத்து பெண் ஒருவர் உட்பட 02 சந்தேக நபர்களைக் கைது செய்துள்ளதுடன் 07 போத்தல் கசிப்பையும், கசிப்புக் காய்ச்சுவதற்குப் பயன்படுத்திய உபகரணங்களையும் கைப்பற்றிய பின்னர் கசிப்பு உற்பத்தி நிலையத்தையும் நிர்மூலமாக்கியுள்ளனர்.

இவ்வாறு கைப்பற்றப்பட்டுள்ள தடயப்பொருட்களையும் கைதான சந்தேக நபர்களையும் தருமபுரம் பொலிஸ் நிலையத்தில் மேலதிக விசாரணைகளுக்காகவும் அதன் பின்னரான நீதிமன்ற நடவடிக்கைகளுக்குமாக ஒப்படைத்துள்ளதாக கிளிநொச்சி/முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கான பிரதிப் பொலிஸ்மா அதிபரின் அலுவலகத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-15)

## ஏற்று நீர்ப்பாசனத்திட்டம் செயலிழப்பு

# பயிர்ச்செய்கையில் ஆர்வம் காட்டாமையே காரணமாகும்

## அதிகாரிகள் தெரிவிப்பு

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாந்தை கிழக்கு பாண்டியன்குளம் பகுதியில் விவசாயத்தை மேம்படுத்தும் வகையில் பல மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டு மக்கள் பாவனைக்காக கையளிக்கப்பட்ட ஏற்று நீர்ப்பாசனத் திட்டம் செயலிழந்து காணப்படுகின்றது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் பாரிய நீர்ப்பாசனக் குளங்களில் ஒன்றான வவுனிக்குளத்தின் ஒன்றான குடியேற்றத்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட போது, துணுக்காய் மற்றும் மாந்தை கிழக்குப் பிரதேச செயலர் பிரிவுகளில் குடியிருப்புக்காணிகளில் உபஉணவுச் செய்கைகளை ஊக்குவிக்கும் வகையில் ஏற்றுநீர்ப்பாசனத்திட்டங்கள் அமைக்கப்பட்டு அதன் மூலம் நீர் விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளது.

கடந்த 1990ம் ஆண்டுகளுக்கு பின்னர் ஏற்பட்ட யுத்தம் காரணமாக இதன் கட்டுமானங்கள் செயலிழந்து பயிர்ச்செய்கை நிலங்கள் பலவும் கைவிடப்பட்டன.

கடந்த 2009ம் ஆண்டு மக்கள் மீள்குடியேறியதையடுத்து பல மில்லியன் ரூபா செலவில் ஏற்று நீர்ப்பாசனத் திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்பட்டன.

இதில் பாண்டியன்குளம், செல்வபுரம் ஆகிய பகுதிகளிலேயே புனரமைக்கப்பட்ட ஏற்று நீர்ப்பாசனத் திட்டம் தற்போது செயலிழந்து காணப்படுகின்றது.

இவ்வாறு பல மில்லியன் ரூபா செலவில் இதன் கட்டுமானப்பணிகளை முன்னெடுத்து அவற்றின் மூலம் உரிய நீர் விநியோகத்தை மேற்கொள்ளக்கூடிய போதும், பயிர்ச்செய்கைகளில் மக்கள் ஆர்வம் காட்டாமை இவ்வாறு செயலிழந்தமைக்கு காரணமென சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (2-315)

# விவசாயிகளின் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள்

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்ட கமக்கார அமைப்புக்களும் மாவட்ட கமக்கார அதிகாரசபையும் இணைந்து விவசாயிகளின் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை வழங்கி வைத்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்ட கமக்கார அமைப்புக்களும் மாவட்ட கமக்கார அதிகார சபையும் இணைந்து மாவட்டத்திலுள்ள [illegible] மக்கோட்டின் கீழ் வாழ்கின்ற விவசாயிகளின் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை வருடாந்தம் வழங்கி வருகின்றன.

அந்த வகையில் இம்முறை குறித்த மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. கிளிநொச்சி கமநலசேவை நிலையத்தின் கீழ் ஆயிரத்து 349 மாணவர்களுக்கு இவ்வாறு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. (2-315)

## கற்றல் உபகரணங்கள், உலருணவு பொருட்கள் வழங்கல்



(பனிக்கன்குளம்)

வவுனியா தமிழ் விருட்சம் அமைப்பின் தலைவர் எஸ்.சந்திரகுமாரினால் லண்டனில் புலம்பெயர்ந்து வாழும் உறவான ரஜந்தி ஞானப்பிரகாசம் தனது பிறந்த தினத்தை முன்னிட்டு அண்மையில் வவுனியா தமிழ் விருட்சம் அமைப்பினூடாக திவ்யபாமா உதவும் கரங்களினால் வசதியற்ற மாணவர்கள் 20பேருக்கு கற்றல் உபகரணங்கள் மற்றும் உயர்தரத்தில் கல்வி கற்கும் வறுமைக்கோட்டின் கீழ் வாழுகின்ற மாணவி ஒருவருக்கு துவிச்சக்கரவண்டி, காணாமற்போன உறவுகளின் 5 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொருட்கள் என்பன வழங்கி வைக்கப்பட்டன. (2-281)

## 23 மில்லியன் ரூபா செலவில்

# ஆசிரிய மத்திய நிலையம் அக்கராயனில் அமைப்பு

(கண்டாவளை)

கிளிநொச்சி கல்வி வலயத்தின் கீழ் உள்ள அக்கராயன் பிரதேசத்தில் 23.78 மில்லியன் ரூபா செலவில் ஆசிரிய மத்திய நிலையம் அமைக்கப்பட்டு வருகின்றது.

கிளிநொச்சி கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் கற்பித்தல் செயற்பாடுகளில் முன்னெடுக்கின்ற ஆசிரியரின் திறன் விருத்தியை மேம்படுத்தும் வகையில் அக்கராயன் பிரதேசத்தில் குறித்த ஆசிரியர் மத்திய நிலையம் அமைக்கப்பட்டு வருகின்றது.

இதேவேளை மேற்படி நிதியொதுக்கீட்டின் கீழ் 18 மில்லியன் ரூபா செலவில் இரண்டு வகுப்பறைக் கட்டடத் தொகுதிகளின் திருத்த வேலைகளும் 8.73 மில்லியன் ரூபா செலவில் அதிபர் விடுதி அமைத்தல் போன்ற வேலைத் திட்டங்களுமாக சுமார் 50.51 மில்லியன் ரூபா செலவில் அபிவிருத்தி வேலைகள் மேற்படி நிதியொதுக்கீட்டின் கீழ் முன்னெடுக்கப்பட்டு வருகின்றதாக கிளிநொச்சி வலயக் கல்வித் திணைக்களத்தின் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-315)

# முல்லைத்தீவில் தொடரும் மர்மக் காய்ச்சல் தொடர்பில் தடுப்பு ஏற்பாடுகள் அவசியம்

## சுகாதார அமைச்சருக்கு டக்ளஸ் எம்.பி. அவசர கடிதம்

முல்லைத்தீவு நகரப் பகுதியில் பரவி வருகின்ற ஒருவகை காய்ச்சல் நோய் காரணமாக கடந்த மூன்று வாரக் காலப்பகுதியில் 9 பேர் உயிரிழந்துள்ள நிலையில். இது தொடர்பில் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்ற ஆய்வுகள் குறித்து உடனடி நடவடிக்கைகளையும். மேலும் இந் நோய் பரவாமல் தடுப்பதற்குரிய நடவடிக்கைகளையும் உடன் எடுக்குமாறு நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா சுகாதார, போசாக்கு மற்றும் தேசிய மருத்துவ அமைச்சர் ராஜித சேனாரட்னவுக்கு அவசர கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளார்.

மேற்படி விடயம் தொடர்பில் அக் கடிதத்தில் அவர் தெரிவித்துள்ள விடயங்கள் வருமாறு. வடக்கில் டெங்கு நோயாளர்களது அதிகரிப்பு தொடர்பிலும், மலேரியா நோய் பரப்புகின்ற நுளம்புகளின் பெருக்கம் தொடர்பிலும் நான் ஏற்கனவே சுகாதார அமைச்சின் அவதானத்திற்குக் கொண்டு வந்துள்ள நிலையில், தற்போது மேற்படி மர்மக் காய்ச்சல் முல்லைத்தீவு மாவட்டத்தில் 9 உயிர்களை பலியெடுத்துள்ளதாகத் தெரிய வருகின்றது. சுமார் மூன்று காலப் பகுதிக்குள் 9 பேர் உயிரிழந்தமையானது மிகவும் பாரதூரமான நிலைமையாகவே காணப்படுகின்றது. எனவே, இவ்விடயம் தொடர்பில் உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது.



உள்ளூராட்சி சபைகளின் மக்கள் பிரதிநிதிகளின் செயற்பாடுகள் இன்மையும், மாகாண சபையின் வினைத்திறன் இன்மையும் காரணமாக வடக்கு மாகாணத்தில் பல்வேறு நோய்கள் பரவுகின்ற நிலைமையினையே காணக்கூடியதாக இருக்கின்ற சூழலில், வடக்கின் சுகாதார நிலைமை குறித்து மத்திய அரசும் அதிக அவதானமெடுக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

அந்த வகையில், இவ் விடயம் தொடர்பில் உடனடி அவதானமெடுத்து, மேற்படி நோயின் காரணம் கண்டறியப்படவும், இந்நோய் மேலும் பரவாமல் தடுப்பதற்கும், நோய்க்கான மருந்து வகைகள் பற்றாக்குறை அல்லது தேவைகள் இருப்பின் அவற்றை விரைந்து வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்குமாறு டக்ளஸ் தேவானந்தா அக்கடிதத்தில் சுகாதார அமைச்சரைக் கோரியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2)




# வீதியால் சென்றவர் மீது மோதித்தள்ளியது வாகனம்

## குடும்பஸ்தர் உயிரிழப்பு

(குருமன்காடு)

வவுனியா இரட்டை பெரிய குளம் பொலிஸ் நிலையப் பிரிவில் ஏ-09 வீதியில் இரட்டை பெரியகுளம் பொலிஸ் நிலையத்திற்கு அண்மையாக வீதியில் நடந்து சென்ற குடும்பஸ்தர்மீது வான் ஒன்று மோதிய விபத்துச் சம்பவத்தில் நடந்து சென்றவர் படுகாயமடைந்த நிலையில் மீட்கப்பட்டு வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை வழங்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்துள்ளதாக வவுனியா பொலிஸ் நிலையத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று ஞாயிற்றுக்கிழமை அதி காலை 12.15 மணியளவில் நடைபெற்று வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு சிகிச்சை வழங்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி அவர் அதிகாலை 3.05 மணிக்கு உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது, கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு பயணித்த யாழ்ப்பாணம் கல்வியியற் கல்லூரிக்கு சொந்தமான வாகனமே இரட்டை பெரிய குளம் பொலிஸ் நிலையத்திற்கு அண்மையாக நடந்து சென்றவர் மீது மோதுண்டு விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்துச் சம்பவத்தில் சிகிச்சை பலனின்றி மாமைலங்குளம். மடுக்கந்தை.வவுனியா என்ற இடத்தைச் சேர்ந்த உக்குபண்டாரகே கேவிலால் (வயது - 43) என்ற குடும்பஸ்தரே பரிதாபகரமாக உயிரிழந்தவராவார்.

இச் சம்பவம் தொடர்பில் இரட்டை பெரிய குளம் பொலிஸார் சம்பவ இடத்திற்கு விரைந்து விசாரணைகளை முன்னெடுத்துடன் விபத்துக்குள்ளான வாகனத்தை மீட்டு பொலிஸ் நிலையத்திற்கு எடுத்துச் சென்றதுடன். விபத்தினை ஏற்படுத்திய சாரதியையும் கைது செய்து மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இந்நிலையில், இன்று திங்கட்கிழமை கைதான சாரதியை வவுனியா மாவட்ட நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளதாகவும் வவுனியா பொலிஸ் நிலையத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-250-15)

# எங்களின் கோரிக்கையை எவரும் செவிமடுக்கவில்லை உறவுகள் தொடர்பில் எந்தவித பதிலையும் வழங்கவில்லை

## 300 ஆவது நாளை கடந்தும் கண்ணீருடன் தெருவில்



(கண்டாவளை)

300 நாட்களாக எங்களை தெருவில் இருந்து நோய்களிலும் துன்பத்திலும் கண்ணீர் வடிக்கவிட்டு நீங்கள் சந்தோசமாக வாழ்வது தான் நல்லாட்சியா? என காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய முன்றலில் காணாமல் ஆக்கப்பட்ட உறவினர்களால் முன்னெடுக்கப்பட்டு வரும் தொடர் கவனயீர்ப்புப் போராட்டம் நேற்று முன்தினம் 300 ஆவது நாளாகவும் எதுவித தீர்வுகளும் இன்றி முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

நத்தார் பண்டிகையும் புத்தாண்டும் நெருங்கும் நிலையில் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் இலங்கை அரசாங்கம் எந்த வித பதிலையும் வழங்காது காலத்தை இழுத்தடித்து வருகின்றது.

இது தொடர்பாக காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள் கருத்துத் தெரிவிக்கும் போது. நாங்கள் எங்கள் பிள்ளைகளை. எங்கள் உறவுகளை இராணுவத்திடம் ஒப்படைத்தும் அவர்கள் சரணடைந்தும் எட்டு வருடங்களாகிவிட்டன.

அராஜக ஆட்சியில் எங்களுக்கு எந்த பதிலும் கிடைக்கவில்லை. நல்லாட்சியை ஏற்படுத்திய அரசாங்கம் தனது நூறு நாள் வேலைத்திட்டத்தில் எங்களது உறவுகள் தொடர்பான பிரச்சினைக்குரிய பதிலை வழங்குவதாகவும் தெரிவித்த நிலையில் நாங்களும் இணைந்து தான் நல்லாட்சியை ஆதரித்தோம்.

ஆனால் எங்களுக்கான வாக்குறுதிகள் எதனையும் இந்த அரசாங்கம் இதுவரை நிறைவேற்றவில்லை.

நேற்று முன் தினத்துடன் 300 வது நாட்களாக நாங்கள் வீதியில் கண்ணீருடன் துன்பத்திலும் நோயிலும் இருந்து கொண்டிருக்கின்றோம்.

எங்களுடன் போராட்டத்தில் இணைந்திருந்த உறவுகள் ஏழு பேர் உயிரிழந்துள்ளனர். எங்களது கோரிக்கையை யாரும் செவி சாய்த்து எங்கள் உறவுகள் தொடர்பில் எந்தப் பதிலையும் இதுவரை வழங்கவில்லை. கடந்த சித்திரைப் புத்தாண்டு. தீபாவளி எல்லாம் தெருவில் தான். நேற்று முன்தினத்துடன் 300 நாட்கள் தெருவில் இருக்கும் எங்களுக்கு மீட்பரான இயேசு பாலகன் பிறப்பில் என்றாலும் பதில் கிடைக்காதா?

இந்த நல்லாட்சி அரசாங்கம் நல்ல பதிலை தர வேண்டும் என்று நாங்கள் மன்றாட்டமாக கேட்கின்றோம். எங்களை தெருவில் இருந்து கண்ணீர் வடிக்க விட்டு நாங்கள் சந்தோசமாக இருப்பது தான் நல்லாட்சியா? என்றும் கேள்வியெழுப்பியுள்ளனர். (2-315)

# சிரமதானப்பணி மூலம் வீதி செப்பனிடப்பட்டது

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்துக்குட்பட்ட பனிக்கன்குளம் பாடசாலை வீதி 30 வருடங்களுக்கு மேலாக புனரமைப்பு செய்யப்பட்டாது காணப்பட்டது.

பாரிய குழியாக காணப்பட்ட குறித்த வீதி அண்மையில் மாங்குளம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஆலோசனைக்கமைய பொலிஸ் அதிகாரிகளின் பங்குபற்றலுடன் கிராம மக்கள், இளைஞர்கள் இணைந்து வீதியிலிருந்த பாரிய குழிகளுக்கு மண்ணிட்டு நிரவி வீதியை சிரமதானப் பணி மூலம் செப்பனிட்டுள்ளனர்.

அத்தோடு மக்களின் கோரிக்கைக்கமைவாக பிரதேச சபையினால் வீதி இயந்திரம் மூலம் இரண்டு தினங்களுக்குள் தற்காலிக புனரமைப்பு பணி செய்வதாக உறுதியளிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-281)

# மரக்கொப்புகளை வெட்டுவதற்கு நடவடிக்கை எடுங்கள்



(கிளிநொச்சி)

கிளிநொச்சி மகா வித்தியாலயத்திற்கு முன்பாகவும் வில்சன் வீதியிலுள்ள நீர்ப்பாசன விடுதி முன்பாகவும் எந்த வேளையிலும் முறிந்து விழும் நிலையில் பழமை வாய்ந்த மரமொன்று பட்டுப்போன கொப்புகளுடன் காணப்படுவதாக பொது மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த மரம் எந்தவேளையிலும் முறிந்து விழும் நிலையிலுள்ளதால் பாடசாலை மாணவர்களும் இவ் வீதியைப் பயன்படுத்துவோரும் பாதிப்பை எதிர்கொள்ள வேண்டிய நிலைமையே காணப்படுகிறது. எனவே உரிய அதிகாரிகள். கரைச்சி பிரதேச சபையினர் ஆகியோர் பாதிப்புக்கள் ஏற்படுவதற்கு முன்னதாக மரத்தை வெட்டி அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டுமென பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள் ஆகியோர் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (2-254)

# புதையல் தோண்டிய சந்தேகத்தின் பேரில் மூவர் கைது;மண்ணகழ்வு இயந்திரம் கைப்பற்று

(மல்லாவி)



புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையப் பிரிவில் உள்ள விசுவமடு மேற்கு அதிசய விநாயகர் ஆலயத்திற்கு அருகில் உள்ள வீட்டுக் காணியில் புதையல் தோண்டினார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் 3 பேர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், புதையல் தோண்டுவதற்குப் பயன்படுத்தப்பட்ட மண் அகழ்வு இயந்திரத்தையும் கைப்பற்றியுள்ளதாக புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 4 மணியளவில் நடைபெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது.

புதுக்குடியிருப்பு பொலிஸ் பொறுப்பதிகாரியின் உத்தரவுக்கமைய விசேட ஊர் சுற்றுக் காவல் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் விசுவமடு மேற்கு அதிசய விநாயகர் ஆலயத்திற்கு அருகே உள்ள வீட்டு வளவுக் காணியில் அதிகாலை நேரத்தில் சந்தேகத்திற்கிடமான வகையில் மண் அகழ்வு இயந்திரத்தின் உதவியுடன் நிலத்தை தோண்டிக் கொண்டிருந்த குழு ஒன்றை விசாரணை செய்யும் முகமாக அவ்விடத்திற்கு பொலிஸார் சென்ற போது. மண் அகழ்வு இயந்திரத்தின் சாரதி பொலிஸாரைக் கண்டதும் தப்பி ஓடியுள்ளார்.

இதனையடுத்து. சம்பவ இடத்தில் நின்றவர்களை விசாரணை செய்த போது முரண்பாடான பதில்களை வழங்கியுள்ளார்கள்.

இந்நிலையில். அவ்விடத்தில் புதையல் தோண்டியிருக்கலாம் அல்லது விடுதலைப் புலிகளால் புதைக்கப்பட்ட பணம் அல்லது தங்க நகைகளை தேடி மணணைத் தோண்டி இருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரில் மூன்று பேரைக் கைது செய்துள்ளதுடன். மண் அகழ்வு இயந்திரத்தையும் கைப்பற்றியுள்ளனர்.

இதன்போது கைதான சந்தேக நபர்களை புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகள் முன்னெடுத்து வருவத்ாகவும் விசாரணைகளின் பின்னர் தடயப் பொருட்களுடன் சந்தேக நபர்களை இன்று திங்கட்கிழமை முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் நிலையத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-15-281-315)

# சனிப்பெயர்ச்சிப் பலன்கள்

## 19.12.2017-28.03.2020

## அர்த்தாஷ்டம சனி விலகியது! அனைத்து யோகமும் வருகின்றது இனி!



### எதையும் அலசி ஆராய்ந்த பிறகே களத்தில் இறங்கும் மகர இராசி நேயர்களே!

முடியாத காரியத்தைக் கூட முடித்துக் கொடுக்கும் வல்லமை பெற்ற உங்களுக்கு இதுவரை லாப ஸ்தானத்தில் சஞ்சரித்து வந்த சனிபகவான் இப்பொழுது விரய ஸ்தானத்தில் சஞ்சரிக்கப் போகின்றார். இப்பொழுது ஏழரைச் சனி ஆரம்பமாகிவிட்டது. ஏழரைச் சனி என்றவுடனேயே நீங்கள் பயப்பட வேண்டியதில்லை. உங்கள் இராசிநாதனாகவும், தனாதிபதியாகவும் விளங்குபவர் சனி பகவான். எனவே அவரை விரும்பி வழிபடுகின்ற பொழுது திரும்பிய பக்கமெல்லாம் தினந்தோறும் நல்ல செய்தி வந்து கொண்டே இருக்கும்.

உங்கள் இராசியைப் பொறுத்தவரை இராசிநாதனாக விளங்குபவர் சனி பகவான். அவர் விரய ஸ்தானத்தில் சஞ்சரித்தாலும் கூட தனாதிபதியாகவும் விளங்குபவர் என்பதால் பணத்தைக் கொடுத்தே விரயத்தையும் கொடுப்பர்.

அப்படிப்பட்ட சிறப்பு வாய்ந்த சனி பகவானை ஒவ்வொரு சனிக்கிழமையும் போற்றிக் கொண்டாடி வழிபட வேண்டும். சனி பகவானை வாரந் தோறும் வழிபட்டு வரலாம். சிறப்பு ஸ்தலங்களாக விளங்கும் மதுரை; தேனி அருகிலுள்ள குச்சானூர் சென்றும் வழிபட்டு வரலாம். திருவாரூர் மாவட்டம் திருக்கொள்ளிக் காட்டிலுள்ள அக்னீஸ்வரரையும் வழிபட்டு வரலாம். திருநள்ளாறு, பெரிச்சிக் கோவில் வன்னிமரத்தடி சனீஸ்வரரையும் சென்று வழிபட்டு வரலாம். சனிக்கிழமை தோறும் காகத்திற்கு எள் கலந்த சோறு வைத்து திருப்தியடையச் செய்யலாம்.

உங்கள் சுய ஜாதகத்தில் சனி சஞ்சரிக்கும் நிலையறிந்து, அதன் பாதசாரபலமறிந்து, பரிகாரங்களையும் செய்து கொள்வது நல்லது. மேலும் சனிப்பெயர்ச்சி காலத்தில் உங்கள் இராசியிலேயே கேதுவும், சப்தம ஸ்தானத்தில் ராகுவும் வீற்றிருப்பது சர்ப்ப தோஷத்தை உருவாக்குகின்றார். எனவே, ஏற்ற இறக்கமான நிலை மாறவும், எடுத்த காரியங்களில் தடை ஏற்படாதிருக்கவும் கொடுத்த வாக்கைக் காப்பாற்றவும், தனவரவில் இருந்த சிக்கல்கள் அகலவும் யோகபலம் பெற்ற நாளில் சர்ப்ப சாந்திப் பரிகாரங்களைச் செய்து கொள்வது நல்லது.

யன்னிரெண்டாம் வீட்டில்
பகலவன் மைந்தன் நின்றால்
எண்ணில்லா மாற்றம் சேரும்
ஏமாற்றம் நட்பால் சேரும்!
புண்ணியம் வந்து சேர
புகழ் மிகு வாழ்வும் காண
எந்நாளும் சனியின் முன்னால்
எள்தீபம் ஏற்றுவீரே!

என்று ஜோதிட சாஸ்திரம் சொல்கின்றது. எனவே, விரயச் சனியின் ஆதிக்கத்தில் வீண் விரயங்கள் ஏற்படாமல் சுபவிரயம் ஏற்பட விழிப்புணர்ச்சி உங்களுக்குத் தேவை.

### தொடங்கிவிட்டது ஏழரை! துணிந்து செயற்பட்டால் சாதனை!

மிகப்பெரிய கிரகமாக சொல்லப்படும் சனி பகவான் இப்பொழுது 12ஆம் இடத்தில் சஞ்சரித்து 2, 6, 9 ஆகிய இடங்களைப் பார்க்கிறது. விரயாதிபதியைப் பார்க்கும் அந்த இடங்களின் ஆதிபத்யங்கள் எல்லாம் விரயங்கள் ஏற்படும் என்பது நியதி. எனவே குடும்பச்செலவுகள் கூடுதலாக இருக்கும். குடும்ப உறுப்பினர்களை திருப்திப் படுத்த இயலாது.

அவர்களுக்கு என்னதான் நீங்கள் செய்தாலும் அவர்கள் திருப்தியடையவும் மாட்டார்கள். நன்றிகாட்டவும் மாட்டார்கள். இருந்தாலும் நீங்கள் இரக்க குணமுடையவர் என்பதால் செய்ய வேண்டிய கடமைகளைச் செய்து கொண்டே இருப்பீர்கள். பொதுவாக 12இல் வாசம் செய்யும் சனி இடமாற்றம், ஊர் மாற்றம், வாகன மாற்றம், உத்தியோக மாற்றம், இலாகா மாற்றம் போன்றவைகளை ஏற்படுத்தலாம். அவற்றை ஏற்றுக்கொள்வதா, வேண்டாமா என்று சிந்திப்பீர்கள். உங்கள் சுய ஜாதகத்தின் பலமறிந்து முடிவெடுத்துக் கொள்வது நல்லது.

உத்தியோகத்தில் இருப்பவர்களில் ஒருசிலருக்கு வெளிநாட்டு யோகம் எண்ணியபடி வந்து சேரும். பொங்கு சனியின் ஆதிக்கத்தில் இருப்பவர்கள் புகழ் ஏணியின் உச்சிக்கு செல்வர். பொருளாதாரத்தில் மேம்பாடு காண்பர். அசையா சொத்துகள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவர். கட்டிய வீட்டைப் பழுது பார்க்கும் யோகம் ஒருசிலருக்கு ஏற்படும்.

பெயர்ச்சியாகும் சனி ஏழரைச் சனியின் தொடக்கமாக அமையப் போவதால் அந்தச் சனியை வரவேற்க நீங்கள், பெயர்ச்சியாகும் நேரத்திலேயே ஆலயத்தை நோக்கி அடியெடுத்து வைப்பது நல்லது. அல்லது அன்றைய தினம் எந்த நேரத்திலாவது உள்ளூரில் இருக்கும் ஆலயத்திற்கு சென்று சனி பகவானை வழிபட்டு வருவது நல்லது.

நவக்கிரகங்கள் நம் இராசியை நாடி வரும் பொழுது, அவற்றைப் போற்றிக் கொண்டாடினால் நன்மைகளை வாரி வழங்கு வார். சனி மட்டுமல்ல, எந்த கிரகம் நம் இராசிக்கு வந்தாலும் வரும் கிரகத்தை வழிபட்டால் வளர்ச்சியின் உச்சத்திற்கு செல்ல இயலும். வரும்கிரகம் நமக்கு நன்மைகளை வழங்க அதை எந்த ஆலயத்திற்கு, எந்த நாளில் சென்று வழிபட்டால் எளிதில் வரம் கிடைக்கும் என்பதையும் நீங்கள் அறிந்து கொண்டு நன்மைகளை அதிகம் பெறலாம்.

ஏழரைச்சனியில் விரயச்சனியின் ஆதிக்கத்தில் பிறந்திருப்பவர்கள் சக்கரத்தாழ்வார் வழிபாட்டை மேற்கொள்வது நல்லது. மதுரை ஒத்தக்கடை அருகிலுள்ள திருமோகூர் சக்கரத்தாழ்வார் வழிபாடு மற்றும் அதற்கு அருகிலுள்ள லட்சுமி நரசிம்மர் திருக்கோவில் வழிபாடு, காரைக்குடி அருகிலுள்ள அரியக்குடி திருவேங்கடமுடையான் லட்சுமி வழிபாடு போன்றவற்றை செய்து வந்தால் தடைகள் எல்லாம் தானாக விலகிவிடும்.

### சனியின் பார்வை பலன்கள்!

உங்கள் இராசிக்கு அதிபதியாகவும், தனாதிபதியாகவும், விளங்கும் சனி பகவான் 12ஆம் இடத்திலிருந்து கொண்டு, 2, 6, 9 ஆகிய இடங்களைப் பார்க்கின்றார். எனவே, கொடுக்கல்- வாங்கல்களில் ஒன்றில் வரும் இலாபம் மற்றொன்றில் விரயமாகலாம். வருமானப் பற்றாக்குறை அகலும் என்றாலும் மனநிம்மதி இருக்காது. கூட்டாளிகளை நம்பிச் செயற்படும் பொழுது. கொஞ்சம் விழிப்புணர்ச்சியோடு இருப்பது நல்லது. வீட்டு பராமரிப்பு செலவு கூடும்.

ஆறாமிடத்தைச் சனி பார்ப்பதால் உத்தியோகம் மற்றும் ஜீவனஸ்தானம் பலம் பெறுகிறது. எனவே, அலுவலகப் பணிகளில் இருந்த தடைகள் அகலும். உத்தியோகத்தில் நீண்ட நாட்களாக எதிர்பார்த்து காத்திருந்த உயர் பதவிகள் தேடி வரலாம். பிள்ளைகளின் வேலை வாய்ப்புக் கருதி எடுத்த முயற்சிகளிலும் வெற்றி கிடைக்கும். எதிரிகளின் தொல்லை குறையும். உடன் பணிபுரிபவர்கள் பகையை மறந்து உங்களுக்கு ஒத்துழைப்பு செய்ய முன்வருவர்.

சனியின் பார்வை 9ஆம் இடத்தில் பதிவதால் தந்தை வழி உறவில் இருந்த விரிசல்கள் அகலும். முன்னோர் சொத்துகளில் முறையான பங்குகள் கிடைக்கும். கிடைத்த பங்கீடுகளை அண்ணன், தம்பிகளிடம் ஒப்படைத்து விட்டு அதற்குரிய தொகையைப் பெற்றுக் கொண்டு புதிய சொத்துக்கள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். புனிதப்பயணம் மேற்கொள்வீர்கள். தூரதேசப் பயணங்கள்கூட இலாபம் தருவதாக அமையும். இல்லத்தில் மங்கல ஓசையும், மழலையின் ஓசையும் கேட்பதற்கான அறிகுறிகள் தென்படும்.

### குதூகலம் தரும் குருப்பெயர்ச்சிக் காலம்!

4.10.2018இல் விருச்சிக இராசியில் குரு சஞ்சரிக்கப் போகின்றார். அதன்பிறகு 28.10.2019இல் தனுசு இராசிக்கு குரு செல்கின்றார். இந்த இரண்டு குருப்பெயர்ச்சிகளும் உங்களுக்கு சில மாற்றங்களைக் கொடுக்கலாம். வரும் மாற்றங்கள் ஏற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கும்.

விருச்சிகத்தில் குரு சஞ்சரிக்கும் பொழுது அதன் பார்வை 3, 5, 7 ஆகிய இடங்களில் பதிகின்றது. எனவே, சகோதர உறவு




பலப்படும். பூர்வ புண்ணிய ஸ்தானம் பலமடைவதால் மக்கள் செல்வங்களால் மகிழ்ச்சியும், கல்யாணக் கனவுகளும் நனவாகும்.

தனுசு இராசியில் சனி சஞ்சரிக்கும் பொழுது, தாய்வழி ஆதரவு கிடைக்கும். பதவி உயர்வு, ஊதிய உயர்வு போன்றவைகள் கிடைக்கலாம்.

### இராகு-கேது பெயர்ச்சிக் காலம்!

13.2.2019இல் மிதுன ராசியில் ராகுவும், தனுசு இராசியில் கேதுவும் சஞ்சரிக்கப் போகின்றார்கள். இதன் விளைவாக உங்கள் இராசிக்கு 6இல் ராகுவும், 12இல் கேதுவும் சஞ்சரிக்கப் போகின்றார்கள். இதனால் வருமானம் திருப்தி தரும். வாழ்வில் வசந்தம் சேரும். ஆன்மீகச் செலவுகள் அதிகரிக்கும். வெளிநாட்டு யோகம் உண்டு. உயர்ந்த மனிதர்களின் சந்திப்பால் நன்மைகளை வரவழைத்துக் கொள்வீர்கள். வீட்டிற்குத் தேவையான விலை உயர்ந்த பொருட்களை வாங்கும் யோகமுண்டு. கூட்டு முயற்சியால் இலாபம் உயரும்.



### தொட்ட காரியங்களில் வெற்றி பெற வழிபாடு!

சனிக்கிழமை தோறும் சிவாலயத்திற்குச் சென்று அனுமன் வழிபாட்டை மேற்கொள்ளுங்கள். மேலும் சிறப்பு வழிபாடாக வைத்தீஸ்வரன் கோவிலுக்குச் சென்று அங்குள்ள வலம்புரி விநாயகர், செல்வ முத்துக்குமரன், வைத்தியநாதர், தையல்நாயகி, அங்காரகன், தன்வந்திரி ஆகிய தெய்வங்களை வழிபட்டு வாருங்கள். வளர்ச்சி கூடும். வளமான வாழ்வும் அமையும்.

### சனியின் வக்ர காலம்!

25.4.2018 முதல் 21.8.2018 வரை மூல நட்சத்திரக் காலில் சனி வக்ரம் பெறுகின்றார். 8.5.2019 முதல் 3.9. 2019 வரை மீண்டும் பூராட நட்சத்திரக் காலில் சனி வக்ரம் பெறுகின்றார்.

இக்காலத்தில் மிகமிக கவனம் தேவை. ஆரோக்கியத் தொல்லை அதிகரிக்கும். ஆர்வத்தோடு செய்த செயல்களைப் பாதியிலேயே விட்டுவிடுவீர்கள். அரசுப் பணியில் உள்ளவர்களுக்கு தொல்லைகள் அதிகரிக்கும். திடீர் என பணி மாற்றங்கள் ஏற்படலாம். யாரையும் நம்பிச் செயல்பட இயலாது. உறவினர் பகை அதிகரிக்கும்.

### பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்!

மகர இராசியில் பிறந்த பெண்கள் நிதானமாகச் செயற்பட வேண்டும். விரயச்சனி தொடங்கிவிட்டது. விழிப்புணர்ச்சி அதிகம் தேவை. கணவன்-மனைவிக்குள் விட்டுக்கொடுத்துச் செல்வது நல்லது. ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு செயற்பட்டால் சச்சரவுகள் ஏற்படாது. தாய்வழி ஆதரவு கிடைக்கும். ஆனால் உடன்பிறந்தவர்களின் ஆதரவை ஓரளவே எதிர்பார்க்க இயலும். குடும்பச் சுமை கூடும். செலவுகள் அதிகரிக்கும். வாங்கல்-கொடுக்கல்களில் திருப்தி ஏற்படாது.

குருப்பெயர்ச்சிக்குப் பின்னால் ஓரளவு நன்மைகள் கிடைக்கும். பிள்ளைகளின் கல்யாண முயற்சி கைகூடும். அவர்களின் கல்விக்காக எடுத்த முயற்சிகளிலும் வெற்றி கிடைக்கும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு இடமாற்றங்கள், ஊர் மாற்றங்கள் வந்து சேரும். ஒருசிலருக்கு வெளிநாட்டு யோகமும் உண்டு. ஜென்ம கேது, சப்தம ராகுவிற்கு பரிகாரமாக சர்ப்ப சாந்திப் பரிகாரங்களைச் செய்து கொள்வது நல்லது.

(தொடரும்)

ஜோதிடக் கலாமணி
- சிவல்புரி சிங்காரம் -

# தேர்தலின் பின்னர் புதிய அரசாங்கம்

## பிரசன்ன எம்.பி.தகவல்



(கொழும்பு)

உள்ளூராட்சி சபைத் தேர்தலைத் தொடர்ந்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் கூட்டு எதிர்க்கட்சியும் இணைந்து புதிய கூட்டரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கான சாத்தியப்பாடுகள் உள்ளதாக கூட்டு எதிரணியின் ஏற்பாட்டாளர் பிரசன்ன ரணதுங்க எம்.பி. தெரிவித்துள்ளார்.

இதற்காக வேண்டி ஸ்ரீல.சு.கட்சி இரண்டு நிபந்தனைகளுக்கு உடன்படுமானால், எந்தவித பதவிகளையும் எதிர்பார்க்காமல் புதிய அரசாங்கமொன்றை அமைக்க முடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் இணைந்து போட்டியிடுவது தொடர்பில் ஸ்ரீல.சு.க.யின் இரு குழுவினரிடையே நடத்தப்பட்ட பேச்சுவார்த்தை தோல்வியடைய காரணமாக கூட்டு எதிர்க்கட்சியிலுள்ள பிரசன்ன ரணதுங்க குற்றம்சாட்டப்படுகின்றார். இது குறித்து அவரிடம் கேட்ட போதே இவ்வாறு கருத்துத் தெரிவித்துள்ளார்.

இப்பேச்சுவார்த்தை தோல்வியடைவதற்கு பிரதான காரணம், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலுள்ள அமைச்சர்களே ஆவர். இவர்கள் தங்களது அமைச்சுப் பதவிகளை துறப்பதற்கு தயாராக இருக்கவில்லை. இதனைக் கருத்தில் கொண்டு, உள்ளூராட்சி சபைத் தேர்தலின் பின்னர், அவர்களது அமைச்சுப் பதவிகளை தக்க வைத்தவாறே புதிய அரசாங்கமொன்றை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் இது தொடர்பில் சாத்தியப்பாடுகள் அதிகம் காணப்படுவதாகவும் அவர் கூறியுள்ளார். (இ-7)

# உள்ளூராட்சிமன்றத் தேர்தல் கடமையில் விசேட உளவுப்படை

(கொழும்பு)

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களைக் கண்காணிப்பதற்கு விசேட உளவுப்படையொன்று கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. தேர்தல் கூட்டங்கள் மற்றும் பிரசாரங்கள் தொடர்பில் கண்காணிப்பதற்காகவே உளவாளிகள் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

தேர்தல் கூட்டங்கள் மற்றும் பிரசார நடவடிக்கைகளின் போது தேர்தல் சட்டங்கள் மீறப்படுகின்றனவா என்பது குறித்து தகவல்களை பெற்றுக்கொள்ளும் நுட்பமான முறைகளை அறிமுகம் செய்ய தேர்தல் கண்காணிப்பாளர்கள் திட்டமிட்டுள்ளனர்.

குறிப்பாக பொருட்களை வழங்குதல், பணம் வழங்குதல் உள்ளிட்ட நடவடிக்கைகளை கையும் களவுமாக பிடிக்கக்கூடிய வகையிலான பொறிமுறைமை உருவாக்கப்படும் என தேர்தல் கண்காணிப்பாளர்கள் தெரிவித்தனர்.

புகைப்படங்கள், காணொலிகள் உள்ளிட்ட ஆதாரங்களின் ஊடாக வேட்பாளர்கள் தேர்தல் விதி மீறல்களில் ஈடுபடுவது பற்றிய விபரங்கள் திரட்டப்பட்டு அதற்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

கடந்த காலங்களில் தேர்தல் வன்முறைகள் தொடர்பிலேயே தேர்தல் கண்காணிப்புக்குழுக்கள் கூடுதல் கவனம் செலுத்தி வந்தன.

எனினும், இம்முறை உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தேர்தல் விதி மீறல்கள் இடம்பெறுகின்றனவா, வேட்பாளர்கள் மோசடியான முறையில் பிரசாரம் செய்கின்றார்களா என்பது குறித்து தீவிரமாக கண்காணிக்கப்படும் என தேர்தல் கண்காணிப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். (இ-7)

# வேட்பு மனு நிராகரிக்கப்பட்டவர்கள் மீளவும் தாக்கல் செய்ய முடியாது

(கொழும்பு)

வேட்பு மனு நிராகரிக்கப்பட்டவர்கள் மீளவும் வேட்பு மனுக்களை தாக்கல் செய்ய முடியாது என தேர்தல் ஆணைக் குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

மஹறகம, பதுளை, அகலவத்தை, பாணந்துறை, வெலிகம, மஹியங்கனை போன்ற உள்ளூராட்சி மன்றங்களுக்காக ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி தாக்கல் செய்த வேட்பு மனுக்களும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினால் பதியதலாவ, தெஹியத்த கண்டிய ஆகிய பிரதேச சபைகளுக்கு தாக்கல் செய்த வேட்பு மனுக்கள் உள்ளிட்ட 22 வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

எனினும், இவ்வாறு வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்ட எந்தவொரு வேட்பாளரும் மீளவும் வேட்பு மனுத்தாக்கல் செய்து விண்ணப்பிக்க முடியாது என அவர் தெரிவித்தார்.

இதேவேளை, மேன்முறையீட்டு நீதிமன்றில் மென்டோமுஸ் கட்டளையொன்றை தாக்கல் செய்து மீளவும் வேட்பு மனுக்களை தாக்கல் செய்யவுள்ளதாக கூட்டு எதிர்க்கட்சியினர் தெரிவித்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# நாடாளுமன்ற அமர்வில் உறங்கும் உறுப்பினர்களுக்கு விசேட ரொபி

(கொழும்பு)

நாடாளுமன்றில் அமர்வுகள் நடைபெறும் போது நித்திரையில் ஆழ்ந்து போகும் உறுப்பினர்களுக்கு விசேட வகையான ரொபியொன்று வழங்கப்படவுள்ளது.

நாடாளுமன்றில் அமர்வுகள் நடைபெறும்போது அமைச்சுப் பதவிகளை வகிக்கும் சிரேஷ்ட உறுப்பினர்கள் மற்றும் சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆழ்ந்து உறங்கி விடுகின்றனர்.

அமர்வுகள் நடைபெறும் போது நித்திரை கொள்வதை இவர்கள் வாடிக்கையாகக் கொண்டுள்ளனர்.

அமர்வுகளின் போது இவ்வாறு நித்திரை கொள்ளும் அமைச்சர்கள் மற்றும் உறுப்பினர்களுக்கு உதவும் நோக்கில், விஞ்ஞான தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர் லக்ஷ்மன் செனவிரட்ன தமது அமைச்சின் அதிகாரிகளைக் கொண்டு மருந்து ஒன்றை உருவாக்கியுள்ளார்.

இனிப்பு மற்றும் வித்தியாசமான சுவையைக் கொண்ட ரொபியொன்றே உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த ரொபியை உட்கொண்டால் நித்திரையை தவிர்க்க முடியும் என பரீட்சார்த்த முயற்சிகளின் போது தெரிய வந்துள்ளது.

இதனைத் தொடர்ந்து அமர்வுகளின் போது நித்திரை கொள்ளும் அரசியல்வாதிகளுக்கு இந்த ரொபி வழங்கப்படவுள்ளது. (இ-7)

# பாதாள உலகக்குழுத் தலைவரின் மகன் உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் போட்டி

(கொழும்பு)

பாதாள உலகக்குழு ஒன்றின் தலைவரது மகனும் எதிர்வரும் உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் போட்டியிடவுள்ளதாக தெரிய வருகின்றது.

நாட்டில் பிரதானமாக இயங்கி வரும் எட்டு பாதாள உலகக்குழுக்களின் குடும்ப உறுப்பினர்கள் மற்றும் ஆதரவாளர்கள் பலர் இம்முறை உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடுகின்றனர் என புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

பிரதான அரசியல் கட்சிகளின் ஊடாக இவர்கள் தேர்தலில் போட்டியிடவுள்ளனர்.

தேர்தலில் போட்டியிடும் நோக்கில், பாதாள உலகக் குழுத் தலைவரின் மகன் வெளிநாடொன்றிலிருந்து நாடு திரும்பியுள்ளார். பிரதான கட்சியொன்றின் சார்பில் அவர் கொழும்பில் போட்டியிடவுள்ளார்.

கிம்புலாஎலே குணாவின் சகோதரர் ஒருவரது மகன் புளுமென்டல் தொகுதியில் தேர்தலில் போட்டியிடவுள்ளார்.

தெற்கின் முக்கிய பாதாள உலகக்குழுத் தலைவர்களில் ஒருவரான கொஸ்கொட சுஜியின் சகோதரியும், சுஜிக்கு எதிரான கொஸ்கொட தாரக்கவின் தாயும், மாகந்துரே மாதுஸின் பிரதான உதவியாளர் ஒருவரும் தேர்தலில் போட்டியிடுவதற்காக வேட்பு மனுத் தாக்கல் செய்துள்ளனர்.

கொலன்னாவ, மினுவாங்கொட, இரத்தினபுரி ஆகிய பிரதேசங்களில் இயங்கி வரும் பாதாள உலகக் குழுக்களின் உறுப்பினர்களும் இம்முறை உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடவுள்ளனர். (இ-7)

# இரண்டாம் கட்ட உள்ளூராட்சிமன்றத் தேர்தல் வேட்புமனு பொறுப்பேற்கும் பணி இன்று ஆரம்பம்

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான இரண்டாம் கட்ட கட்டுப்பணம் மற்றும் வேட்புமனுக்களைப் பொறுப்பேற்கும் பணி இன்று திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

248 உள்ளூராட்சி மன்றங்களுக்காக இதன் போது கட்டுப்பணமும் வேட்புமனுவும் பொறுப்பேற்கப்படும். கட்டுப்பணத்தை ஏற்றுக் கொள்ளும் நடவடிக்கை நாளை மறுதினம் புதன்கிழமை நண்பகல் 12 மணியுடன் நிறைவுபெறும்.

வேட்புமனுக்களைப் பொறுப்பேற்கும் பணி எதிர்வரும் வியாழக்கிழமை நண்பகல் 12 மணியுடன் நிறைவு பெறும்.

இதன் கீழ் 17 மாநகர சபைகளுக்கும், 23 நகர சபைகளுக்கும், 208 பிரதேச சபைகளுக்குமாக இரண்டாம் கட்ட தேர்தல் பணிகள் இடம்பெறுகின்றன.

உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கான முதலாம் கட்டப் பணியின் கீழ் கட்டுப்பணம் செலுத்துதல், வேட்புமனுக்களை பொறுப்பேற்கும் பணி கடந்த வியாழக்கிழமை நண்பகல் 12 மணியுடன் நிறைவு பெற்றது. 21 மாவட்டங்களில் 93 உள்ளூராட்சி மன்றங்களுக்காக இதன் போது வேட்புமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டன. 7 மாநகர சபைகள், 18 நகர சபைகள், 68 பிரதேச சபைகளுக்காக முதல் கட்டப் பணிகள் இதன் கீழ் இடம்பெற்றன. 30 அரசியல் கட்சிகளும், 49 சுயேச்சைக் குழுக்களும் முதல் கட்டத்திற்காக வேட்புமனுக்களை கையளித்தன.

வேட்புமனுக்கள் பொறுப்பேற்கப்பட்ட பின்னர், தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தேர்தல் நடைபெறும் திகதியை அறிவிப்பார். வேட்புமனுக்களை ஏற்கும்பணிகள் இரண்டு கட்டத்தில் இடம்பெற்ற போதும் அனைத்து உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் ஒரே தினத்திலேயே இடம்பெறும் என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# மைத்திரி பக்கம் செல்லவுள்ள மகிந்த அணியின் மேலும் சிலர்

(கொழும்பு)

மகிந்த அணியின் மேலும் சில உறுப்பினர்கள் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணையவுள்ளதாக தெரிய வருகிறது.

இந்த கட்சித் தாவல்கள் எதிர்வரும் இரண்டு வாரங்களில் இடம்பெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஏற்கனவே, மகிந்த அணியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஸ்ரீயானி விஜேவிக்ரம ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் இணைந்து கொண்டார்.

அவருக்கு உள்ளூராட்சி மன்ற மற்றும் மாகாண சபைகள் இராஜாங்க அமைச்சுப் பதவி வழங்கப்பட்டுள்ளது.

முன்னதாக, நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர், வீரகுமார திஸாநாயக்க உள்ளிட்ட மூன்று பேர் ஜனாதிபதியுடன் இணைந்து கொண்டனர்.

இந்த நிலையில், கட்சித் தாவல்கள் காரணமாக தேர்தல் பிரசாரப் பணிகளை முன்னெடுப்பதில் பின்னடைவு ஏற்படலாம் என தெரிவிக்கப்படுகிறது. (இ-7)




# ஜெருசேலம் விவகாரம் பாலஸ்தீனத்தில் மீண்டும் கலவரம்



ஜெருசேலம் விவகாரத்தில் ட்ரம்பின் முடிவுக்கு எதிர்ப்பு தெரிவித்து பாலஸ்தீனத்தின் பல பகுதிகளில் ஏற்பட்ட கலவரத்தில் 4 பேர் கொலை செய்யப்பட்டனர்.

பாலஸ்தீனத்திலுள்ள ஜெருசலேம் நகருக்கு இஸ்ரேல் - பாலஸ்தீனம் ஆகிய இரு நாடுகளும் உரிமை கொண்டாடி வருகின்றன. இருநாடுகளுமே அந்த நகரை தங்கள் நாட்டின் தலைநகரம் என்று அறிவித்துள்ளன. ஆனால், அதை பெரும்பாலான நாடுகள் ஏற்கவில்லை.

இந்த நிலையில் ஜெருசலேம் இஸ்ரேலின் தலைநகரம் என்பதை அங்கீகரிப்பதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அறிவித்தார். அமெரிக்காவின் இந்த முடிவுக்கு கடும் எதிர்ப்பு கிளம்பியது. பாலஸ்தீனத்தில் வன்முறை சம்பவங்கள் நடைபெற்றன. இஸ்ரேல் இராணுவத்தினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் சிலர் பலியானார்கள்.

இந்நிலையில், தற்போது பாலஸ்தீனத்தின் பல பகுதிகளில் மீண்டும் கலவரம் வெடித்தது. இஸ்ரேல் படையினருக்கும், பாலஸ்தீனம் மக்களுக்கும் இடையே நேற்று கலவரம் ஏற்பட்டது. இந்த கலவரத்தில் பாலஸ்தீன நாட்டைச் சேர்ந்த 4 பேர் படுகொலை செய்யப்பட்டனர். மேலும் 100இக்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர்.

இதுகுறித்து பாலஸ்தீனம் சுகாதாரத்துறை அமைச்சகம் வெளியிட்ட அறிக்கையில், இஸ்ரேல் நாட்டின் எல்லையில் காசா ஸ்ட்ரிப் பகுதியில் 2 பேர் கொல்லப்பட்டனர். ஜெருசேலமின் வடக்கு பகுதியில் ஒருவர் இஸ்ரேல் இராணுவத்தினால் சுட்டுக்கொல்லப்பட்டார். மற்றொரு நபர் ஜெருசேலத்தின் ராமல்லா நகரில் உள்ள சோதனைச்சாவடிக்கு அருகில் இஸ்ரேல் எல்லை பாதுகாப்பு பொலிஸாரால் சுட்டுக்கொல்லப்பட்டார் எனக் குறிப்பிட்டிருந்தது.

அமெரிக்க துணை ஜனாதிபதி மைக் பென்ஸ் இஸ்ரேலுக்கு வருவதாக இருந்த நிலையில், கலவரம் நடந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

பாலஸ்தீன மக்களின் நிலைமை புரிகிறது. அவர்கள் சாதாரணநிலைக்குவரகாலஅவகாசம் தேவைப்படுகிறது. அதற்காக நாங்கள் காத்திருப் போம் என வெள்ளை மாளிகை அதிகாரி தெரிவித்துள்ளார். (இ-7)

## வடகொரியாவுக்கு 'பொருளாதார உளவு'

### ஆஸியில் ஒருவர் கைது

(கான்பெரா)

வடகொரியாவின் உயரதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு பொருளாதார உளவு பார்த்ததாக கூறி அவுஸ்திரேலியாவில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சர்வதேச அரங்கில் தனிமைப்படுத்தப்பட்டுள்ள வடகொரியா மீது ஐ.நா. மற்றும் பல்வேறு உலக நாடுகள் பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளன. இந்நிலையில், அவுஸ்திரேலியாவின் சிட்னி நகரில் வடகொரியா உயரதிகாரிகளுடன் தொடர்பு வைத்திருந்ததாக கூறி சான் ஹான் சோய் என்பவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஆயுதங்கள், வெடி பொருட்கள் மற்றும் ஏவுகணை தயாரிக்க தேவையான பொருட்கள் ஆகியவை சட்ட விரோதமாக வடகொரியாவுக்கு ஏற்றுமதி செய்வதற்கு ஹான் சோய் தரகு வேலை செய்ததாக அவர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது. மேலும், வடகொரியாவுக்கு பொருளாதார உளவாளியாக அவர் இருந்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

30 ஆண்டுகளாக அவுஸ்திரேலியாவில் வசித்து வரும் ஹான் சோய், ஆயுதம் மற்றும் பேரழிப்பு தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட முதல் நபர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# சிலியில் நிலச்சரிவில் சிக்கி 3 பேர் பலி -15 பேர் மாயம்



சிலி நாட்டில் பெய்து வரும் கனமழையால் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி 3 பேர் உயிரிழந்தனர். மேலும், நிலச்சரிவில் மாயமான 15 பேரை பொலிஸார் தேடி வருகின்றனர்.

சிலி நாட்டில் தற்போது பலத்த மழை பெய்து வருகிறது. இதனால் நாடு முழுவதும் தாழ்வான பகுதிகளில் நீர் நிரம்பி வருகிறது. கனமழையால் அங்குள்ள வீடுகள், பாடசாலைகள் மற்றும் பல்வேறு கட்டடங்கள் சேதமடைந்துள்ளன. பலத்த மழையால் அங்குள்ள ஆறுகளில் வெள்ளம் கரை புரண்டோடுகிறது.

இதற்கிடையே, சிலியின் சுற்றுலா பகுதியான வில்லா சாண்டா லூசியா பகுதியில் கனமழை காரணமாக நிலச்சரிவு ஏற்பட்டுள்ளது. இந்த சேற்றில் சிக்கி 2 பெண்கள் மற்றும் சுற்றுலா வந்த ஒருவர் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர். மேலும், 15-க்கு மேற்பட்டோரை காணவில்லை. மாயமானவர்களை மீட்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது என மீட்புப்படை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

வில்லா சாண்டா லூசியா பகுதியில் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கியவர்களை மீட்கும் பணிகளை துரிதமாக எடுக்க வேண்டும் என அந்நாட்டு அரசு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளது. (இ-7)

# சவுதி கூட்... 51 கிளர்ச்...

(ஏடன்)

ஏமன் நாட்டில் சவுதி அரேபிய கூட்... படையினர் நடத்திய வான்வழித் தாக் குதல்... 51 கிளர்ச்சியாளர்கள் கொல்லப்பட்டனர். ஏம... நாட்டு ஜனாதிபதி அலி அப்துல்லா சால்வி... ஆட்சிக்கு முடிவு கட்டும் வகைய... அந்நாட்டிலுள்ள ஹவுத்தி இன மக்கள் ஆய... போராட்டத்தில் ஈடுபட்டு வருகின் றனர்.

அதேசமயம் ஹவுத்தி கிளர்ச்சியாளர்களு...

# ஆர்.கே.நகர் வாக்கா... பெண்கள் மூலம் கவரு...

(ராயபுரம்)

பெண்களை பிரசாரத்தில் ஈடுபடுத்துவதன் மூலமே வாக்காளர்களை கவர முடியும் என்பதால் ஆர்.கே.நகர் தொகுதியிலுள்ள பெண்களை பிரசாரத்துக்கு இழுக்கும் யுக்தியில் தினகரன் அணி பொறுப்பாளர்கள் ஈடுபட்டனர்.



ஆர்.கே.நகர் தொகுதி இடைத்தேர்தலுக்கு இன்னும் 5 நாட்களே உள்ளன. அங்கு நாளை 19ஆம் திகதி மாலையுடன் பிரசாரம் ஓய்கிறது. இதனால் பிரசாரம் தற்போது உச்சக்கட்டத்தை எட்டியுள்ளது. கட்சித் தலைவர்கள் தொகுதியை முற்றுகையிட்டு பிரசாரம் செய்து வருகின்றனர். அ.தி.மு.க. மற்றும் தி.மு.க.வை காட்டிலும் தினகரன் அணியினரே பிரசாரத்தில் மும்முரமாக வுள்ளனர். தினகரனுக்கு ஆதரவாக பெண்கள் திரண்டு வந்து பிரசாரத்தில் ஈடுபடுகிறார்கள்.

கடந்த ஏப்ரல் மாதம் ஆர்.கே.நகர் தொகுதிக்கு இடைத் தேர்தல் நடப்பதாக அறிவிக்கப்பட்டிருந்த போது எம்.பி., எம்.எல்.ஏக்கள் மற் றும் முக்கிய... வாகிகள், பொறுப்பாளர்களாக நியமிக் கப்... தினகரனுக்கு ஆதர வாக தீவிர பிரசாரத்தில்... பட்டனர். ஒரு பாகம் பொறுப் பாளருக்கு ... வாக்குகள் பிரித்து கொடுக்கப்பட்டுள்ளன. ... போது அ.தி.மு.க. அணிகள் இணைந்த ... தினகரன் தனித்து களம் காண்கிறார். எம்... எம். எல்.ஏ.க்களில் பெரும் பாலா னோர் அ... மு.க.வில் இருந் தாலும் முக்கிய கட்சி நி... கிகள் தினகரன் பக்கமே உள்ளனர். அதி... கடந்த முறை தேர்தல்.இரத்து செய்ய ப்பட்ட... கும் பொறுப்பா ளர்களை அவர் தன் பக்கமே... வைத்துக் கொண்டுள் ளார்.

அந்த பொறுப்பாளர்கள் தற்போது தின... னுக்கு ஆதர வாக தேர்தல் பணியில் ... முரமாக ஈடுபட்டு வருகி றார் கள். பெண்க... பிரசாரத்தில் ஈடுபடுத்துவதன் மூலமே வா... ளர்களை கவர் முடி யும் என்பதால் ஆர்.கே... தொகுதியில் உள்ள பெண் களை பிரசாரத்து... இழுக் கும் யுக்தியில் தினகரன் அணி பொறு... ளர்கள் ஈடுப ட்டனர். இந்த முயற் சிக்கு ந...

# ஜெயலலிதாவுக்கு காய்ச்சல் என்று உண்மையை மறைத்து அறிக்கை

## பிரதாப் ரெட்டி பரபரப்பு பேட்டி



சட்டம் ஒழுங்கு பிரச்சினை வராமல் இருப்பதற்காக ஜெயலலிதாவுக்கு காய்ச்சல் என்று உண்மையை மறைத்து அறிக்கை தந்ததாக அப்பலோ தலைவர் பிரதாப் ரெட்டி கூறியிருப்பது பரபரப்பை ஏற்படுத்தி யுள்ளது.

அப்பலோ வைத்தியசாலை குழும தலைவர் பிரதாப் சி. ரெட்டி சென்னையில் நேற்று முன்தினம் நிருபர்களுக்கு பேட்டியளித்தார். இதன் போது அவர் தெரிவிக்கையில்,

ஜெயலலிதாவை ஆபத்தான நிலையில்தான் அப்பலோ வைத்தியசாலைக்கு கொண்டு வந்தனர். அன்று வெளியிடப்பட்ட மருத்துவ அறிக்கையில் ஜெயலலிதாவுக்கு காய்ச்சல் என்று குறிப்பிட்டு இருந்தோம்.



மக்கள் அச்சப்படக் கூடாது என்பதற்காகவும், சட்டம் ஒழுங்கு பிரச்சினையை கருத்தில் கொண்டும் உண்மை நிலையை தெரிவிக்கவில்லை.

தற்போது ஜெயலலிதா மரணம் தொடர்பான விசாரணை ஆணையம் நடைபெற்று வருவதால் அதுபற்றி மேலும் பேச முடியாது. எங்கள் வைத்தியசாலை வைத்தியர்களுக்கு விசாரணை ஆணையத்திலிருந்து அழைப்பு வந்துள்ளது. எனக்கு அழைப்பு வரவில்லை.

ஏற்கனவே ஜெயலலிதா உடல் நிலை பற்றி அமைச்சர் திண்டுக்கல் சீனிவாசன் பேசும்போது, 'அவர் இட்லி சாப்பிட்டார் என்று பொய் சொன்னோம். அதற்காக மன்னிப்பு கேட்கிறோம்' என்று தெரிவித்தார்.

இப்போது அப்பலோ வைத்தியசாலை தலைவர் பிரதாப் சி. ரெட்டி, 'சட்டம் ஒழுங்கு பிரச்சினை வராமல்' இருப்பதற்காக ஜெயலலிதாவுக்கு காய்ச்சல்என்று உண்மையை மறைத்து அறிக்கை தந்ததாக கூறியிருப்பது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (இ-7)

# பணியாளர்களின் துணை... விசாவிலும் கைவைக்...

H-1B விசாவுடன் அமெரிக்காவில் தங்கியுள்ள வெளிநாட்டு தொழில்நுட்ப பணியாளர்களின் மனைவி அல்லது கணவருக்கு அளிக்கப்படும் H-4 ரக விசாக்கள் மீது கடுமையான கட்டுப்பாடு விதிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் வேலை செய்துவரும் பல வெளிநாட்டு தொழில்நுட்ப பணியாளர்கள் H-1B என்னும் சிறப்பு விசாக்களின் மூலம் அங்கு வசித்து வருகின்றனர். பட்ட மேற்படிப்பு பயின்றவர்கள், வைத்தியர்கள், பொறியியலாளர்கள் மற்றும் இதர தொழில் நுட்பபட்டதாரிகளுக்கு H-1B என்னும் இந்த சிறப்பு விசாக்கள் அளிக்கப்படுகின்றன.

இவர்கள் ஆணாக இருந்தால் அவர்களின் மனைவிகளும், பெண்ணாக இருந்தால் கணவரும் H-4 ரக விசாக்கள் மூலம் 'கிரீன்



கார்ட்' என்னும் தற்காலிக குடியுரிமைய... அமெரிக்காவுக்கு சென்று தங்களது து... வர்களுடன் தங்கி அருகாமை யில் கிடை... தங்களால் இயன்ற வேலைகளை பெ... வாழ்ந்து வருகின்றனர்.

இந்நிலையில், அமெரிக்க பொருட்களை... வாங்குவோம் அமெரிக்கர்களையே பணிய... வோம் என்று கூறிவரும் அமெரிக்க ஜனா... டொனால்ட் ட்ரம்ப், H-1B விசாவுடன் அ... ரிக்காவில் தங்கியுள்ள வெளிநாட்டு தொழி... பணியாளர்களின் மனைவி அல்லது க... வருக்கு அளிக்கப்படும் H-4 ரக விசாக்கள்... கடுமையான கட்டுப்பாடு விதிக்க தீர்மான... ள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இந்த திடீர் முடிவினால் கணவனு... சேர்ந்து வாழ்வதற்காக அமெரிக்காவுக்கு ... 90 சதவீத பெண்களுக்கு, குறிப்பாக இந்...

# வெளிநாடு

## ...டுப்படை தாக்குதலில் ...ர்ச்சியாளர்கள் உயிரிழப்பு

...பிய கூட்டுப் ...தாக் குதலில் ...டனர். ஏமன் ...ா சால்வின் ... வகையில் ...கள் ஆயுதப் ...றனர். ...ாளர்களுக்கு

எதிராக சவுதி அரேபியா தலைமையிலான கூட்டுப் படையும் வான்வழி தாக்குதலில் ஈடு பட்டு வருகின்றன. இதில் அமெரிக்காவும் இணைந்து செயற்பட்டு வருகிறது.

இந்நிலையில், ஏமன் நாட்டு மேற்கு பகுதியில் ஹவுதி கிளர்ச்சியாளர்கள் நிறைந்துள்ள பகுதியின் மீது சவுதி அரேபிய கூட்டுப்படையினர் நேற்று முன்தினம் வான்வழித் தாக்குதல் நடத்தினர்.

இந்த தாக்குதலில் 51 இற்கும் மேற்பட்ட கிளர்ச்சியாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர். மேலும், பலர் படுகாயம் அடைந்து சிகிச்சை பெற்று வருகின்றனர். இதனால் பலி எண் ணிக்கை அதிகரிக்கலாம்.

கடந்த இரண்டு தினங்களாக கூட்டு படையினர் நடத்திய வான்வழி தாக்குதலில் கிளர்ச்சியாளர்களிடம் இருந்து 5 இற்கு மேற்பட்ட கிராமங்கள் மீட்கப்பட்டுள்ளன எனவும் மீட்புப் படையினர் தெரிவித்துள்ளனர். (இ-7)

## ...காளர்களை ...ரும் தினகரன்



... முக்கிய நிர் ...பமிக் கப்பட்டு ...சாரத்தில் ஈடு ...ளருக்கு 700 ...டுள்ளன. தற் ...ணைந்த பிறகு ...றார். எம்.பி., ...னோர் அ.தி. ... கட்சி நிர்வா ...னர். அதிலும் ...ய ப்பட்ட பிற ...ர் பக்கமே தக்க ...போது தினகர ...னியில் மும் ... பெண்களை ...மே வாக்கா ... ஆர்.கே.நகர் ...பிரசாரத்துக்கு ...னி பொறுப்பா ...) சிக்கு நல்ல

பலனும் கிடை த்துள்ளது.

ஆர்.கே.நகர் தொகு தியில் உள்ள பெண்கள் பக் கத்தில் உள்ள ஒன்றிரண்டு தெருக்களுக்கு பிரசாரத்துக் காக அழைத்துச் செல்லப் படுகிறார்கள். இப்படி ஆர். கே. நகர் தொகுதியில் உள்ள பெரும்பாலான பெண்கள் தினக ரன் ஆதரவாளர்களாகவே மாறியுள்ளனர். பெண்கள் வாக்கு கேட்டு வருவதால் வாக்காளர்களையும் எளி தாக கவர முடிகிறது. பிரசா ரம் செய்ய ஆண்கள் வெளி மாவட்டங்களில் இருந்து வருகிறார்கள். ஆனால் பெண் களை பொருத்தவரை ஆர்.கே. நகர் தொகுதியை சேர்ந்தவ ர்களே பிரசாரத்தில் ஈடுபடுகி றார்கள்.

ஆனால் அ.தி.மு.கவும், தி.மு.க.வும் பெண்களை பிரசாரத்தில் ஈடுபடுத் துவதில் அதிக அக்கறை காட்டவில்லை. இதை தினகரன் தன க்கு சாதகமாக பயன்படு த்திக் கொண்டுள்ளார். ஒவ் வொரு பெண்களும் 2 மணி நேரம், 3 மணிநேரம் என்ற அளவில் பிரசாரத் துக்கு செல் கிறார கள். (இ-7)

## ...துணைவர்கள் ...வக்கும் ட்ரம்ப்



...ரிமையுடன் ...ளது துணை ...் கிடைக்கும் ...ளை பெற்று ...ருட்களையே ... பணியமர்த்து ...க ஜனாதிபதி ...வுடன் அமெ ... தொழில்நுட்ப ...ல்லது கண ...விசாக்கள் மீது ... தீர்மானித்து ...து. ...ணவனுடன் ...ாவுக்கு வரும் ...பாக இந்திய

பெண்களுக்கு பெரும் பாதிப்பு ஏற்படலாம்என கருதப்படுகிறது.

இதுதொடர்பாக, கடந்த 2015 ஆம் ஆண்டு முன்னாள் ஜனாதிபதி ஒபாமா ஆட்சிக்காலத்தில் உருவாக்கப்பட்ட விசா சட்டங்களை முடிவுக்கு கொண்டுவர தற்போதைய ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் முடிவு செய்துள்ளதாக அமெரிக்க உள் நாட்டு பாதுகாப்பு அமை ச்சகம் நேற்று முன்தினம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2015ஆம் ஆண்டில் இதுபோன்ற H-4 விசா மூலம் அமெரிக்காவுக்கு சென்ற 80 சதவீதம் பேர் இந்தியர்கள் என தெரிய வந்துள்ளது. இந்நிலையில், ட்ரம்பின் இந்த திடீர் முடி வால் இந்தியர்கள்தான் அதி கம் பாதிக்கப்படுவார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## நான் புகுந்த வீடு புரட்சிகரமானது

### சோனியாகாந்தி தெரிவிப்பு



நான் புகுந்த வீடு மிகவும் புரட்சிகரமான சித்தாந்தத்தை கொண்டது. நாட்டு விடுதலைக்காக சிறை சென்றவர்கள் எனது கணவர் குடும்பத்தை சேர்ந்தவர்கள் என சோனியா காந்தி தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற ராகுல் காந்தியின் பதவியேற்பு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

"ராகுல்காந்தியை நான் புகழ்ந்து பேச மாட்டேன். அவர் எனது மகன். காங்கிரஸ் தலைவராக நான் பேசும் கடைசிக் கூட்டம் இதுதான். சுமார் 20 ஆண்டுகளுக்கு முன்பு நீங்கள் என்னை காங்கிரஸ் கட்சியின் தலைவராக தேர்வு செய்த அதே இடத்தில் நின்று இப்போது நான் பேசுகிறேன். 20 ஆண்டுகளுக்கு முன்பு நடந்ததை நினைத்துப் பார்க்கிறேன்.

அப்போது நான் தலைவர் பொறுப்பை ஏற்க மிகவும் கவலைப்பட்டேன், எனது கைகள் நடுங்கியது. வரலாற்று சிறப்பு மிக்க பெரிய கட்சியை எப்படி வழி நடத்தப் போகிறேன் என்று நினைத்தேன்.

நான் புகுந்த வீடு மிகவும் புரட்சிகரமான சித்தாந்தத்தை கொண்டது. நாட்டு விடுதலைக்காக சிறை சென்றவர்கள் எனது கணவர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்.

நான் மருமகளாக வந்த போது இந்திராகாந்தி என்னை தனது மகள் போல ஏற்றுக் கொண்டார். அவரை நான் தாயாக கருதி வாழ்ந்தேன். ஆனால் அவர் சுட்டுக் கொல்லப்பட்டபோது எனது சொந்த தாயாரை இழந்தது போல் உணர்ந்தேன்.

எனது கணவர்படுகொலை செய்யப்பட்டபோது எனக்கு இருந்த ஆதரவு மீண்டும் பறிக்கப்பட்டது போல நினைத்தேன். இந்த நிலையில் தான் என்னை அரசியலுக்கு அழைத்தனர்.

இந்திராகாந்தியும், ராஜீவ் காந்தியும் கொல்லப்பட்டதால் அரசியலே வேண்டாம் என்று தான் இருந்தேன். எனக்கும், எனது குழந்தைகளுக்கும் அரசியல் வேண்டாம் என்று நினைத்தேன்.

ஆனால் நேரு குடும்பத்து உறுப்பினராக நாட்டுக்கு செய்ய வேண்டிய கடமையாக அரசியலுக்கு வருவதை கருதினேன். இந்திரா மற்றும் ராஜீவின் ஆன்மா சாந்தி அடைய வேண்டும் என்பதற்காக காங்கிரஸ் தலைவர் பொறுப்பை ஏற்றுக் கொண்டேன்.

எனது தலைமையிலான காங்கிரஸ் கட்சிக்கு ஒத்துழைப்பு கொடுத்தனர். ஆட்சியில் அமர வைக்கும் உரிமையை தந்தனர். அதனால் 2004 முதல் 2014 வரை நல்லாட்சியை வழங்க முடிந்தது. மன்மோகன்சிங் மிகவும் சிறப்பாக ஆட்சியை நடத்தினார்.

மக்கள் நம்மீது நிறைய நம்பிக்கை வைத்துள்ளனர். எனவே கட்சியில் உள்ள அனைவரும் ஒற்றுமையோடு இருக்க வேண்டும்.

தொண்டர்கள் சிறப்பாக செயற்பட்டால்தான் வெற்றி பெற முடியும். புதிய தலைமை மீது அனைவரும் நம்பிக்கை கொள்ள வேண்டும் என சோனியா காந்தி தெரிவித்தார். (இ-7)

## பேச்சுவார்த்தை உரிமையை வடகொரியா பெறவேண்டும்

### அமெரிக்கா தெரிவிப்பு



(வோஷிங்டன்)

அமெரிக்கா மற்றும் வட கொரியா ஆகிய நாடுகளுக்கிடையில் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்பட முன்னர், வடகொரியா அதற்கான உரிமையைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென, அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் ரெக்ஸ் ரில்லர்ஸன் தெரிவித்துள்ளார்.

ஐ.நாவின் பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில் கடந்த வெள்ளிக்கிழமை உரையாற்றியபோதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், 'அமெரிக்கா மற்றும் வட கொரியாவுக்கிடையில் இராஜதந்திர ரீதியான பேச்சுவார்த்தை நடப்பதற்கு சாத்தியக்கூறு உண்டு. ஆனால், பேச்சுவார்த்தைக்காக வட கொரியா வைக்கும் கட்டுப்பாடுகளுக்கு அமெரிக்கா பணியாது' என்றார்.

'பேச்சுவார்த்தைக்கு முன்னர் நடக்கும் கட்டுப்பாடுகளாக, எந்தவிதத் தடையையும் தளர்த்துவதை நாம் அனுமதிக்கமாட்டோம்' எனவும் அவர் தெரிவித்தார்.

மேலும், 'இரு நாடுகளுக்கிடையில் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்பட முன்னர், வடகொரியா தனது ஆயுதச் சோதனைகளைநிறுத்தவேண்டும்' எனவும் அவர் கூறியுள்ளார்.

வடகொரியா எம்முடன் பேச்சுவார்த்தை நடத்த விரும்பினாலும், அதற்கு எந்த வேளையிலும் தாம் தயாராகவுள்ளதாக, அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் ரில்லர்ஸன் இந்த வார முற்பகுதியில் தெரிவித்திருந்ததுடன், இதற்குச் சீனாவும் ரஷ்யாவும் வரவேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இருப்பினும், இந்தக் கருத்துக்கு எதிர்மறையாக வெள்ளை மாளிகை கருத்து வெளியிட்டிருந்தது.

பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்பட முன்னர், அனைத்து அணு வாயுத நடவடிக் கைகளும் கைவிடப்படுமென்று வடகொரியா ஒப்புக்கொள்ள வேண்டுமெனவும், வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது. (இ-7)

## வடகொரியா மீது ஜப்பான் புதிய பொருளாதாரத் தடை

(டோக்கியோ)

அணு ஆயுதம் ஏவுகணை திட்டங்களை தொடருவதால் வடகொரியாவுக்கு அழுத்தம் தரும் வகையில், ஜப்பான் புதிய பொருளாதாரத் தடைகளை அறிவித்துள்ளது. உலக நாடுகளின் கடும் எதிர்ப்புக்கு மத்தியிலும், ஐ.நா. பாதுகாப்புச் சபையில் தீர்மானங்களுக்கு இடையிலும் வட கொரியா தொடர்ந்து அணுகுண்டு, ஏவுகணை திட்டங்களை செயற்படுத்தி வருகிறது.

இதற்காக வடகொரியா மீது ஐ.நா. பாதுகாப்புச் சபையிலும், அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளும் தொடர்ந்து பொருளாதாரத் தடைகளை விதித்து வருகின்றன.

ஆனாலும் வடகொரியா தனது அணு ஆயுத, ஏவுகணை திட்டங்களில் உறுதி



யாக இருப்பதால் அந்த நாட்டுக்கு எதிராக சர்வதேச நிர்ப்பந்தங்கள் அதிகரித்து வருகின்றன. இந்நிலையில், வட. கொரியாவுக்கு மேலும் அழுத்தம் தரும் வகையில், ஜப்பான் புதிய பொருளாதாரத் தடைகளை அறிவித்துள்ளது.


இது தொடர்பான அறிவிப்பை ஜப்பான் அரசின் தலைமைச்செயலாளர் யோஷிஹிடே சுகா வெளியிட்டார். அப்போது அவர் தெரிவிக்கையில், "செப்டெம்பர் மாதம் வடகொரியாவின் கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணை ஜப்பான் மீது பாய்ந்துள்ள நிலையில், இதுவரை இல்லாத அளவுக்கு அந்த நாட்டின் அச்சுறுத்தலுக்கு ஆளாகி இருக்கிறோம். எனவே வடகொரியாவுக்கு மென்மேலும் அழுத்தம் தருகிற வகையில் புதிய பொருளாதார தடைகள் விதிக்கப்படுகின்றன" என்று தெரிவித்தார்.

இதன்படி வடகொரியாவின் 19 நிறுவனங்கள் மற்றும் தனிநபர்களின் சொத்துக்கள் முடக்கப்படுகின்றன.

வங்கிகள், நிலக்கரி மற்றும் தாது வர்த்தகர்கள், போக்குவரத்து நிறுவனங்கள் உள்ளிட்டவை ஜப்பான் தடையினால் பாதிப்புக்குள்ளாகும் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## இரட்டை இலை சின்னத்திற்கு வெற்றி வாய்ப்பு பிரகாசம்

### -அமைச்சர் இராஜேந்திரபாலாஜி-



(சென்னை)

ஆர்.கே.நகர் இடைத் தேர்தலில் இரட்டை இலை சின்னத்துக்கு ஆர்.கே.நகர் கீரைத்தோட்டம் பகுதியில் அமைச்சர் கே.டி.ராஜேந்திர பாலாஜி வீதி வீதியாக நடந்து சென்று வாக்கு சேகரித்தார். பிரசாரத்தின்போது அமைச்சர் கே.டி.ராஜேந்திர பாலாஜி நிருபர்களிடம் பேசும் போது, ஆர்.கே.நகர் தொகுதியில் அம்மாவுக்கு எந்த அளவிற்கு ஆதரவு இருந்ததோ அதே அளவிற்கு தற்போதும் இரட்டை இலை சின்னத்திற்கு வாக்காளர்கள் ஆதரவாக உள்ளனர்.

ஆர்.கே.நகர் இடைத் தேர்தலில் மதுசூதனன் சரித்திர வெற்றி பெற்று சாதனை படைப்பார்.

எம்.ஜி.ஆர், ஜெயலலிதா உருவாக்கிய இரட்டை இலை சின்னத்துக்கு ஆர்.கே. நகர் இடைத் தேர்தலில் வெற்றி வாய்ப்பு பிரகாசமாக உள்ளது.

வெற்றி வாகை சூடுவது உறுதி. ஆர். கே.நகர் வெற்றி மூலம் இரட்டை இலை சின்னம் எப்போதும் வெற்றிச் சின்னம் தான் என்பதை நிரூபிப்போம் என்றார். (இ-7)

# கட்சியின் யாப்பை மீறினால் ஒழுக்காற்று நடவடிக்கை

## அமைச்சர் துமிந்த எச்சரிக்கை



(கொழும்பு)

எதிர்வரும் உள்ளூராட்சி மன்ற தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் யாப்பை மீறி மற்றைய கட்சிகளின் பிரசாரங்களுக்கு ஒத்துழைப்பு வழங்கும் நபர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளர் அமைச்சர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

கடந்த மத்திய செயற்குழு கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு அமையவே இந்த விடயம் தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

ஆகவே சுதந்திரக்கட்சி உறுப்பினர்களின் செயற்பாடுகள் தொடர்பில் உன்னிப்பாக அவதானிக்கப்பட்டு வருவதாகவும் அவர் கூறியுள்ளார்.

எனவே சுதந்திரக்கட்சியில் அங்கத்துவம் பெற்ற அனைத்து உறுப்பினர்களும் இந்த அறிவிப்பு தொடர்பில் கூடிய கவனம் செலுத்துமாறும் அவர் கேட்டுள்ளார். (இ-7)

# இலங்கைக்கான சீனத் தூதுவர் இன்று நாடு திரும்புகிறார்

(கொழும்பு)

இலங்கைக்கான சீனத் தூதுவராகப் பணியாற்றிய யி ஷியான்லியாங், பதவிக் காலம் முடிந்து இன்று நாடு திரும்பவுள்ளார்.

இலங்கையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு ஒரு மாதம் கழித்து 2015 பெப்ரவரி 14ஆம் திகதி, இலங்கைக்கான 20 ஆவது சீனத் தூதுவராக யி ஷியான்லியாங் கொழும்பில் பொறுப்பேற்றிருந்தார்.

சுமார் மூன்று ஆண்டுகள் கொழும்பில் பணியாற்றிய அவரது பணிக்காலம் நேற்றுடன் முடிவடைந்தது.

இதையடுத்து அவர் இன்று பீஜிங் திரும்பவுள்ளார்.

ஆட்சி மாற்றத்துக்குப் பின்னர் சீன முதலீடுகள் கேள்விக்குறியாக மாறியிருந்த சூழலில், சீனத் தூதுவராகப் பொறுப்பேற்றிருந்த யி ஷியான்லியாங், அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீனா வசப்படுத்தியுள்ள நிலையில் நாடு திரும்புகிறார்.

இவர் இலங்கையில் பணியாற்றிய காலத்தில், நாட்டின் 9 மாகாணங்களுக்கும், 25 மாவட்டங்களுக்கும் பயணங்களை மேற்கொண்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.



இலங்கையில் இருந்து விடைபெறுவது தொடர்பாக விடுத்துள்ள செய்தி ஒன்றில், புதிய பட்டுப்பாதை திட்டம், சீன- இலங்கை உறவுகளை புதிய உச்சத்துக்குக் கொண்டு செல்லும் என்று சீனத் தூதுவர் யி ஷியான்லியாங் தெரிவித்துள்ளார். (இ-7)

# விமல் வீரவன்சவும் அதிருப்தியில்

## சு.க. அவருடன் பேசும்; விரைவில் திருப்பம்

## அமைச்சர் எஸ்.பி தகவல்



(கொழும்பு)

மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான கூட்டு எதிர்க்கட்சியிலுள்ள பலர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் பேச்சுவார்த்தையில் உள்ளதாகவும், விமல் வீரவன்சவுடனும் கட்சி உறுப்பினர்கள் பேச்சுவார்த்தையில் உள்ளதாகவும் அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

விமல் வீரவன்ச எம்.பி. யின் தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணியிலுள்ளவர்கள் அக்கட்சியிலிருந்து விலகிச் சென்றது கூட்டு எதிர்க்கட்சியுடன் உள்ள முரண்பாட்டினாலாகும்.

அக்கட்சியின் தலைவர் விமல் வீரவன்சவும் தற்பொழுது அதிருப்தியுடனே காணப்படுகின்றார்.

அவருடனும் பேச்சுவார்த்தை இடம்பெறுகின்றது. எதிர்வரும் நாட்களில் என்ன நடக்கும் என்பதை கூறமுடியாதுள்ளது எனவும் அமைச்சர் மேலுமம தெரிவித்தார். (இ-7)

# எஸ்.பியின் கருத்துக்கு விமல் சூடான பதில்

(கொழும்பு)

நாம் பசிவந்தாலும் மலத்தைச் சாப்பிடமாட்டோம் என்றே அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்கவுக்கு கூற வேண்டியுள்ளதாகவும், தங்களைப் போன்று பிறரையும் எடைபோட வேண்டாம் எனவும் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச எம்.பி. தெரிவித்துள்ளார்.

அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க நேற்றுமுன்தினம் ஊடகங்களிடம் கருத்து தெரிவிக்கும் போது விமல் வீரவன்ச தொடர்பில் தெரிவித்திருந்த கருத்துக்கு தனது முகநூலில் இவ்வாறு பதிலளித்துள்ளார். (இ-7)



## இன்று ஒரு தகவல்

### பிளாட்டிங் பேப்பர் மனநிலை

மனிதர்கள் நல்ல விடயங்களை காணும் போது பல விதமாகப் பிரதிபலிக்கிறார்கள்.

எரிச்சல் அடைகிறவர்கள்; பொறாமைப்படுகிறவர்கள்; வியக்கிறவர்கள்; பாராட்டுகிறவர்கள்; பின்பற்ற எண்ணுகிறவர்கள்; பின் பற்றுகிறவர்கள் என்று இவர்களை ஆறு ரகங்களாகப் பிரித்துக் கொள்ளலாம்.

எதிராளி சொன்னான்; அவன் வேண்டாதவன்; மனதிற்குப் பிடிக்காதவன் என்பதற்காக மட்டுமே நல்ல விடயத்தைக் கூட வெறுப்பவர்கள் இருக்கிறார்கள்.

ஒரு வெற்றிகரமான மனிதரைச் சந்திக்கிறோம் என்றால் இவ்வளவு வெற்றிகரமாக ஒருவர் இருப்பதற்குப் காரணம் என்னவாயிருக்கும் என்று நம் மனம் சிந்திப்பது இல்லை. அவரிடத்திலே என்ன குறையிருக்கிறது என்றுதான் நம் மனம் தேட நினைக்கிறது. இந்தப் பார்வைக் கோளாறு இருப்பதாலேயே நம்மில் பலர் வளர்வதே இல்லை.

ஒரு வெற்றிகரமான மனிதருடன் நெருங்கிப் பழகும் போது இவரிடம் இருந்து கற்றுக்கொள்ள வேண்டியவை என்னென்ன என்று நம் பார்வையை மாற்றிக் கொண்டால் அது நமக்கு நன்மை.

மேற்சொன்ன ஆறில் முதல் இரண்டு நிலைகளை மட்டும் தவித்து விட்டு வியக்க ஆரம்பித்து அதில் லயித்து அவர்களை பாராட்டினால் அவர்களை பின்பற்றும் எண்ணம் தாமாகவே வந்து விடும். நமக்கு வளர்ச்சி உறுதியாகும்.

அதை விட்டுவிட்டு இது என்ன பெரிய விடயமா? எனக்கு இது தெரியாதா? என்று எண்ண ஆரம்பித்தால் அது நம்மை அழுத்திப்பிடித்து கீழேயே வைத்திருக்கும்.

ஒரு நல்ல மேடைப்பேச்சைக் கேட்க நேர்ந்தால் ச்சே, இங்கிருந்தவர்களை எல்லாம் எப்படி இந்த மனிதர் வாரிசட்டைப் பைக்குள் போட்டுக் கொண்டுவிட்டார்! என்று பொறாமைப்படாமல் என்னமாய் பேசினார்! எப்பேர்ப்பட்ட திறமை! இதற்காக இவர் எவ்வளவு உழைத்திருப்பார்; பாடுபட்டிருப்பார்! என்கிற கோணத்தில் சிந்திக்க ஆரம்பிக்க வேண்டும். அப்படிச் சிந்திக்க ஆரம்பித்தால்தான் அவர் சொன்ன விடயங்கள்மீது நமக்கு கவனம் போகும்.

ஈரத்தையெல்லாம் நொடியில் ஈர்த்துக் கொள்ளும் பிளாட்டிங்பேப்பர் போல நல்ல விடயங்களையெல்லாம் ஈர்த்துக் கொள்ளும் மனப் பக்குவம் நமக்கு வந்து விட்டால் அந்த உணர்வு இரத்தத்தில் கலந்து போய், அவசியமானபோதெல்லாம் வெளிப்படும்.

நல்ல விடயங்களையும் நல்லவர்களையும் பார்த்து நாம் எப்போது வியக்கவும் லயிக்கவும் ஆரம்பிக்கிறோமோ, அப்போதே நாம் வெற்றிப் பாதையில் காலடி எடுத்து வைத்துவிட்டோம் என்று பொருள்.

லேனா தமிழ்வாணன்

# எதிர்பாராத வகையில் இலங்கையில் ஏற்படவுள்ள பாரிய அரசியல் மாற்றம்

(கொழும்பு)

இம்மாதம் 30ஆம் திகதியின் பின்னர் எவரும் எதிர்பார்க்காத பாரிய அரசியல் மாற்றமொன்று இடம்பெறும் என கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

மத்திய வங்கி பிணைமுறி தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை எதிர்வரும் 30ஆம் திகதி ஜனாதிபதியிடம் ஒப்படைக்கப்படவுள்ளது. இந்த விசாரணை அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் எவரும் எதிர்பார்க்காத பாரியளவிலான அரசியல் மாற்றமொன்று நாட்டில் இடம்பெறும் என அரசியல் விமர்சகர்கள் எதிர்வு கூறியுள்ளனர்.

அறிக்கையின் அடிப்படையில் குற்றவாளிகளுக்கு கடுமையான தண்டனை விதிக்கப்படும் என எதிர் பார்க்கப்படுகிறது. ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிரான தரப்புக்களை வலுப்படுத்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

ஒட்டுமொத்த நாட்டையும் உள்ளடக்கக்கூடிய வகையிலான ஜனாதிபதியின் தலைமையில் விவசாய திட்டமொன்று முன்னெடுக்கப்படவுள்ளதாக அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் 2020ஆம் ஆண்டு வரையில் இந்த கூட்டணி அரசாங்கத்தை அசைக்க முடியாது என ஜனாதிபதியும் பிரதமரும் அடிக்கடி மேடைகளில் கூறி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# ரணில்-மனோ பேச்சு தோல்வி

## கொழும்பில் குகவரதன் போட்டி



(கொழும்பு)

அமைச்சர் மனோ கணேசன் தலைமையிலான ஜனநாயக மக்கள் முன்னணி, எதிர்வரும் உள்ளூராட்சி மன்ற தேர்தலில் கொழும்பு மாநகர சபையில் தனித்து போட்டியிடவுள்ளது. இதன் மூலம் இரண்டு தசாப்தங்களின் பின்னர் தமிழர் ஒருவரின் கைகளுக்கு கொழும்பு மாநகர சபை கிடைக்கும் சூழல் உருவாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கட்சியின் முதன்மை வேட்பாளராக போட்டியிடும் சண். குகவரதன், இது தொடர்பில் தெரிவிக்கையில்,

ஆசனப் பங்கீடு தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இடம்பெற்ற பேச்சுவார்த்தை தோல்வியில் முடிவடைந்ததால் இத்தீர்மானத்தை எடுத்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

ஜனநாயக மக்கள் முன்னணியானது, ஏற்கனவே கடந்த 2011ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் ஏணி சின்னத்தில் போட்டியிட்டு ஆறு ஆசனங்களைப் பெற்று தமது பலத்தை நிரூபித்திருந்தது. அந்தவகையில், கொழும்பு மாநகர சபையில் மீண்டும் தமது பலத்தை நிரூபிப்போம் என்று சண். குகவரதன் நம்பிக்கை தெரிவித்தார்.



ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் கே. கணேசலிங்கம் என்பவர் கடந்த 96-97 ஆம் ஆண்டு காலப் பகுதியில் கொழும்பு மாநகர முதல்வராக கடமையாற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# பரீட்சை சேவை ஆசிரிய கொடுப்பனவுகளை அதிகரிக்க கோரிக்கை

(கொழும்பு)

பரீட்சை சேவையில் ஈடுபடும் ஆசியர்களின் கொடுப்பனவுகளை அதிகரிக்க வேண்டும் என ஆசிரியர்கள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

அவ்வாறு கொடுப்பனவுகள் அதிகரிக்கப்படாத பட்சத்தில் எதிர்காலங்களில் ஆசிரியர்கள் பரீட்சை சேவையில் ஈடுபடுவதை தவிர்க்க நேரிடும் என ஆசிரிய சங்கத்தின் பிரதம செயலாளர் மகிந்த ஜெயசிங்க தெரிவித்துள்ளார். (இ-7)

# ஆட்டோ பற்றரி திருட்டு

(கரணவாய்)

வீட்டில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஆட்டோவின் பற்றரி திருடப்பட்டுள்ளது.

மந்திகை, தேவரன் பகுதியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வழமையாக வீட்டின் பின்புறம் ஆட்டோ நிறுத்தப்படுவதாகவும் அவ்வாறு நிறுத்தப்பட்டிருந்த ஆட்டோவின் பற்றரி திருடப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

இது தொடர்பில் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (இ-60)



மட்டக்களப்பு - புனித லூர்து அன்னை ஆலயத்தில் அமைக்கப்பட்ட மிகவும் உயரமான கிறிஸ்மஸ் மரம் மக்கள் பார்வைக்காக திறந்துவைக்கப்பட்டுள்ளது. புனித லூர்து அன்னை ஆலயத்தின் பங்குமக்கள் மற்றும் அப்பிரதேச இளைஞர்களின் முயற்சியினால் அமைக்கப்பட்ட இந்த கிறிஸ்மஸ் மரம் நேற்று முன்தினம் சனிக்கிழமை திறந்துவைக்கப்பட்டது. மின்குமிழ்கள் மூலம் அலங்கரிக்கப்பட்ட 42 அடி உயரமான இந்த மரத்தை, ஆலயத்தின் பங்குத்தந்தை ரொசான் அடிகளார் விசேட ஆராதனை நடத்தி திறந்துவைத்தார்.



பாரம்பரிய உணவுகளின் கண்காட்சி இமையாணன் மேற்கு கிராம அபிவிருத்திச் சங்க கட்டடத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்றது. ஜே/359 கிராம அலுவலர் க.சுதர்சன் தலைமையில் நடைபெற்ற இவ் உணவுக் கண்காட்சியில் பிரதம விருந்தினராக கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி எஸ்.சுதேஸ்குமார் கலந்து கொண்டார். இந்நிகழ்வில குடும்ப நல உத்தியோகத்தர்கள், மாதர் சங்கத்தினர் கலந்து சிறப்பித்தனர். குரக்கன், திணை, அவரை, அரிசிமா, ஒடியல்மா என்பவற்றில் தயாரிக்கப்பட்ட உணவுகள் காட்சிப்படுத்தப்பட்டன. பார்வையாளர்களுக்கு இலைக்கஞ்சியும் வழங்கப்பட்டது. (படங்கள்:-கரணவாய் செய்தியாளர்)






KBS Engineers நிறுவனத்தின் அனுசரணையுடன் வையகத்தில் வளமுடன் வாழும் கலை அமைப்பினரால் இலவச மருத்துவமுகாம் நல்லூர் சங்கிலியன் மன்றத்தில் அண்மையில் நடைபெற்றது. இம் மருத்துவ முகாமில் குடைச்சுவாமி சேவை நிலைய மருத்துவரும் லங்கா சித்த மருத்துவ கல்லூரி வைத்தியர்களும் மாணவர்களும் மற்றும் யோகவர்ம சிகிச்சையாளர்களும் கலந்து சேவையாற்றினர். குடைகள் அன்பளிப்பாக வழங்கப்பட்டதுடன் இலவச யோகா தியான வகுப்புக்களுக்கு பதிவுகளும் மேற்கொள்ளப்பட்டன.

# மார்கழி மாத இராசி பலன்கள்

## 16.12.2017-13.01.2018



### உதவி செய்வதையே குறிக்கோளாகக் கொண்ட ரிஷப இராசி வாசகர்களே!

மார்கழி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்திலேயே சனிப்பெயர்ச்சி நிகழவிருக்கின்றது. இதுவரை சப்தம ஸ்தானத்தில் சஞ்சரித்து வந்த சனிபகவான், கண்டகச் சனியாக இருந்து பல காரியங்களில் தடைகளைக் கொடுத்து வந்திருக்கலாம். தொழில் மற்றும் உத்தியோகத்தில் உடன் பணிபுரிபவர்களால் தொல்லைகளையும், ஆரோக்கியத்தில் குறைபாடுகளையும் கொடுத்திருக்கலாம். இனி அந்த நிலையில் மாற்றம் ஏற்படப் போகிறது.

இருந்தாலும் 'அஷ்டமத்துச் சனியாக வருகிறாரே என்ன செய்யப் போகிறாரோ' என்ற கவலை உங்களுக்குள் எழலாம். உங்கள் இராசிநாதன் சுக்ரனுக்கு சனி நட்புக் கிரகம் ஆவார். எனவே மற்றவர்களுக்கு பாதிப்பு ஏற்படும் அளவிற்கு உங்களுக்குப் பாதிப்பு ஏற்படாது. மேலும் இதுவரை உங்கள் இராசியையே சனி பார்த்து வந்ததால், அதன் பார்வையின் பலனால் பல விதங்களிலும் பாதிப்பு ஏற்பட்டிருக்கலாம்.

இப்பொழுது சனியின் பார்வை உங்கள் இராசிக்கு 2,5,10 ஆகிய இடங்களில் பதிகிறது. எனவே குடும்பத்தில் சுபகாரியப் பேச்சுகள் கைகூடுவதற்கான அறிகுறி தென்படும். பிள்ளைகளின் படிப்பு சம்பந்தமாக எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். வெளி நாடு சென்று படிக்க வேண்டும் என்று விரும்பும் உங்கள் பிள்ளைகளுக்கு உறுதுணையாக இருப்பீர்கள். உத்தியோகத்தைப் பொறுத்த வரை நல்ல மாற்றங்கள் உருவாகும். 'அஷ்டமத்துச் சனியிலா இவ்வளவு நன்மைகள் வந்து சேருகின்றது?' என்று நீங்கள் சிந்திப்பீர்கள். மேலதிகாரிகள் உங்களுக்கு இணக்கமாக நடந்து கொள்வர். சக பணியாளர்களின் ஒத்துழைப்பு கூடுதலாகக் கிடைக்கும்.

இதுவரை எண்ணாற்ற வேலைகளுக்கு விண்ணப்பித்தும் எதுவும் கிடைக்கவில்லையே என்று எண்ணியவர்களுக்கு, இப்பொழுது நல்ல வேலை கிடைப்பதற்கான அறிகுறி தென்படும். அரசு வேலைக்கு முயற்சித்தவர்களுக்கு இதுவரை அந்த வேலை தடைப்பட்டிருக்கலாம். ஆனால் இப்பொழுது தேர்விலும் வெற்றி பெற்று, தேர்ந்தெடுக்கப்பட்ட வேலையும் கிடைத்து மகிழ்ச்சியடையப் போகிறீர்கள்.

சனியை, அது பெயர்ச்சியாகும் 19-12-2017 அன்று ஆலயங்களுக்குச் சென்று வழிபடுவது சிறப்பு. எள்தீபம் ஏற்றி சனி கவசம் பாடி வழிபடுங்கள். அஷ்டம ஸ்தானத்தில் அடியெடுத்து வைத்திருக்கும் சனி, வெற்றிகள் குவிய வழிவகுத்துக் கொடுப்பார்.

தனுசு சுக்ரனின் சஞ்சாரம்

டிசெம்பர் 21ஆம் திகதி தனுசு இராசிக்கு சுக்ரன் செல்கிறார். உங்கள் இராசிக்கு அதிபதியாகவும், 6ஆம் இடத்திற்கு அதிபதியாகவும் விளங்குபவர் சுக்ரன். 6ஆம் இடத்திற்கு அதிபதியான சுக்ரன், 8ஆம் இடத்தில் சஞ்சரிக்கப் போவதால் 'கெட்டவன் கெட்டிடில் கிட்டிடும் ராஜயோகம்' என்பதற்கேற்ப விபரீத ராஜ யோகம் செயற்படப் போகிறது. எனவே திட்டமிடாது செய்யும் காரியங்களில் வெற்றி




கிடைக்கும். தேவைக்கேற்ற பணம் வந்து கொண்டேயிருக்கும். உத்தியோக உயர்வு, ஊதிய உயர்வு போன்றவை உங்களைத் தேடி வரலாம். புதிய வாகனம் வாங்குவதில் கவனம் செலுத்துவீர்கள்.

பொன்னான புதனின் பெயர்ச்சி!

ஜனவரி 4ஆம் திகதி தனுசு இராசிக்கு புதன் செல்கிறார். உங்கள் இராசிக்கு 2,5 ஆகிய இடங்களுக்கு அதிபதியான புதன், தனுசு இராசியில் சஞ்சரிக்கும் சூரியனோடு சேரப் போகிறார். இதன் விளைவாக புத-ஆதித்ய யோகம் உருவாகின்றது. எனவே பொருளாதாரப் பிரச்சினை அகலும். சொத்துகள் வாங்கும் யோகம் உண்டு. மாமன், மைத்துனர் வழியில் ஏற்பட்ட மனக்கசப்புகள் அகலும். வீட்டிற்குத் தேவையான விலையுயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். ஆடை, ஆபரண சேர்க்கையும் ஏற்படும். அரசியல்வாதிகளுக்கு புதிய பொறுப்புகளும், பதவிகளும் வந்து சேரலாம். வங்கிகளில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். இம் மாதம் சனிக்கிழமை தோறும் அனுமன் வழிபாட்டை மேற்கொள்வது நல்லது.

பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்!

அஷ்டமத்துச் சனியின் ஆதிக்கம் இம்மாதம் தொடங்குகிறது. எனவே ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துவது நல்லது. ஆகாரத்தில் கட்டுப்பாடு வைத்துக்கொண்டால் ஆரோக்கியம் சீராகும். குடும்பச்சுமை கூடும். விரயங்கள் அதிகரிக்கும். கணவன் - மனைவிக்குள் ஒற்றுமை பலப்பட, விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது. பிள்ளைகளை உங்கள் மேற்பார்வையில் வைத்துக் கொள்ளுங்கள். தாய்வழி ஆதரவு பெருகும். அதே நேரம் சகோதர வர்க்கத்தினரின் குணங்களில் மாறுபாடு ஏற்படலாம். அவர்களை அனுசரித்துச் சென்றால்தான் ஆதரவு கிடைக்கும்.

வேலைக்காக முயற்சி செய்து கொண்டிருப்பவர்களுக்குப் புதிய இடத்தில் வேலை கிடைக்கும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு எதிர்பார்த்த இடமாற்றங்கள் உண்டு. சனிவழிபாடு சந்தோஷம் வழங்கும்.

## எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும்!

(தொடரும்)

# பீரிஸின் புதிய கட்சி நிலைத்து நிற்காது

## அமைச்சர் அமரவீர தெரிவிப்பு

(கொழும்பு)

உள்ளூராட்சி தேர்தலுக்கு பின்னர் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியும் மேலும் சக்திமயப்படுத்தப்பட்டு முன்னோக்கி பயணிக்கும் என அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.



அம்பாந்தோட்டையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மக்கள் சந்திப்பு ஒன்றிலேயே அவர் இதனை கூறினார்.

தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர், மகிந்த தரப்புடன் இடம்பெற்ற பேச்சுவார்த்தைகளில், சுதந்திரக்கட்சியின் பிரதிநிதிகள் மிக வெளிப்படையாக செயற்பட்டதாக கூறினார்.

ஆனால் அவர்கள் அந்த வெளிப்படைத்தன்மையை எமது இயலாமை என கருதியதாகவும் அவர் கூறினார்.

எனவே தற்போது ஜி.எல். பீரிஸ் தலைமையில் உருவாகியுள்ள புதிய கட்சி ஒருபோதும் நிலைத்து நிற்காது எனவும், அது வெகுவிரைவில் காணாமல் போவது உறுதி எனவும் அவர் தெரிவித்தார்.

மேலும் நாட்டை பிரிப்பதாகவும், புலிகள் அமைப்பு மீள் உருவாக்கம் பெறுவதாகவும் ஊடகங்கள் செய்திகளை வெளியிடும் போது அதற்கு எதிராக அரசாங்கம் குரல் கொடுக்க தவறியுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# ஐ.தே.க. பிரசாரம் ஜனவரியில்

(கொழும்பு)

உள்ளூராட்சித் தேர்தலுக்கான பிரசார நடவடிக்கைகளை ஐக்கிய தேசியக் கட்சி எதிர்வரும் ஜனவரி மாதம் இரண்டாம் வாரத்திலிருந்து ஆரம்பிக்கவுள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசனையின் படி ஐ.தே.கட்சியின் தலைமையகமான சிறிகொத்தா பிரசாரத்துக்கான ஏற்பாடுகளைச் செய்து வருகிறது.

ஐ.தே கட்சி தொகுதி அமைப்பாளர்களை இம்மாதம் 22 ஆம் திகதி கொழும்புக்கு அழைத்து பிரசார நடவடிக்கைகள் தொடர்பாக ஆலோசனை வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சிறிகொத்தா வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-7)

# இரட்டைப் பிரஜாவுரிமையுள்ள அரச உயர் அதிகாரிகளுக்கு எதிராகவும் அரசு நடவடிக்கை

(கொழும்பு)

அரசியல்வாதிகளுக்குப் புறம்பாக அரச அதிகாரிகளிடையேயும் இரட்டைப் பிரஜாவுரிமை உள்ளவர்கள் காணப்படுவதாக முறைப்பாடுகள் பல கிடைக்கப் பெற்றுள்ளதாகவும், இது தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதாகவும் தெரிய வருகிறது.

இவர்கள் பற்றிய தகவல்களை உடனடியாக திரட்டுமாறும், இவர்களது விடயத்தில் உரிய நடவடிக்கைகள் குறித்து கவனம் செலுத்துமாறும் சம்பந்தப்பட்ட துறைக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

இரட்டைப் பிரஜாவுரிமையுடன் அரச உயர் பதவிகளில் உள்ளவர்கள் தீர்மானங்கள் எடுக்கும் போது தான் சார்ந்துள்ள நாட்டுக்கு சார்பாக நடவடிக்கைகளை முன்னெடுப்பதாக முறைப்பாடுகள் அதிகம் கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் அத்தகவல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (இ-7)

# 270 மில்லியன் டொலர் இலங்கைக்குக் கடன்

(கொழும்பு)

ஆசிய அபிவிருத்தி வங்கி இலங்கை அரசாங்கத்துக்கு 270 மில்லியன் டொலர் கடனை வழங்க உடன்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இதற்கான மூன்று ஒப்பந்தங்களில் அரசாங்கம் கைச்சாத்திட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

இக்கடன் தொகை வீதி அமைப்பு முதலீட்டுத் திட்டத்திற்கும், யாழ்ப்பாணம், கிளிநொச்சி நீர் விநியோகத் திட்டத்திற்கும் பயன்படுத்தப்படவுள்ளதாகவும் குறிப்பிடப்படுகின்றது. (இ-7)



யாழ்.பல்கலைக்கழக பாதுகாப்பு நலன்புரி சங்கத்தின் வருடாந்த ஒளிவிழா நேற்று முன்தினம் நடைபெற்றபோது... (படங்கள்:-கஜானி)

# வெறுப்புணர்வை தூண்ட வேண்டாம்

(கொழும்பு)

தேர்தலில் வெற்றி பெற வேண்டும் என்ற ஒரே நோக்கில் கவர்ச்சிக்காக வன்முறைகளையும் வெறுப்புணர்வுகளையும் தூண்ட வேண்டாம் என தமது அமைப்பு வேட்பாளர்களிடம் உருக்கமான வேண்டுகோளை விடுப்பதாக ஏறாவூர் பள்ளிவாசல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனத் தலைவரும், கல்வியியற் கல்லூரி விரிவுரையாளருமான அஷ்ஷெய்ஹ் எம்.எல். அப்துல் வாஜித் தெரிவித்தார்.

ஏறாவூர் நகரசபை மற்றும் ஏறாவூர்ப்பற்று பிரதேச சபை என்பனவற்றின் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுடனான கலந்துரையாடல் ஏறாவூர் ஜாமிஉல் அக்பர் ஜூம்மாப் பள்ளிவாசலில் நேற்று ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்றது.

இதில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். தேர்தல் கால பிரசாரத்தின்போது எதிர்த்தரப்பு வேட்பாளர்களை எவ்வாறேனும் தோற்கடிக்க வேண்டும் என்பதற்காக வீண் விரயம் செய்தல், பொய், புறம், அபாண்டம், இட்டுக் கட்டுதல், சமூகக் குழப்பங்களை ஏற்படுத்துதல், சக சமூகத்தாரிடையே இன விரோத செயற்பாடுகளைத் தூண்டுதல் என்பனவற்றைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

மாறாக இத்தகைய இழிநிலை அரசியல் முன்னெடுப்புக்களுக்குப் பதிலாக ஏனைய அபேட்சகர்களையும், வாக்காளர்களையும் கண்ணியமாக மதித்து தாங்களால் மக்களுக்கும் பிரதேசத்திற்கும் ஆற்றப்பட உத்தேசித்துள்ள சேவைகளைப் பற்றிய ஆக்கபூர்வமான விடயங்களை வேட்பாளர்கள் முன்வைக்க வேண்டும் என்ற அபார எதிர்பார்ப்பு மக்களிடத்திலும் பொது நல நிறுவனங்களிடமும் தேர்தல் திணைக்களத்திடமும் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டும் பொலிஸாரிடமும் உள்ளன என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# ஓய்வூதியக் கொடுப்பனவுக்காக 23 ஆயிரம் கோடி ரூபாய் நிதி

(கொழும்பு)

அடுத்த வருடத்தில் ஓய்வூதியக் கொடுப்பனவைச் செலுத்துவதற்காக அரசாங்கம் 23 ஆயிரம் கோடி ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளது.

இது குறித்து ஓய்வூதியக் கொடுப்பனவு பணிப்பாளர் நாயகம் ஜகத் டயஸ் தெரிவிக்கையில்,இவ்வருடத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையிலும் பார்க்க 1300 கோடி ரூபாய் அடுத்த வருடத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதுவரையில் ஓய்வூதியக் கொடுப்பனவைப் பெறுவோரின் எண்ணிக்கை 6 இலட்சத்து 30 ஆயிரமாகும். வருடந்தோறும் 25 ஆயிரத்திற்கும் 30 ஆயிரத்திற்கும் இடைப்பட்டோர் இதில் புதிதாக இணைந்து கொள்கின்றனர் என்று தெரிவித்தார். (இ-7)

# பல நிகழ்வுகள் இடைநிறுத்தம் தேர்தல்கள் ஆணைக்குழு தலையீடு

(கொழும்பு)

மாத்தளையிலுள்ள பல பிரதேசங்களில் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களிலுள்ள பிள்ளைகளுக்கு புத்தகங்கள் விநியோகிக்கும் பல நிகழ்வுகள் தேர்தல்கள் ஆணைக்குழுவின் உத்தரவின் பேரில் நிறுத்தப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். பிரதி அமைச்சர் லக்ஷ்மன் வசந்தவின் தலைமையில் இந்த நிகழ்வுகள் நடைபெற ஏற்பாடாகியிருந்தன.

தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் இதுபோன்ற நடவடிக்கைகளை முன்னெடுப்பது சட்டவிரோதமானது என தேர்தல்கள் ஆணைக்குழு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (இ-7)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1282

## விதுஷனா

உண்டியலில் போடும் காசை உணவின்றி தவிப்போர்க்கு கொடுங்கள்



உங்களைத் தெய்வமாக வணங்குவார்கள்

## கங்கா

நல்லதையே தனியாக செய்பவன்
தண்டிக்கப்படுகிறான்

தவறையே கூட்டமாக
செய்பவர்கள்
தப்பித்துக்கொள்கிறார்கள்

## அருண்

வறுமை இல்லாமல் வாழ வேண்டும் என்று கடவுளிடம் வேண்டுதை விட



வறுமையைக் கொடுத்தாலும் தாங்கக்கூடிய சக்தியையும் சமாளிக்கக்கூடிய திறனையும் கொடு என்று வேண்டுவதே சிறந்தது

## ஜானகி

கண் மருத்துவமனைகளில் இன்று...



## சீதா

கரண்டி ரொம்ப
வெயிட்டு என்பது
கடையில் வாங்கும்
போது தெரியாது!

வீட்ல வாங்கும்
போதுதான் தெரியுது
என்னா அடி...

## அபி

சாமி சாப்பாட்டுக்கே ரொம்ப கஷ்டப்படறேன்



என் மனைவி சமைத்த சாப்பாட்டை சாப்பிட்டா இன்னும் கஷ்டப்படுவ, வேண்டாம்... நானே சாப்பிட்டுக் கஷ்டப்படுகிறேன்

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# வடக்கில் போரால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த பல திட்டங்கள்




**முதலாவது வடக்கு மாகாண சபையின் 112ஆவது அமர்வு 12.12.2017 அன்று மாகாண பேரவைச் சபா மண்டபத்தில் முத லமைச்சரால் சமர்ப்பிக்கப்பட்ட இலக்கு மற்றும் பெறு பேறுகளை அடிப்படையாகக் கொண்ட 2018ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத்திட்ட முதலமைச்சரின் அமைச்சறிக்கை**

இவ்வாறு தேவைகள் அதிகரித்துக் காணப்பட்டபோதும் வீடமைப்புத் திட்டத்திற்காக 2018 ஆம் ஆண்டுக்கு 30 மில்லியன் ரூபா மட்டுமே ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

8. சட்டமும் ஒழுங்கும்

வடமாகாணத்தில், சட்டமும் ஒழுங்கும் பேணப்படுவதற்கான சூழலை ஏற்படுத்துவதனை நோக்கமாக கொண்டு சிவில் பாதுகாப்பு குழுவினை அமைப்பதற்காக எம்மால் தயாரிக்கப்பட்ட கருத்தாவணம் (Concept Note) இனை அடிப்படையாகக் கொண்டு இவ்வருடம் 4 குழுக்கூட்டங்கள் எமது அமைச்சினால் ஒழுங்கமைக்கப்பட்டு சட்டம் மற்றும் சமாதானம் என்பனவற்றை செயற்படுத்துவதற்கான பொதுவான விடயங்களும், மாகாணத்தில் எதிர்நோக்கப்படும் சட்ட ரீதியற்ற மண் அகழ்வு, போதைப்பொருள் பாவனை, பெண்கள் மற்றும் சிறுவர் துஷ்பிரயோகம், களவு கொள்ளை போன்றவற்றை கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் தொடர்பாக பொலிஸ்மா அதிபர் மற்றும் சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் ஆகியோருடன் ஆராய்ந்து சட்டம், ஒழுங்கை நிலை நிறுத்துவதற்கான முன்னேற்றப்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அத்துடன் பின்வரும் விடயங்கள் மீது முக்கிய கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

➢ அண்மைக்காலத்தில் அதிகரித்துவரும் கட்டுக்கடங்காத இளைஞர் கும்பல்களின் வாள்வெட்டுச் சம்பவங்கள் தொடர்பில் காரணமானவர்களை கண்டறிதல் மற்றும் மக்கள் மனதில் குடிகொண்டுள்ள அச்சத்தை நீக்குவதற்காக பொலிஸார் எடுத்த, எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை ஆராய்ந்தமை.

➢ குற்றமிழைத்தவர்களை கைது செய்வதில் ஏற்பட்டுள்ள நீண்டகால தாமதங்கள் தொடர்பாக ஆராய்ந்தமை.

➢ பொலிஸாரினால் ஆட்சேபணை தெரிவிக்காத விடயங்களில் நீதிமன்ற விடுவிப்புகளுக்கு பொலிஸாரினால் கையூட்டு பெறப்படுதல் தொடர்பான வதந்திகள்.

➢ பொதுமக்களிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்ற ஒத்துழைப்புகளும் பொலிஸாருக்குக் கொடுக்கும் தகவல்களை வெளிப்படுத்தல் தொடர்பாகப் பாதுகாப்பும்.

➢ தேவையற்ற விதத்தில் மற்றும் சந்தேகத்திற்கு இடமாக நடமாடுபவர்களை கைது செய்கை.

➢ மது பாவனைக்கு உட்பட்டு மோட்டார் வாகனம் செலுத்தும் இளைஞர்களை கைது செய்தல் மற்றும் தலைக்கவசம், வீதி விதிகளை அனுசரிக்காதது தொடர்பான சம்பவங்கள்.

➢ "அக்கரை" கடற்கரைப் பிரதேசத்தில் எதிர்ப்பாளரினால் சமுதாய கலாசார சீர்கேடுகள் தொடர்பில் முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் பொலிஸ் போஸ்ட் (Police Post) நிறுவுகை.

➢ பெருமளவில் கடத்தப்பட்டு கொண்டுவரப்படும் போதைப் பொருட்களில் பறிமுதல் செய்யப்பட்டவற்றில் அழிப்பு தொடர்பான நடவடிக்கைகள்.

➢ விழிப்புக் குழுக்களை நவீன தொழில்நுட்ப வசதியுடன் அமர்த்தக்கூடிய விதத்தில் பொலிஸாரிடம் உள்ள நிகழ்ச்சித்திட்டம்.

➢ சட்ட ரீதியற்ற கால்நடைகள், மண் அகழ்வு மற்றும் மரக் கடத்தல்கள் தொடர்பான சட்ட நடவடிக்கைகள்

➢ இயற்கை அனர்த்தங்களை எதிர்கொள்ளக்கூடிய விதத்தில் பொலிஸாரின் தயார்படுத்தல் சம்பந்தமாக

மேலும், 2018 ஆம் ஆண்டில் எமது பகுதியில் தமிழ்மொழி மூலமான பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்படல் வேண்டும் என்பதனை வலியுறுத்தி பிரதி பொலிஸ்மா அதிபருடன் மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடல்களின் நிமித்தம் எமது அமைச்சினால் கோரப்பட்ட விண்ணப்பங்களின் பிரகாரம் இதுவரை கிடைக்கப்பெற்ற 166 விண்ணப்பங்கள் யாழ்.மாவட்ட சிரேஷ்ட பொலிஸ்மா அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட்டது. ஆனாலும் எதிர்பார்க்கப்பட்ட விண்ணப்பங்கள் கிடைக்கப் பெறவில்லை என்பதுடன் இத்துறைக்கான இளைஞர் யுவதிகளுக்கான விருப்பத் தேர்வு குறைவாக இருப்பது வெளிப்படுகிறது. எனினும் தொடர்ந்து தகைமையுடைய விண்ணப்பதாரிகளை அடையாளம் காண நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

மனிதவள மேம்படுத்துகை

எமது அமைச்சினதும் அதன் கீழ் வரும் திணைக்களங்களினதும் மொத்த அனுமதிக்கப்பட்ட ஆளணி 896 ஆகும். எனினும் தற்சமயம் கடமையாற்றிக் கொண்டிருக்கும் உண்மையான ஆளணியினர் 746 ஆக உள்ளது. எனவே 150 அலுவலர்களின் தேவை வெற்றிடமாக காணப்படுகின்றது. இவர்கள் ஆரம்ப நிலை, இரண்டாம் நிலை, மூன்றாம் நிலை மற்றும் நிறைவேற்று அலுவலர் வகுதியை சேர்ந்தவர்களாக இருப்பினும் திணைக்களங்களினது வினைத்திறனான செயற்பாட்டிற்கு இவ் வெற்றிடங்கள் நிரப்படட வேண்டியது அவசியம் அலுவர்களிற்கான இயலளவு விருத்தி பயிற்சித் திட்டங்களும் தொழிற்றுறையு டன் இணைந்ததாக வழங்க அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

2017 ஆம் ஆண்டில் எமது அமைச்சின் நோக்கெல்லைக்குள் வரும் பின்வரும் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளது.

| நியமன வகை | முதலமைச்சரின் அமைச்சு | உள்ளூராட்சி | காணி நிர்வாகம் | வீதி அபிவிருத்தி | கிராம அபிவிருத்தி |
|---|---|---|---|---|---|
| அபிவிருத்தி உத்தியோகத்தர் | 2 | 1 | 9 | 2 | 8 |
| கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் | - | - | - | - | 4 |
| காணி வெளிக்கள போதனா ஆசிரியர் | - | - | 5 | - | - |
| காரியாலய சேவகர் | - | 1 | - | 1 | 1 |
| சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் | - | 7 | - | - | - |
| வருமான வரிப்பரிசோதகர் | - | 5 | - | - | - |
| நூலகர் | - | 2 | - | - | - |
| மொத்தம் | 2 | 16 | 14 | 3 | 13 |

மேற்படி 48 நியமனங்களில் எமது அமைச்சின் எல்லையின் கீழ் 26 நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன. மிகுதி 22 நியமன ங்கள் மாகாணப் பொது நிர்வாக நியமன அதிகாரத்தின் கீழ் வழங்கப்பட்டது.

9. முதலீட்டு முன்னெடுப்புகள் (Invertment initiatives)

போருக்கு பின்னரான வடமாகாணத்தின் பொருளாதார அபிவிருத்தியை இலக்குவைக்கும் நோக்கில் முதலீட்டாளர்களால் சமர்ப்பிக்கப்படும் கருத்திட்டங்களை ஊக்குவிக்க வேண்டிய தேவை எமக்கு உண்டு. எனினும் இத்திட்டங்களினால் எமது பொருளாதார அபிவிருத்தியை அடையக் கூடிய சாத்தியங்கள் தொடர்பாகவும் வேலை வாய்ப்புக்களை உருவாக்கி எம் மக்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்தக்கூடிய வழிமுறைகள் தொடர்பாகவும் ஆழமாக ஆராய வேண்டிய அவசியம் காணப்படுவதுடன் இத் திட்டங்களினால் எமது வளங்கள் சுரண்டப்படுவதிலிருந்தும் சுற்றுச் சூழல் மேலும் பாதிக்கப்படுவதில் இருந்தும் தடுக்கும் வழிமுறைகள் தொடர்பாகவும் நாம் மிகுந்த கவனம் செலுத்த வேண்டியுள்ளது. இந்த அணுகுமுறையினூடாக எம்மிடம் சமர்ப்பிக்கப்படும் முதலீட்டாளர்களின் திட்ட முன்மொழிவுகள் அத் துறை சார்ந்த விற்பன்னர்கள் மூலம் ஆராய்ந்து அவர்களின் சிபார்சுடன் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

நிறைவுரை

வட மாகாணம் நீண்ட கால போர் அனர்த்தங்களிலிருந்து இயல்பு நிலை மீளல், பொருளாதார மீளுகை, புனர்நிர்மாணம், மீள் குடியேற்றம் எனும் வகையில் வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. பொருளாதார தன்னிறைவு, வளர்ச்சி எனும் போக்கை அடைவதற்கு துறை சார் வளர்ச்சி இலக்குகளை அடையாளம் காண வேண்டிய தேவைப்பாடுகள் அவசியமாகின்றது. இலங்கையின் அதிகூடிய மாவட்டங்களையும் இயற்கை வளங்களையும் கொண்ட வட மாகாணம் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் மத்திய வங்கி அறிக்கையின் பிரகாரம் 2013 இல் 3.4 சதவீதம், 2014 இல் 3.3 சதவீதம், 2015 இல் 3.5 சதவீதம், 2016 இல் 4.2 வீதமாக பங்களிப்பு காணப்பட்டது.

இந்நிலையில் மாற்றத்தினை கொண்டு வருவதற்கும் துறைசார் பொருளாதார பங்களிப்பு இலக்கை உயர்த்துவதற்குமான வகையில் இவ்வரவு-செலவுத் திட்டம் முன்னுரிமை அளித்தல் வேண்டும்.

அடையாளப்படுத்தப்பட்டுள்ள தேசிய புள்ளி விபரங்களின் பிரகாரம் முல்லைத்தீவு மாவட்டம் இரண்டாவது வறுமைத்தாக்கம் அதிகமானதாகவும் அதே போல் கிளிநொச்சி மாவட்டம் வறுமையின் தாக்கம் அதிகமானதாகவும் காட்டப்பட்டுள்ளன. பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு முன்னுரிமை அளித்து பிராந்திய வளர்ச்சியினை சமப்படுத்த வேண்டிய தேவைப்பாடு காணப்படுகின்றது.

இவ்வகையில் எமது அமைச்சின் நோக்கெல்லையில் பொருளாதார வளர்ச்சியில் பங்களிக்கும் துறைகளாகிய கிராம அபிவிருத்தி, உள்ளூராட்சி, வீதி அபிவிருத்தி, சுற்றுலாத் துறை, வீடமைப்பு, போக்குவரத்து என்பவற்றின் ஊடாக சமனான பிரதேச அபிவிருத்திக்கும் பொருளாதார வளர்ச்சிக்கும் பங்களிப்புச் செய்யும் வகையில் இவ் வழங்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டில் வேலைத்திட்டங்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

தேவைகள் அளவற்றவை. கிடைக்கின்ற வளங்களின் உச்சப் பயன்பாட்டை அடிப்படையாகக் கொண்டு எமது அமைச்சின் வரவு-செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. மேலும் அதன் பயனுறுதித்தன்மை வாய்ந்த நடைமுறைப்படுத்தலுக்கு அமைச்சின் ஆலோசனைக் குழுவின் வழிகாட்டுதல் இனி வரும் வருடத்திலும் எதிர்பார்க்கப்படுகிறது.

நீதியரசர்
சி.வி.விக்னேஸ்வரன்
முதலமைச்சர்
வடமாகாணம்

# ஜனாதிபதியின் வருகைக்கு எதிர்ப்பு தெரிவித்து ஏற்பாடு செய்யப்பட்ட போராட்டத்தால் குழப்பம்




(திருகோணமலை)

திருகோணமலை மாவட்ட ஆயர் நோயல் இமானுவேலின் அழைப்பின் பேரில் நத்தார் உற்சவத்திற்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று முன்தினம் திருகோணமலை கலாசார மண்டபத்திற்கு விஜயம்செய்திருந்தார்.

இந்நிலையில் படைத்தரப்பிடம் கையளிக்கப்பட்டு, கடத்தப்பட்டு காணாமலாக்கப்பட்ட உறவுகளை தேடியலையும் சங்கத்தினரால் கவனயீர்ப்பு போராட்டத்திற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

இந்தப் போராட்டத்திற்கு வலுச் சேர்க்கும் வகையில் வேலையற்ற பட்டதாரிகளும் ஆதரவு வழங்கியிருந்தனர்.

இருப்பினும் கவனயீர்ப்பு போராட்டத்தை நிறுத்துவதற்காக திருகோணமலை மாவட்ட பொலிஸ் தலைமையகத்தினால் பெறப்பட்ட நீதிமன்றத்தின் தடை உத்தரவு போராட்டத்தில் ஈடுபட முனைந்தவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மேலும், அமைதியான முறையில் போராட்டத்தை முன்னெடுக்கச்சென்ற காணாமலாக்கப்பட்ட உறவுகளை தேடியலையும் சங்கத்தவர்களின் போராட்டத்திற்கு பொலிஸாரால் தடைவிதிக்கப்பட்டதால் அப்பகுதியில் குழப்ப நிலை நிலவியதுடன், அங்கு பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டிருந்தது. (இ-7)

# 100 சீனத் தம்பதியினருக்கு கொழும்பில் திருமணம்




சீன நாட்டைச் சேர்ந்த 100 தம்பதிகள் இலங்கை சம்பிரதாயப்படி கொழும்பில் திருமணம் செய்துள்ளனர்.

இந்த வைபவம் கொழும்பு மாநகர சபை வளாகத்தில் நேற்று பிற்பகல் நடைபெற்றது. (இ-7)

# ஒருசோடி தோடு, 20000 ரூபா பணத்துடன் சந்தேக நபர் கைது

(சுரணவாய்)

ஒருசோடி தோடு மற்றும் பணத்துடன் சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடிய நபர் ஒருவர் வல்வெட்டித்துறைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் சனிக்கிழமை மதியம் தொண்டைமானாறு பகுதியில் வைத்து சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட இளவாலையைச் சேர்ந்த 37 வயதுடைய நபரிடம் ஒரு சோடி தோடு மற்றும் 20 ஆயிரம் ரூபாய் பணம் என்பன இருந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை மந்திகைப் பகுதியிலுள்ள வீடு ஒன்றில் நேற்று முன்தினம் சனிக்கிழமை அதிகாலை இடம்பெற்ற கொள்ளைச் சம்பவத்தில் கொள்ளையர்களால் எடுத்துச் செல்லப்பட்ட தோடாக இருக்கலாம் என்ற சந்தேகத்தில் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (இ-60)

# பொதுமக்களுக்கு நியாய விலையில் தேங்காயை வழங்க அரசாங்கம் திட்டம்

(கொழும்பு)

பொதுமக்களுக்கு நியாய விலையில் தேங்காயை வழங்கும் அரசாங்கத்தின் வேலைத்திட்டம் இன்று ஆரம்பமாகின்றது.

இது தொடர்பான ஆரம்ப வைபவம் அமைச்சர் நவீன் திஸாநாயக்க தலைமையில் பத்தரமுல்ல தெங்கு உற்பத்தி சபையின் கட்டட வளாகத்தில் இடம்பெறும்.

தேங்காய்க்கு ஆகக்கூடிய சில்லறை விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. சந்தையில் 75 ரூபாவுக்கு மேலதிகமாக தேங்காயை விற்பனை செய்ய முடியாது என்று தெங்கு உற்பத்தி சபையின் தலைவர் கபில யகந்தாவல தெரிவித்துள்ளார்.

அதிக விலைக்கு தேங்காயை விற்பனை செய்யும் வர்த்தகர்களை சட்டத்தின் முன் நிறுத்த சுற்றிவளைப்புகள் மேற்கொள்ளப்படுமென்று நுகர்வோர் அதிகார சபை தெரிவித்துள்ளது.

மொத்த விலையில் தேங்காய் தற்போது 40 ரூபாவுக்கும் 45 ரூபாவுக்கும் இடையில் காணப்படுகிறது. வர்த்தகர்கள் கூடுதலான இலாபத்தைப் பெற்றுக் கொள்வதற்காக தேங்காயின் விலையை அதிகரித்துள்ளனர். இதுவே தேங்காய் விலை அதிகரிப்பிற்குக் காரணம் என்று தெங்கு உற்பத்தி சபையின் கபில யகந்தாவல மேலும் தெரிவித்துள்ளார்.

தேங்காய்க்கான தட்டுப்பாடு நீங்கும் வரையில் தெங்குத் தொழிலுக்காக மாத்திரம் கொப்பராவை இறக்குமதி செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளது. தேங்காய் பால் தயாரிப்பாளர்களுக்கும் இதனுடன் தொடர்புடைய தொழில் துறையினருக்கும் இறக்குமதி வரி இன்றி அவற்றை இறக்குமதி செய்து கொள்ள முடியும். கொப்பராவை உடனடியாக துறைமுகத்திலிருந்து விடுவித்துக் கொள்ளும் வகையில் தேவையான அனுமதியை வழங்கவும் ஆலோசனை சுங்கப்பகுதியினருக்கு வழங்கப்பட்டுள்ளது. (இ-7)

# ரஷ்யாவால் இலங்கை தேயிலையை தொடர்ந்தும் புறக்கணிக்க முடியாது!

(கொழும்பு)

சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட தரத்திற்கு அமைய இலங்கை தேயிலையை உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்வதால் அவற்றில் பூச்சிகள் இருக்க வாய்ப்பில்லை என மலையக தேயிலைத் தோட்ட நிறுவனங்களின் தோட்ட அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இலங்கையிலிருந்து ரஷ்யாவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட தேயிலைகளில் ஒரு வகை பூச்சியினம் இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து இலங்கையின் தேயிலை உள்ளிட்ட விவசாயப் பொருட்களுக்கு ரஷ்யாவால் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து கருத்து வெளியிட்ட போதே அவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

முன்னதாக சில சந்தர்ப்பங்களில் தேயிலையில் கரப்பொத்தான், ஊழியர்களின் காதணிகள் போன்ற பொருட்கள் இருப்பது குறித்து, இலங்கை தேயிலை இறக்குமதியாளர்கள் சங்கத்திற்கு தெரியப்படுத்தப்பட்டதையடுத்து இந்த விடயம் குறித்து அதிக அவதானம் செலுத்தப்பட்டு இச் செயல் மீண்டும் நடைபெறா வண்ணம் அதிக கவனத்துடன் இருப்பதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்நிலையில் உரிய நடைமுறைகளைப் பின்பற்றாது இவ்வாறு ஒரு முடிவை ரஷ்யா எடுத்துள்ளமையானது அநீதியானது எனவும் மலையக தேயிலை தோட்ட நிறுவனங்களில் தோட்ட அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர். அத்துடன், இலங்கைத் தேயிலைக்கு சமமான வகையிலான மற்றொன்று ரஷ்யாவுக்கு இல்லை என்பதால், இந்தத் தடையை தொடர்ந்தும் முன்னெடுக்க முடியாது எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை ஏற்றுமதி செய்யப்பட்ட தேயிலையானது, மாதக்கணக்கில், பிற நாடுகள் ஊடாக பயணிப்பதால், அதனுள் பூச்சிகள் செல்ல வாய்ப்புகள் அதிகம் எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், குறித்த பூச்சி வகை இலங்கையில் மாத்திரம் உள்ள ஒன்று என நிரூபிப்பதில் ரஷ்யா தோல்வியடைந்துள்ளதாகவும், அவர்கள் தெரிவித்தனர். (இ)

# ரஷ்ய தடையால் 3 லட்சம் தொழிலாளர்கள் பாதிப்பு

(கொழும்பு)

ரஷ்யாவில் தேயிலை உட்பட பெருந்தோட்டப் பொருட்களுக்கு விதிக்கப்பட்ட தடை காரணமாக இலங்கையில் சுமார் 3 இலட்சம் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர் வீ.ராதா கிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

இந்தத் தடை உத்தரவானது,மலையக தோட்டத்தொழிலாளர்களின் வாழ்க்கையில் நேரடியாக பாதிப்புச் செலுத்தும் எனவும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார். (இ-7)



சுன்னாகம் பொது நூலகத்தின் வாசிப்பு மாத இறுதிநாள் நிகழ்வுகள் அண்மையில் நடைபெற்றது. இதில் தமிழோசை பட்டிமன்றக்குழுவினரின் சிறப்புப்பட்டிமன்றம் வைத்தியகலாநிதி அ. ஜெயக்குமாரன் தலைமையில் இடம்பெற்றது. நிகழ்வில் கலந்து கொண்டோரையும் படங்களில் காணலாம்.




# நரியும் அதன் நிழலும்


ஒரு நரி அதிகாலை எழுந்து மேற்கு நோக்கி வேட்டைக்குப் புறப்பட்டது. கிழக்கே இருந்து எழுந்த சூரிய ஒளியில் அதன் நிழல் வெகு நீளமாய் பெரியதாக தெரிந்தது. நரிக்கு ஏக குஷி. "நான் ரொம்பப் பெரிய ஆளாக்கும். அதுவும் இந்த காட்டின் ராஜாவாக உள்ள சிங்கத்தை விடவும் பெரியவனாக நான் உள்ளேன் என நினைத்துகொண்டே வேட்டைக்குச் சென்றது.

செல்லும் வழியில் நரி ஒரு சிங்கத்தை கண்டது. சிங்கமோ சற்று முன்னர் தான் ஒரு மானை வேட்டையாடி அதை உண்ட களைப்பில் மெதுவாக நடந்து வந்து கொண்டிருந்தது.

நரியும் தன்னுடைய நிழல் சிங்கத்தை விடவும் பெரியதாக இருப்பதாக நினைத்துக் கொண்டு சிங்கம் வரும் வழியில் நடந்து சென்றது. சிங்கமும் நரியை ஒன்றும் செய்யாமல் கடந்து சென்றது.

நரிக்கோ ரொம்ப சந்தோஷம். நாம் சிங்கத்தை விடவும் பெரியதாக இருபதனால் சிங்கம் என்னைக்கண்டு பயந்து சென்றது என நினைத்துக்கொண்டு அன்று மாலை தன்னுடைய வீட்டிற்கு சென்றது.

மாலை வீட்டிற்குச் சென்றதும் நரி காட்டில் உள்ள மிருகங்களை எல்லாம் அழைத்தது. அனைத்து மிருகங்களும் நரியின் கூட்டத்திற்கு வந்தன. நரி அனைத்து மிருகங்களிடமும், "இனி மேல் இந்த காட்டிற்கு நான் தான் ராஜா" என்றது.



யானையோ, "இதை நாங்கள் ஏற்க முடியாது என்றது. உடனே நரி காலையில் நடந்த சம்பவத்தைக் கூறி சிங்கமே என்னைக் பார்த்து பயந்து சென்றது" என்றது. கூட்டத்தில் இருந்த மானோ, "சிங்கத்தை உன் முன் மண்டியிடச் சொல் பிறகு உன்னை இந்த காட்டிற்கு ராஜவாக ஆக்குகிறோம்" என்றது.

அடுத்த நாள் நரி அந்த சிங்கத்தை தேடிச் சென்றது. செல்லும் வழியில் சிங்கம் தன்னுடைய பாதையை நோக்கி வருவதை கண்டு நரி கர்வத்துடன் நின்றது.

சிங்கம் வந்தவுடன் சிங்கத்தை பார்த்து, "என் முன்னாள் மண்டியிட்டுச் செல்" என்று நரி கூறியது.

சிங்கமோ மிகவும் கோவம் கொண்டு தரக்குறைவாக பேசிய நரியை பார்த்து, "உன்னை மன்னித்து விடுகிறேன் உடனே இங்கிருந்து செல்" என்றது.

நரியோ சிங்கம் தன்னை கண்டு பயந்து விட்டது என நினைத்து "முடியாது" என்று பதில் கூறிக் கொண்டே தன்னுடைய நிழலைப் பார்த்தது. அது மதிய நேரம் என்பதால் நிழல் உண்மையான அளவில் இருந்தது. அப்பொழுது தான் நரிக்கு புரிந்தது சூரிய ஒளியில் தான் தன்னுடைய நிழல் பெரியதாக இருந்தது என்று.

இதைப் பொறுத்துக் கொள்ள முடியாத சிங்கம் நரியை ஒரே அடியினால் கொன்றது.

**நீதி: முட்டாள் தனமாக பெரிதாக யோசித்தால் அதற்கான இழப்பும் பெரிதாக இருக்கும்.**




- ❖1271 - குப்லாய் கான் தனது சீனப் பேரரசின் பெயரை "யுவான்" என மாற்றிக் கொண்டான். யுவான் வம்சம் ஆரம்பமானது.
- ❖1505 - பெல்ஜிய மன்னன் ஜோன் IX வான் ஹோர்ன் தூக்கிலிடப்பட்டான்.
- ❖1642 - ஏபெல் டாஸ்மான் நியூசிலாந்தில் காலடி பதித்த முதலாவது ஐரோப்பியரானார்.
- ❖1787 - நியூ ஜெர்சி ஐக்கிய அமெரிக்காவில் 3வது மாநிலமாக இணைந்தது.
- ❖1911 - சேர் பொன்னம்பலம் இராமநாதன் இலங்கையின் சட்டசபைக்கு தேசியப் பிரதிநிதியாகத் தெரிவானார்.
- ❖1926 - துருக்கி கிரிகோரியன் நாட்காட்டிக்கு மாறியது.
- ❖1935 - இலங்கை சமசமாஜக் கட்சி என்ற இடதுசாரிக் கட்சி இலங்கையில் ஆரம்பிக்கப்பட்டது.
- ❖1941 - ஹொங்கொங்கின் பிரித்தானிய ஆளுநர் சரணடைய மறுத்ததைத் தொடர்ந்து ஜப்பான் ஹொங்கொங் மீது படையெடுத்தது.
- ❖1944 - இரண்டாம் உலகப் போர்: ஐக்கிய அமெரிக்காவின் விமானப்படை விமானங்கள் சீனாவின் ஹான்கோவ் நகரில் ஜப்பானிய இராணுவத்தளத்தின் மீது குண்டுகளை வீசின.
- ❖1961 - இந்தோனீசியா டச்சு நியூ கினியை ஆக்கிரமித்தது.
- ❖1966 - சனி கோளின் சந்திரன் எப்பிமேத்தியஸ் கண்டுபிடிக்கப்பட்டது.
- ❖1973 - சோவியத் விண்கலம் சோயுஸ் 13 வலண்டீன் லேபெடெவ், பியோத்தர் கிளீமுக் ஆகியோருடன் விண்ணுக்கு ஏவப்பட்டது.
- ❖1990 - ஈழப்போர்: இலங்கையின் திருகோணமலை இராணுவத் தளபதி லக்கி விஜயவர்த்தனா கண்ணிவெடித் தாக்குதலில் கொல்லப்பட்டார்.
- ❖1997 - எச்.டி.எம்.எல். 4.0 வெளியிடப்பட்டது.
- ❖1999 - ஈழப்போர்: கொழும்பு நகரசபை முன்றலில் நடைபெற்ற தேர்தல் பிரச்சார கூட்டத்தின் போது, ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக குமாரதுங்க மீது நடத்தப்பட்ட தற்கொலைத் தாக்குதலில் தனது வலது கண்ணை இழந்தார்.
- ❖2012 - தமிழ் விக்கிப்பீடியாவில் 50,000 வது கட்டுரை எழுதப்பட்டது.

**பிறப்புகள்**

- ❖1812 - என்றி பவர் ஐயர், தமிழறிஞர், விவிலியத்தைத் தமிழில் மொழி பெயர்த்த குழுவின் தலைவராகச் செயற்பட்டவர் (இ. 1885)
- ❖1822 - ஆறுமுக நாவலர், ஈழத்தின் சைவ எழுச்சியாளர் (இ. 1879)
- ❖1856 - ஜெ. ஜெ. தாம்சன், நோபல் பரிசு பெற்ற ஆங்கிலேய இயற்பியலாளர் (இ. 1940)
- ❖1863 - பிரான்ஸ் பேர்டினண்ட், ஆத்திரியாவின் முடிக்குரிய இளவரசர் (இ. 1914)
- ❖1878 - ஜோசப் ஸ்டாலின், சோவியத்-ரஷ்ய அரசியல்வாதி, சோவியத் ஒன்றியத்தின் 2வது அரசுத்தலைவர் (இ. 1953)
- ❖1930 - வி. பொன்னம்பலம், இலங்கை இடதுசாரி அரசியல்வாதி (இ. 1994)
- ❖1946 - நெல்லை க. பேரன், ஈழத்து எழுத்தாளர் (இ. 1991)
- ❖1950 - சரத் பொன்சேகா, இலங்கை இராணுவத் தலைவர், அரசியல்வாதி
- ❖1955 - விஜய் மல்லையா, இந்தியத் தொழிலதிபர், அரசியல்வாதி

**இறப்புகள்**

- ❖1111 - அல் கசாலி, பாரசீக மெய்யியலாளர் (பி. 1058)
- ❖1892 - இரிச்சர்டு ஓவன், ஆங்கிலேய உயிரியலாளர் (பி. 1804)
- ❖1990 - எஸ். எம். ராமநாதன், தமிழக நாடக, திரைப்பட நடிகர்
- ❖1998 - சி. சு. செல்லப்பா, தமிழக எழுத்தாளர், இலக்கிய விமர்சகர் (பி. 1912)

**சிறப்பு நாள்**

- ❖தேசிய நாள் (கத்தார்)
- ❖குடியரசு நாள் (நைஜர்)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 140 | 120 | 80 | 90 | 80 | 120 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 50 | 70 | 80 | 70 |
| பச்சைமிளகாய் | 450 | 350 | 300 | 350 | 500 | 400 |
| தக்காளி | 140 | 160 | 110 | 140 | 160 | 120 |
| பறவள்ளிக்கிழங்கு | 60 | 40 | 30 | 60 | 40 | 40 |
| கோவா | 100 | 160 | 80 | 140 | 160 | 120 |
| கரட் | 150 | 220 | 140 | 180 | 200 | 140 |
| பூசணி | 60 | 60 | 40 | 60 | 80 | 50 |
| புடோல் | 100 | 160 | 70 | 100 | 100 | 140 |
| வாழைக்காய் | 80 | 60 | 70 | 80 | 120 | 80 |
| சின்ன வெங்காயம் | 400 | 400 | 300 | 180 | 400 | 350 |
| பெரிய வெங்காயம் | 180 | 200 | 140 | 140 | 200 | 280 |
| பாகற்காய் | 300 | 300 | 250 | 180 | 400 | 250 |
| வெண்டிக்காய் | 120 | 150 | 100 | 100 | 160 | 120 |
| கருணைக்கிழங்கு | 80 | 150 | 50 | 60 | 100 | 50 |
| புடலங்காய் | 100 | 180 | 120 | 120 | 160 | 200 |
| லீக்ஸ் | 250 | 250 | 200 | 280 | 300 | 240 |
| பீற்றூட் | 200 | 200 | 140 | 160 | 200 | 140 |
| கறிமிளகாய் | 350 | 450 | 250 | 320 | 400 | 250 |
| முருங்கைக்காய் | — | — | 300 | 400 | 400 | — |
| போஞ்சி | 180 | 250 | 230 | 220 | 200 | 220 |
| கத்தரித்தம்பளா | 120 | 100 | 80 | 120 | 80 | 100 |
| சீனி 1பிடி | 50 | 50 | 40 | 100 | 50 | 40 |
| தேசிக்காய் | 80 | 30 | 40 | 60 | 80 | 60 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 100 | 70 | 100 | 75 | 100 |
| இராசவள்ளி | 400 | 400 | 250 | — | 300 | 500 |
| வெங்காயத்தாள் | 350 | — | — | — | 240 | — |
| முள்ளங்கி | 120 | 150 | 70 | 120 | 120 | 100 |
| பொன்னாங்காணி | 40 | 60 | 30 | 50 | 40 | 40 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 20 | 20 | 30 |
| சாம்பலா | — | 100 | — | — | 100 | 80 |

தவறுகளை ஒப்புக் கொள்ளும் துணிவும் திருத்திக் கொள்ள விரும்பும் விருப்பமும்தான் வெற்றி பெறுவதற்கான இரு வழிகள் *- லெனின்*

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## அரசியல்வாதிகள் திருந்துவதற்கு சந்தர்ப்பம் கொடுக்க வேண்டும்

இரண்டாம் உலகப் போர் முடிந்த கையோடு பிரிட்டனில் நடந்த தேர்தலில் வின்சன்ட் சேர்ச்சில் தோற்றுப் போனார்.

இரண்டாம் உலகப் போரின் வெற்றிக்கு மூல காரணம் என்றிருந்த வின்சன்ட் சேர்ச்சில் தோற்றபோது பிரித்தானியப் பத்திரிகைகள் பலவாறாகத் தமது கருத்துக்களைப் பதிவு செய்தன.

அதில் ஒரு பத்திரிகை; இந்த உலகில் நன்றி மறந்தவர்கள் பிரித்தானிய மக்கள், அவர்களிடம் நன்றியுணர்வு இருந்திருந்தால் அவர்கள் வின்சன்ட் சேர்ச்சிலுக்கே வாக்களித்திருப்பர் எனத் தனது கருத்தைப் பதிவு செய்தது.

அதேநேரத்தில் மற்றொரு பத்திரிகை; இந்த உலகில் மிகவும் புத்திசாலிகள் பிரித்தானிய மக்கள். ஏனெனில் போர் விருப்புக் கொண்ட வின்சன்ட் சேர்ச்சிலை அவர்கள் மீண்டும் தமது நாட்டுப் பிரதமராகத் தெரிவு செய்யாமல், சமாதான விருப்புடைய ஒருவரை பிரதமராகத் தெரிவு செய்தனர் என்று தனது கருத்தைப் பதிவாக்கியது.

இலங்கையிலும் கூட அப்படியானதொரு சூழ்நிலை இருந்ததென்பதை எவரும் மறந்துவிடக் கூடாது.

விடுதலைப் புலிகளுடன் யுத்தம் நடத்தி விடுதலைப் புலிகளைத் தோற்கடித்த மகிந்த ராஜபக்ஷவுக்கு தென்பகுதி மக்கள் உரிய மதிப்புக் கொடுத்தனராயினும் தொடர்ந்தும் அவர் ஆட்சிப் பீடத்தில் இருப்பதை அம் மக்கள் விரும்பவில்லை.

ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷ தோற்றுத் தனது வீட்டுக்குத் திரும்பிய பின்னர் அவர் வழங்கிய செவ்விகளை உற்றுநோக்கினால், அவர் மக்கள் மீது எந்தக் குறையையும் கூறவில்லை. மாறாக தான் தவறுவிட்டதாக ஓர் இடத்தில் ஏற்றுக் கொண்டார்.

இன்னொரு இடத்தில் தன்னுடன் இருந்தவர்கள் மக்கள் ஏற்றுக் கொள்ளும் வகையில் நடந்து கொள்ளவில்லை என்றார். இறுதியாக எங்களை மாற்றியமைத்து ஒரு புதிய பாதையில் பயணிக்கவுள்ளோம் என்றார்.

விடுதலைப் புலிகளைத் தோற்கடித்த பின்னர் மகிந்த ராஜபக்ஷவும் அவர் குடும்பத்தினரும் தம்மை எதுவும் செய்ய முடியாது என்ற கர்வத்தில் நடந்து கொண்டனர்.

தாம் நினைத்தால் எதுவும் செய்ய முடியும் என்பது போலவும் அவர்களின் செயற்பாடுகள் அமைந்திருந்தன.

இவற்றை அவதானித்த தென்பகுதி மக்களும் தென்பகுதி அரசியல் தலைவர்களும் மகிந்த ராஜபக்ஷ விடும் தவறுகளை அவர் உணரும் வகையில் செய்ய வேண்டும் என முடிவு செய்தனர்.

ஆட்சியில் இருத்தி தவறை உணர்த்துவது முடியாத காரியம். எனவே தேர்தலில் தோற்கடிப்பதன் மூலமே அவர் திருந்துவதற்கும் விட்ட தவறுகளை உணர்வதற்கும் சந்தர்ப்பம் ஏற்படும் எனக் கருதி, ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷவைத் தோற்கடித்தனர்.

இதனால் இரு நன்மைகள் ஏற்பட்டன. அதில் ஒன்று முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தனது தவறுகளை உணரத் தலைப்பட்டார்.

இரண்டாவது புதிய அரசு தன்னைச் சரியான பாதையில் வழிப்படுத்திச் செல்வதில் கடும் கருசனை காட்டத் தொடங்கியது.

ஆக, இதுபோல தமிழ் மக்களும் தங்கள் அரசியல் தலைவர்கள் திருந்துவதற்கும் தங்களை நேர்மையான பாதையில் வழிப்படுத்துவதற்கும் சந்தர்ப்பம் கொடுக்க வேண்டும்.

அந்தச் சந்தர்ப்பம் நிச்சயம் வாக்களிப்பாகவே இருக்க முடியும்.

# மனைவி, பிள்ளைகளுக்கு நஞ்சூட்டி தானும் தற்கொலைக்கு முயன்றவர் கொலை

அக்கரபத்தனை - ஊட்டு வள்ளி தோட்டத்தில் ஒருவர் கொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர் இருவரையும் எதிர்வரும் 29ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு, நுவரெலிய நீதவான் நீதிமன்ற நீதிபதி ருவான் இந்திக்க டி சில்வா உத்தரவிட்டுள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

கடந்த வெள்ளிக்கிழமை 36 வயதுடைய குறித்த குடும்பஸ்தர் ஒருவர் வறுமை காரணமாக தனது மனைவி மற்றும் பிள்ளைகளுக்கு நஞ்சு அருந்துமாறு வற்புறுத்தியதோடு, தானும் நஞ்சு அருந்தி அனைவரும் தற்கொலை செய்து கொள்வோம் எனக் கூறியுள்ளார்.

எனவே மனைவியுடன் கைகலப்பில் ஈடுபட்ட அவர், அயல் வீட்டிலிருந்த உறவினரினால் தாக்கப்பட்ட நிலையில், பலியாகியுள்ளதாக, பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

இதன்படி, இந்த சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட இரு இளைஞர்கள் தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (மு-1)

## சீன நாட்டவர் விபத்தில் பலி

கடவத்தை - கெரவலபிடிய அதிவேக பாதையில் பணியில் ஈடுபட்டிருந்த சீன நாட்டவர் ஒருவர் இயந்திர மொன்றில் இருந்து தவறி விழுந்து உயிரிழந்துள்ளார்.

அதிவேக வீதியில் கொங்கிரீட் தூண் இடும் பணியில் ஈடுபட்டிருந்தபோது சுமார் 15 அடி உயரத்தில் இருந்து விழுந்து 54 வயதுடைய குறித்த நபர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (மு-1)

## கரந்தாய் காணிப் பிரச்சினை இன்று விசாரணைக்கு வருகிறது

பளை கரந்தாய்ப் பகுதியில் தென்னை அபிவிருத்தி சபையினர் கிராம மக்களின் காணிகளை அடாத்தாகப் பிடித்து வைத்துள்ளனர் என யாழ்ப்பாணம் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறையிடப்பட்டது. இந்த முறைப்பாடு மீதான விசாரணை இன்று இடம்பெறவுள்ளது.

கிளிநொச்சி பச்சிலைப் பள்ளி பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட கரந்தாய்க் கிராமத்தில் போருக்குப் பின்னர் மக்கள் குடியேறியிருந்தனர். இந்த மக்களை தென்னைப் பயிர்ச்செய்கை சபையினர் அடாவடியாக வெளியேற்றியிருந்தனர். இந்தச் சம்பவம் 2015ஆம் ஆண்டு இடம்பெற்றது.

கரந்தாய்க் கிராமத்தில் 1976ஆம் ஆண்டு குடியேறிய மக்கள் இடம்பெயர்வுகளின் பின்னர் மீண்டும் 2010ஆம் ஆண்டு அப்பகுதியில் தமது சொந்த இடங்களில் குடியமர்ந்தனர். முழுமையான வீட்டுத் திட்டங்கள் கிடைக்காத காரணத்தால் குடிசைகளில் தமது வாழ்க்கையை நடத்தி வந்தனர். போருக்குப் பின்னர் அப்பகுதிக்குள் வந்த தென்னைப் பயிர்ச்செய்கை சபையினர் மக்களின் காணிகளை உள்ளடக்கி வேலிகளை அமைத்து அபகரிக்கும் முயற்சியில் ஈடுபட்டனர். இதனை அறிந்த மக்கள் தங்களுடைய காணிகளில் கொட்டில்களை அமைத்துத் தங்கியிருந்தனர்.

எனினும், கடந்த 2015 ஆம் ஆண்டு அப்பகுதிக்குள் வந்த சபை அதிகாரிகள் அடாவடித்தனமாக பளைப் பொலிஸாரின் உதவியுடன் குடிசைகளை அகற்றி தரைமட்டமாக்கினர். மக்களை அவ்விடத்தில் இருந்து வெளியேற்றினர். பலர் பளைப் பொலிஸாரினால் கைதாகியும் இருந்தனர். கைதுசெய்யப்பட்டவர்கள் கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர்.

நீதிமன்றில், அந்தக் காணிகள் மக்களுடையதாக இருந்தால் அதற்கான ஆவணங்களை மன்றில் சமர்ப்பிக்குமாறு கட்டளையிடப்பட்டது. கைது செய்யப்பட்டவர்கள் விடுதலை செய்யப்பட்டனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக ஏற்கெனவே யாழ்ப்பாணம் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் மக்கள் ஒரு முறைப்பாட்டைப் பதிவு செய்திருந்தனர். மேற்படி சம்பவத்தின் பின்னர் மக்கள் மீளவும் இரண்டாவது தடவையாகவும் முறைப்பாட்டைப் பதிவு செய்தனர்.

இந்த முறைப்பாடுகளை அடிப்படையாக வைத்து இன்றையதினம் விசாரணை நடைபெறவுள்ளது. தென்னை பயிர்ச்செய்கை சபையின் பிராந்திய முகாமையாளர் மற்றும் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் ஆகிய இருவரும் விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ளனர். (மு-1)

## பெண்ணை அச்சுறுத்தி வானை நோக்கி சுட்ட கும்பல்

காரில்சென்ற பெண்ணை அச்சுறுத்தியதோடு, ஆகாயத்தை நோக்கி துப்பாக்கியால் சுட்ட கும்பல் குறித்து விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக, மாரவில பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

கடந்த சனிக்கிழமை இரவு 8.30மணியளவில்இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மாரவில பகுதியைச் சேர்ந்த பெண் ஒருவர் வழங்கிய முறைப்பாட்டுக்கு அமையவே, இந்த விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மோட்டார் சைக்கிளில் வந்த நால்வரே இவ்வாறு தன்னை அச்சுறுத்தியதாகவும் அவர்களில் ஒருவரை தான் அடையாளம் கண்டுள்ளதாகவும் அப் பெண் தனது முறைப்பாட்டில் கூறியுள்ளார். (மு-1)

## அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்




**பெயர் சூட்டும் சடங்கு என்றால் என்ன?**

பெயர் சூட்டுதல் ஒரு சடங்காகும். பெயர் சூட்டுவது கொடி போடுவதைப் போன்ற ஒரு சடங்காகும். ஒவ்வொரு சாதிக்காரர்களும் அவரவர் வணங்கும் தெய்வத்தின் பெயரில் ஏதாவது ஒன்றைத்தான் குழந்தைக்குப் பெயராகச் சூட்டுகிறார்கள். பரமேஸ்வரன், பரமேஸ்வரி போன்ற பெயர்களைச் சூட்டுகிறார்கள்.

சிலர் பாட்டி, தாத்தாக்களின் பெயர்களை முதல் குழந்தைக்குச் சூட்டுவார்கள். சிலர் இறைவனின் பெயரைச் சூட்டினாலும் அழைக்கும்போது வெறு பெயரில் அழைப்பார்கள். கேசவன் என்று பெயர் சூட்டிவிட்டு கண்ணன் என்று அழைப்பார்கள். பழைய காலத்தில் அர்த்தமுள்ள பெயர்களைத்தான் குழந்தைகளுக்குச் சூட்டினார்கள்.

இன்று அப்படியல்ல. நாகரிகம் வளர்ந்ததால் பெயர் என்பது ஒரு எழுத்துக்குள் அடங்கி விட்டது. இன்றைய காலத்தில் ஆசாரங்களைக் கடைப்பிடிப்பது குறைந்து கொண்டே வருகிறது. (தொடரும்)

## வவுனியாவில் வெடிக்காத குண்டு கண்டுபிடிப்பு

வவுனியா, திருநாவற்குளத்தில் வெடிக்காத நிலையில் மோட்டார் குண்டு ஒன்று நேற்று மீட்கப்பட்டுள்ளது.


வவுனியா, திருநாவற்குளம் பகுதியில் உள்ள வீட்டு காணி ஒன்றை துப்புரவு செய்தபோது வெடிக்காத நிலையில் மோட்டார் குண்டு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

தொடர்ந்து வவுனியா பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டதையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் அதனை அகற்ற நடவடிக்கை எடுத்துள்ளனர்.

குறித்த மோட்டார் குண்டு செயலிழந்த நிலையிலேயே காணப்பட்டதாகவும், இதற்கு முன்னர் இந்த வீட்டினை விடுதலைப் புலிகள் அமைப்பினைச் சேர்ந்தவர்களும் அதனைத் தொடர்ந்து பொலிஸாரும் பயன்படுத்தினர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (மு-1)

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## ஆராய்ச்சி, முயற்சி, வெற்றி



கவலை என்பது மனித சக்தியைக் குன்றச் செய்யும் அறிவின் திசை மாற்றமேயாகும். ஒரு நிமிடம் கூடக் கவலை என்ற பாதைக்கு எண்ண வேகத்தை விட வேண்டாம். துணிவும், விழிப்பும் கொண்டு முயற்சியாக மாற்றிக் கொள்வதே சிந்தனையாளர்களின் கடமை. கவலை என்பது உடல், அறிவு, குடும்பம், ஊர், உலகம் என்ற துறைகள் அனைத்திற்கும் மனிதனுக்கு நஷ்டமே தரும். முயற்சி எவ்வகையிலேயும் லாபமே தரும்.

இயற்கை வளம் என்ற இன்பப் பேரூற்று மக்களின் அறியாமை என்ற அடுக்குப் பாறைகளால் பலதுறைகளில் மறைக்கப்பட்டுள்ளது. அறிவின் விளக்கமான துணிவு என்ற திருகுயந்திரம் கொண்டு வேண்டிய அளவில் அவ்வின்பத்தை அனுபவிக்கலாம். தேவையுணர்வு, சந்தர்ப்பம் என்பனவற்றால் செயல்களும், செயல்களால் உடலுக்கும், அறிவிற்கும் ஒருவிதமான பழக்கமும் ஏற்பட்டு அப்பழக்கத்திலிருந்து விடுபட முடியாமல் எண்ணமும் உடலியக்கமும் நடைபெற்று வருதல் மனிதருக்கு இயல்பு என்றாலும், சிந்தனை, துணிவு, விடாமுயற்சி என்பனவற்றின் மூலம் பழக்கத்தை மாற்றி வாழ்வில் மறுமலர்ச்சி ஏற்படுத்திக் கொள்ள முடியும்.

ஆராய்ச்சி! முயற்சி!! வெற்றி!!! என்ற மந்திரத்தைத் தினந்தோறும் பல தடவை, நேரம் கிடைக்கும் போதெல்லாம் சில நாட்களுக்குச் செபித்துக் கொண்டே வரக் கவலை என்ற வியாதியும் ஒழியும். வாழ்வில் ஒரு புதிய தெளிவான பாதை திறக்கப்படும்.

# மைதானத்தில் மாரடைப்பு மரணமடைந்த இளம் வீரர்



கேரளாவில் நடந்த உள்ளூர் கிரிக்கெட் போட்டியின் போது இளம் வீரர் ஒருவர் மைதானத்திலேயே மாரடைப்பு ஏற்பட்டு உயிரிழந்துள்ளது சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

கேரளா மாநிலம் கசர் கோட்டில் உள்ள மஞ சேஸ்வர் மெய்யபடவு பள்ளி மைதானத்தில் உள்ளூர் கிரிக்கெட் பிரீமியர் லீக் போட்டி நடைபெற்றது.

போட்டியின் இறுதி ஓவரை வீசிக் கொண்டிருந்த பத்மநாபா ஜொடுகல்லு (வயது-25) என்ற வீரர் மாரடைப்பு காரணமாக மைதானத்திலேயே சுருண்டு விழுந்தார்.

இதையடுத்து மைதானத்தில் இருந்த சக வீரர்கள் பத்மநாபாவை தூக்கி கொண்டு வைத்தியசாலை நோக்கி விரைந்தனர்.

ஆனால், வைத்தியசாலைக்கு செல்லும் வழியிலேயே பத்மநாபா பரிதாபமாக உயிரிழந்தார்.

இந்த சோக சம்பவத்தை அடுத்து குறித்த கிரிக்கெட் தொடர் இரத்து செய்யப்பட்டுள்ளது. (க)

# இத்தாலியில் திருமணம் இதுதான் காரணம்




இந்திய அணியின் தலைவரான கோலி இத்தாலியில் திருமணம் செய்து கொண்டதற்கு ஊடகங்கள்தான் காரணம் என்று டென்னிஸ் வீராங்கனை சானியா மிர்சா கூறியுள்ளார்.

கோலி-அனுஷ்கா சர்மாவின் திருமணம் சமீபத்தில் இத்தாலியில் நடைபெற்றது.

இவர்கள் ஏன் இத்தாலியில் திருமணம்செய்து கொண்டனர். இந்தியாவில் எத்தனையோ இடங்கள் இருக்கின்றன. ஏன்? என்ற கேள்வி பலரிடையேயெழுந்து வருகிறது.

இந்நிலையில் 7 வருடங்களுக்கு முன் பாகிஸ்தான் அணி வீரரான மலிக்கை திருமணம் செய்து கொண்ட, இந்திய டென்னிஸ் வீராங்கனை சானியா மிர்சா கோலி-அனுஷ்கா திருமணம் பற்றி கூறியுள்ளார்.

இது குறித்து அவர் கூறுகையில், விராட் கோலி, அனுஷ்கா சர்மா திருமண விடயம் ஊடக விவகாரமாகி விட்டது.

இதனை புரிந்து கொள்வதாகக் கூறிய டென்னிஸ் நட்சத்திரம் சானியா மிர்சா, ஒரு கட்டத்தில் ஊடகத்தை விராட் கோலி, அனுஷ்கா சர்மா சந்தித்தாக வேண்டும்.

இருவரும் திருமணம் செய்து கொண்டது நல்லதே. தங்களைச் சுற்றி ஊடகங்கள் மொய்ப்பதை இருவருமே அறிவர். அதனால்தான் இத்தாலிக்குச் சென்று திருமணம் செய்து கொண்டனர் .

ஆனால் ஏதோ ஒரு கட்டத்தில் ஊடகங்களை இருவரும் சந்தித்துத்தான் ஆக வேண்டும். பிரபலங்களின் திருமணங்கள் எப்போதும் சிக்கல் நிறைந்ததே என்று கூறியுள்ளார். (க)

# எனக்கு இனி இடமில்லை அதிரடி வீரர் பிராவோ



மேற்கிந்திய தீவுகள் அணியின் தலைசிறந்த சகல துறை வீரராக திகழ்ந்தவர் வெயின் பிராவோ. டெஸ்ட் போட்டியில் விளையாடாமல் ஒருநாள் மற்றும் இருபது-20 கிரிக்கெட் தொடரில் மட்டுமே பங்கேற்று வந்தார். மேலும், பல்வேறு கிரிக்கெட் வாரியத்தால் நடத்தப்படும்இருபது-20 லீக் தொடரில் முக்கிய வீரராக பங்கேற்று வந்தார். கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் நடைபெற்ற பிக்போஸ் தொடரின்போது தொடைப்பகுதியில் ஏற்பட்ட காயம் காரணமாக நீண்டகாலமாக கிரிக்கெட் விளையாடாமல் இருந்து வந்தார்.

தற்போது காயத்தில் இருந்து மீண்டுள்ள வெயின் பிராவோ மேற்கிந்திய தீவுகள் அணிக்காக விளையாட விரும்பினார். ஜனவரியில் தொடங்கும் நியூசிலாந்துக்கு எதிரான ஒருநாள் தொடரில் விளையாட விரும்பினார். அணியில் இடம் கிடைக்கும் என அதிக நம்பிக்கையில் இருந்தார். ஆனால் அணியில் இடம் கிடைக்கவில்லை. இந்நிலையில் இனிமேல் மேற்கிந்திய தீவுகள் அணிக்கு திரும்புவது சந்தேகம் என பிராவோ கூறியுள்ளார்.

34வயதுவெயின்பிராவோ கூறுகையில், "சர்வதேச கிரிக்கெட் போட்டியில் மேற்கிந்திய தீவுகள் அணியில் இருந்து நான் நீக்கப்பட்டு இருக்கிறேன். நல்ல உடல் தகுதியுடன் இருந்த போதும் என்னை சேர்க்கவில்லை.

எனவே மீண்டும் மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கு திரும்ப முடியும் என்று நினைக்கவில்லை. என்னால் எத்தனை ஆண்டு காலம் கிரிக்கெட் விளையாட முடியுமோ? அத்தனை காலம்வரை தொடர்ந்து மற்ற போட்டிகளில் விளையாடுவேன்" என்றார்.

கடந்த ஆண்டு செப்டெம்பர் மாதம் நடந்த பாகிஸ்தானுக்கு எதிரான 20 ஓவர் போட்டி தொடரில் வெயின் பிராவோ மேற்கிந்திய தீவுகள் அணியில் இடம் பிடித்தார்.

அதன் பிறகு அவருக்கு அணியில் இடம் கிடைக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (க)

# விராட் குடிக்கும் தண்ணீரின் விலை




இந்திய கிரிக்கெட் அணித்தலைவர் விராட் கோலி தனது உடலை கட்டுக்கோப்பாக வைத்து சக வீரர்களுக்கு முன்னுதாரணமாக இருந்து வருகிறார்.

இவர் எடுத்துக்கொள்ளும் உணவுகள், செய்யும் உடற்பயிற்சிகள் குறித்து அவ்வப்போது தனது சமூக வலைத்தள பக்கத்தில் பதிவேற்றம் செய்து வருகிறார்.

இவர், Evian என்னும் தண்ணீரை குடிப்பதை பழக்கமாக வைத்துள்ளாராம்.

பிரான்ஸில் தயாரிக்கப்படும் Evian தண்ணீர், பிரான்சில் கிராமப்புற பகுதியில் உள்ள ஒரு இயற்கை நீரூற்றில் இருந்து தண்ணீர் நிரப்பப்படுவதாக கூறப்படுகிறது.

ஒரு லீற்றர் Evian தண்ணீர் போத்தலின் விலை கிட்டத்தட்ட ரூ. 600க்கு விற்கப்படுவது குறிப்பிடத்தக்கது. (க)

# கிளப் உலகக் கோப்பை வென்றது ரியல் மட்ரிட்



கிளப் அணிகளுக்கு இடையிலான இறுதிப் போட்டி பொது மைதானமான டுபாயில் உள்ள ஷெயத் ஸ்போர்ட்ஸ் சிட்டி ஸ்டேடியத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. இதில் ஸ்பெயின் நாட்டின் முன்னணி அணியான ரியல் மட்ரிட்டும், பிரேசில் நாட்டின் சிறந்த அணியான க்ரேமியோ அணியும் பலப்பரீட்சை நடத்தின.

ரியல் மட்ரிட் அணியின் வேகத்திற்கு க்ரேமியோ வீரர்களால் ஈடுகொடுக்க முடியவில்லை. ரொனால்டோ, இஸ்கோ, மோட்ரிக் போன்றோர் க்ரேமியோ கோல் எல்லையை நோக்கிய பந்தை அடித்துக் கொண்டே இருந்தனர். சுமார் 20 ஷாட்டுகள் அடித்திருப்பார்கள். பெரும்பாலான வாய்ப்புகளை க்ரேமியோ கோல் கீப்பர் தடுத்தார். ஏராளமான வாய்ப்புகள் கோல் கம்பத்தில் பட்டும், கோல் கம்பத்திற்கு மேலும் சென்றன. இதனால் ரியல் மட்ரிட் அணி வீரர்கள் விரக்தியடைந்தனர்.

ஆட்டத்தின் 53-வது நிமிடத்தில் ரியல் மட்ரிட் அணிக்கு 'ப்ரீ ஹிக்' கிடைத்தது. இதைச் சரியாக பயன்படுத்தி கிறிஸ்டியானோ ரொனால்டோ கோல் அடித்தார். இதனால் ரியல் மட்ரிட் அணி 1-0 என வெற்றி பெற்று கோப்பையை கைப்பற்றியது. கடந்த நான்கு ஆண்டுகளில் 3-வது முறையாக ரியல் மட்ரிட் கிளப் உலகக்கோப்பையை கைப்பற்றியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (க)

# வர்ணனை பதவியைவிட பயிற்சியாளர் பதவி சிறந்தது

## ட்ராவிட்



இந்திய கிரிக்கெட் அணியின் 'தடுப்புச் சுவர்' என்று செல்லமாக அழைக்கப்பட்டவர் ராகுல் டிராவிட். 44 வயதாகும் இவர், கடந்த 2012-ம் ஆண்டு அடிலெய்டில் நடைபெற்ற டெஸ்டோடு ஓய்வு பெற்றார். 164 டெஸ்ட், 344 ஒருநாள் மற்றும் ஒரே யொரு இருபது-20 கிரிக்கெட் போட்டியில் விளையாடியுள்ளார். டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டிகளில் 10 ஆயிரம் ஓட்டங்களுக்கு மேல் குவித்த வீரர்களில் டிராவிட்டும் ஒருவர்.

ஓய்வு பெற்ற பின்னர் ஒன்றிரண்டு கிரிக்கெட் போட்டிகளுக்கு வர்ணனையாளராக செயற்பட்டார். அதன் பின் 19 வயதிற்கு உட்பட்டோருக்கான இந்திய அணி மற்றும் இந்தியா 'ஏ' அணிகளுக்கு பயிற்சியாளராக பணிபுரிந்து வருகிறார்.

வர்ணனையாளராக செயற்படுவதை விட பயிற்சியாளராக செயற்படுவது மனநிறைவைத் தருகிறது என்று ராகுல் டிராவிட் குறிப்பிட்டுள்ளார். இதுகுறித்து ராகுல் டிராவிட் கூறுகையில் "நான் கிரிக்கெட் போட்டியில் இருந்து ஓய்வு பெற்ற பிறகு, சில போட்டிகளுக்கு வர்ணனையாளராகவும், செயற்பட்டேன்.

ஆனால், பயிற்சியாளர் பதவியை நான் சந்தோசமாக செய்து வருகிறேன். வர்ணனை தொழில் மிகவும் சிறப்பானதுதான். ஆனால், அதை செய்து முடித்த நாள் முடிவில் மனநிறைவை தருவதில்லை. இளைஞர்களோடு சேரும்போது, அவர்களுடன் சேர்ந்து வாழும் வாழ்க்கை எனக்கு அதிக அளவில் திருப்தியை கொடுக்கிறது.

நான் தற்போது ஏன் இதை செய்து கொண்டிருக்கிறேன் என்றால், வயதான பிறகு பயிற்சியாளர் பணியை தொடர்வது கடினமாகி விடும்" அதனால்தான் என்றார். (க)

## நாட்டின் பின்னடைவை...

யலை கொண்ட நாடாக இலங்கை காண ப்பட்டாலும், இந்த 70 வருட வரலாற்றில் இரண்டு அரசியல் சூழ்ச்சிகள் மேற்கொள்ள ப்பட்டு அவை தோல்வி கண்டிருந்தன. அத ற்கும் மேல் நாட்டில் பயங்கரவாதம் ஏற்பட் டது. அவற்றினால் நாடு என்ற ரீதியில் நாம் பின்தள்ளப்பட்டோம். சுதந்திரம் பெற்ற கால ப்பகுதியில் ஜப்பான் உள்ளிட்ட நாடுகளை விட பொருளாதாரத்தில் மேம்பட்டு காணப் பட்டோம். அவ்வாறு முன்னேற்றம் கண்ட இலங்கை தற்போது பின்னடைந்துள்ளது என பாராளுமன்ற சபாநாயகர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

காமினி திஸாநாயக்க மன்றத்தின் நிகழ் வில் பிரதம அதிதியாக பாராளுமன்ற சபா நாயகர் கரு ஜயசூரிய கலந்து கொண்டார்.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையா ற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

இலங்கை தற்போது பின்னடைந்துள் ளதை மாற்ற முடியுமா? என்பதே எமது தற் போதைய எதிர்பார்ப்பாகவுள்ளது. தேர்தல் கள் ஆணைக்குழு மற்றும் ஊழல் தொடர்பில் ஆராய ஒரு ஆணைக்குழு என பல சுயாதீன ஆணைக்குழுக்களை உருவாக்கி அவற்றை செயற்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ளோம்.

அதற்கமைய எதிர்காலத்தில் நீதியான தும், சுயாதீனதுமான தேர்தல் ஒன்று நடை பெறும் என நம்புகின்றேன். முன்னைய ஆட்சியில் தேர்தல் நடைபெற்ற விதம் தொட ர்பில் நீங்கள் அறிவீர்கள். இன்று அவ்வாறு அல்ல. அரச சொத்துக்களை வீணாக பயன் படுத்த முடியாது என்பதோடு பண வீண்விர யத்தையும் கட்டுப்படுத்தும் வகையில் தேர் தல் நடைபெறுகின்றது.

அவ்வாறான சூழலில் மக்கள் தமது பிரதி நிதிகளை தமது விருப்பத்திற்கு ஏற்ப தெரிவு செய்வதற்கான சந்தர்ப்பம் உள்ளது. இந்த நிலையில் நாட்டை மீண்டும் பிளவுபடுத்த, நாட்டில் இனவாதத்தை தூண்ட பலர் பல முயற்சிகளை எடுத்து வருகின்றனர். அதை எண்ணி நான் கவலையடைகின்றேன். இறந்த காலத்தை அழித்துக்கொண்டது போல எதிர்காலத்தையும் அழித்துக்கொள்ள இட மளிக்க முடியாது.

நாம் ஒவ்வொருவரும் பிறக்கும் போது இனத்தையோ மதத்தையோ கேட்பதில்லை. ஆகவே தேவையற்ற விதத்தில் நாட்டு மக் களை குழப்பி, அவர்களை தூண்டிவிடு வோர் நாட்டுக்கு துரோகம் செய்பவர்களாகவே கரு தப்படுவர் என்றார். (மு-1)

## 248 உள்ளூராட்சி...

ழமை நண்பகல் 12.00 மணியுடன் நிறைவு பெற்றது. 21 மாவட்டங்களில் 93 உள்ளூராட்சி மன்றங்களுக்காக இதன் போது வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள்ளப் ட்டன. 7 மாநகர சபைகள், 18 நகர சபைகள், 68 பிரதேச சபைகளுக்காக முதற்கட்டப் பணிகள் இதன் கீழ் இடம்பெற்றன. 30 அர சியல் கட்சிகளும், 49 சுயேச்சைக் குழுக்க ளும் முதல் கட்டத்திற்காக வேட்புமனுக்களை கையளித்தன.

வேட்புமனுக்கள் பொறுப்பேற்கப்பட்ட பின்னர், தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தேர்தல் நடை பெறும் திகதியை அறிவிப்பார். வேட்பு மனு க்களை ஏற்கும்பணிகள் இரண்டு கட்டத்தில் இடம்பெற்ற போதும் அனைத்து உள்ளூ ராட்சி மன்றங்களுக்கான தேர்தல் ஒரே தின த்திலேயே இடம்பெறும் என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப் பிரிய குறிப்பிட்டுள்ளார். (மு-1)

## ஆசிரியை உள்ளிட்ட...

பட்டன.

அங்கு பணியில் ஈடுபட்டிருந்த பிரதேச சபை ஊழியர்களை அந்தப் பகுதியைச் சேர் ந்த இருவர் தடுத்துள்ளனர். அது தொடர்பில் நல்லூர் பிரதேச சபையின் செயலாளரால் யாழ்ப்பாணம் பொலிஸில் முறைப்பாடு செய் யப்பட்டது.

சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணை களை முன்னெடுத்த பொலிஸார் பிரதேச சபை ஊழியர்களின் கடமைக்கு இடையூறு விளைவித்தனர் என்ற குற்றச்சாட்டில் இரு வரைக் கைது செய்தனர்.

கருப்பையா வீதி 338 மீற்றர் நீளத்தை யும் 12 மீற்றர் அகலத்தையும் கொண்டது என நல்லூர் பிரதேச சபையின் செயலாளர் தெரிவித்தார்.

எனினும் கருப்பையா வீதி 4 மீற்றர் அக லத்தை கொண்டது எனவும் மிகுதிப்பகுதி தனியாருக்கு சொந்தமானது என சந்தேக நபர்கள் கூறுகின்றனர்.

கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் ஆசி ரியை மற்றையவர் வங்கி ஊழியர் எனத் தெரிவிக்கப்பட்டது.

அவர்கள் யாழ்ப்பாணம் நீதவான் நீதி மன்றில் முற்படுத்தப்படுவர். இந்தப் பிணக்கு நீதிமன்றின் ஊடாகவே தீர்க்க முடியும் என்று பொலிஸார் தெரிவித்தனர். (மு-1)

## தேர்தலை பயன்...

ஹப்புத்தளையில் நேற்று நடைபெற்ற நிக ழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே, ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி மேலும் தெரிவித்த போது,

இந்தத் தேர்தலில் நாம் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பிற்காக வெற்றிலைச் சின்னத்திலும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி யாக கை சின்னத்திலும் ஒவ்வொரு பிரதேச த்தினதும் தன்மையைக் கவனத்தில்கொண்டு போட்டியிடுகின்றோம். நான் உங்களின் வீட் டிற்கு வந்ததாக கருதி வெற்றிலை மற்றும் கை சின்னங்களை ஏற்றுக்கொண்டு வெற்றி லைக்கு வாக்களிக்குமாறு நான் வேண்டு கோள் விடுக்கின்றேன். இந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் முடிவு ஆட்சியமைப்பதில் 20 வீதம் தாக்கம் செலுத்தும் என சிலர் கூறு கின்றனர் அதற்கு நான் பதில் வழங்க வேண்டும் என்றார். (மு-1)

## சிறு அரசியல் கட்சி...

முன்னிலைப்படுத்தாவிட்டால், சிறுகட்சி களுக்கு விமோசனம் கிடையாது. பொதுமக் கள் விரும்பியோ, விரும்பாமலோ சிறு கட்சி களிடம் சிறைக் கைதிகளாக இருந்துவருகி ன்றனர் என போக்குவரத்து அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

தற்போதைய ஆட்சியில், நான் தொங்கிக் கொண்டிருப்பதால் தான், ஊவா வெல்லஸ பல்கலைக்கழகத்தில் ஊடகத்துறையை முன்னின்று நடத்த முடியாமல் போய்விட் டது. எமது கட்சி ஆட்சி அமைந்திருக்குமேயா னால், மேற்கண்ட எனது வேலைத்திட்ட த்தை ஏற்படுத்தியிருப்பேன்.

சமூகங்களிடையே நல்லிணக்கம் உறு திப்படுத்தப்படவேண்டியது காலத்தின் அவசி யமாகும். இதனை அரச தலைவர் மைத்திரி பால சிறிசேன துரிதமாக முன்னெடுத்து வரு கின்றார்.

வாகன விபத்தொன்று ஏற்பட்டால் விபத் தில் காயப்பட்டவர் ஒரு இனமாகவும், விப த்தை ஏற்படுத்தியவர் ஒரு இனமாகவும் இரு ப்பாரேயானால், விபத்தில் காயப்பட்ட இனத் தைச் சேர்ந்தவர்கள் குறிப்பிட்டவாகனத்தை தீ வைப்பது, அவரது உடமைகளைச் சேதப் படுத்துவது, தாக்குவதால் இன முறுகல்கள், மதமுறுகல்கள் ஏற்பட்டு இன மற்றும் மத வாதிகளால் பெரும் பதற்றமும், பீதியும் ஏற்ப ட்டு, நாட்டில் அமைதியற்ற சூழல் ஏற்பட்டு வருகின்றது.

இது போன்று சிறுசிறு சம்பவங்கள் ஊதிப் பெருப்பிக்கப்படுகின்றன. இதனால் பெரும் அழிவை எமது நாடு எதிர்நோக்குகிறது. தமிழ், சிங்கள, முஸ்லிம் பாடசாலைகளிலும் மாணவர்கள் மத்தியில் ஆங்காங்கே இவ் வாறான சம்பவங்கள் இடம்பெற்றுக் கொண்டு தான் இருக்கின்றன.

இதுபோன்ற நிலை தொடர்வதற்கு அனு மதிக்கக்கூடாது. இந்த விடயத்தில் ஊடகவி யலாளர்கள் பொறுப்புடன் செயற்படல் வேண் டும். தேசியநல்லிணக்கம், தேசிய சகவாழ்வு ஆகியவற்றைமுன்னிலைப்படுத்திச் செயற் பட வேண்டியது காலத்தின் அவசிய தேவை.

எமது நாடு சுதந்திரமடையும் வேளை யில் அனைத்து இனங்களும் ஒன்றுபட்ட வகையிலேயே செயற்பட்டனர். ஆனால், காலப்போக்கில், பிரிவினைகள், பிளவுகள், முறுகல்கள் ஏற்படத் தொடங்கின. தற்போதும் நீறுபூத்தநெருப்பாக இருக்கும் நிலையை அவதானிக்க முடிகின்றது. இதற்கு முற்றுப் புள்ளி வைக்கவேண்டும்.

தேசிய நல்லிணக்கம், தேசிய சகவாழ்வு இந்நாட்டில் உறுதிப்படுத்தவேண்டும். கொசிப் ஜெனலிசம் என்ற ஊடக கலாசாரத்திலிருந்து ஊடகவியலாளர்கள் விடுபடல் வேண்டும் என்றார். (மு-1)

# புதிய யாப்புச் சீர்திருத்தம் தொடர்பில் கலந்துரையாடல்!

(கொழும்பு)

புதிய யாப்பு சீர் திருத்தம் தொடர்பில் மன் னாரில் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும், மக்கள் குழுக்களின் செயற்பாட்டாளர்களு க்கும் இடையிலான விசேட கலந்துரையா டல் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை மன் னார் சர்வோதயத்தில் இடம்பெற்ற போதும் அழைக்கப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் கள் எவரும் கலந்து கொள்ளவில்லை என தெரியவந்தது.

மன்னார் மாவட்ட சர்வோதய நிலை யத்தினால் இலங்கையில் தற்போது மேற் கொள்ளப்படுகின்ற யாப்பு சீர்திருத்த முறை தொடர்பாக மக்களை தெளிவுபடுத்துவதை பிர தான நோக்கமாக கொண்டு புதிய யாப்பு சீர்திரு த்த காலந்துரையாடல் சர்வோதய தேசோதய பிரிவினூடாக நேற்று முற்பகல் 10 மணியள வில் மன்னார் சர்வோதயத்தில் மாவட்ட இணைப்பாளர் எஸ்.யுகேந்திரன் தலைமை யில் இடம்பெற்றது.

இதன்போது புதிய யாப்பு சீர்திருத்தம் தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டதோடு குறி த்த யாப்பு சீர் திருத்தம் தொடர்பில் மக்கள் பிரதி நிதிகளிடம் விரிவான விளக்கத்தினை யும் மக்களின் கோரிக்கைகளையும் முன் வைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

ஆனாலும், அழைக்கப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் உரிய நேரத்தில் கலந்துரை யாடலில் கலந்து கொள்ளாத நிலையில் கல ந்து கொண்ட மக்கள் குழுக்களின் செயற் பாட்டாளர்கள் தமது கருத்துக்களுக்கு தீர் வைப் பெற்றுக்கொள்ளும் வகையில் ஏற்பா ட்டுக்குழுவினரிடம் எழுத்து மூலம் சமர்ப்பித் துள்ளமை குறிப்பிடத்தக்கது. (மு-1)

# தலையில் கல் விழுந்து ஆபத்தான நிலையில் இளைஞன்

மட்டக்களப்பில் மூன்றாவது அடுக்கு மாடி யிலிருந்து சீமெந்துக்கல் உச்சந் தலையில் விழுந்ததில் கட்டடத் தொழிலாளி ஒருவர் பட காயமடைந்து ஆபத்தான நிலையில் மட்ட க்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குறித்த சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ள தாக ஏறாவூர் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வந்தாறுமூலை கிழக்கு பல்கலைக்கழ கத்தில் கட்டட நிர்மாணப் பணிகளில் ஈடு பட்டிருந்த பிபிலை பிரதேசத்தைச் சேர்ந்த 23 வயதுடைய அரவிந்த் என்ற இளைஞனே இவ்வாறு படுகாயமடைந்து வைத்தியசா லையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதன்போது, படுகாயமடைந்த குறித்த இளைஞன் ஏறாவூர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச் சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தி யசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார் என தெரிவி க்கப்படுகின்றது.

மேலும் குறித்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப் பட்டு வருவதாக ஏறாவூர் பொலிஸார் தெரி வித்துள்ளனர். (மு-1)

## தகுதியானவர்களுக்கு...

கொண்டாலும் 2013ஆம் ஆண்டு மாகாண சபை தேர்தல் விஞ்ஞாபனத்தை அவர்கள் ஏற்கவேண்டும், ஏற்பார்கள் என நான் கரு துகிறேன் என தெரிவித்தார்.

எமது அரசியல் வாதிகளின் நடத்தையை அவதானித்த இளைஞர்கள் அரசியலுக்குள் புகுவதை வெறுக்கிறார்கள். அது தான் யதா ர்த்தம். நேர்மையானவர்கள் திறமையான வர்கள் தமக்கு அங்கு இடம் இல்லை என ஒதுங்கி போகும் ஒரு நிலை வந்துள்ளது.

அவர்களின் ஆதரவை பெற்று எமது அர சியலை மீள் நிர்மாணம் செய்வது எப்படி என்பது தான் நாம் சதாகாலமும் ஆராய்ந்து கொண்டு இருக்கிறோம். அதாவது நாம் என நான் எங்கும் குறிப்பிடுவது தமிழ் மக்கள் பேரவையை தான் குறிப்பிடுகிறேன்.

நேர்மையும் திறமையும் கொண்ட இளை ஞர்களை உள்ளீர்க்கக் கூடிய காலம் விரை வில் பரிணமிக்கும் என எதிர்பார்க்கிறோம். அவர்கள் அரசியலுக்கு வர வேண்டும். அத ற்கான சூழல் உருவாக்கப்பட வேண்டும், போகப் போக உருவாக்குவோம்.

மேலும் உள்ளூராட்சி தேர்தலில் உங் கள் பிரதேசத்தை உள்ளன்புடன் நேசிக்கும் ஒருவரை தேர்ந்தெடுங்கள். அவருக்கு இரு க்க வேண்டிய தகைமைகள் நேர்மை, திறமை மற்றும் ஊழலை வெறுக்கும் பாங்கு போன்ற வைகளே.

மக்களை நேசிப்பவராகவும் அவர் இரு க்கவேண்டும். எந்த கட்சி என்பது முக்கிய மான தல்ல. ஊழலற்ற உயர்ந்த குணங்கள் உடைய வேட்பாளர்களை தேர்ந்தெடுங்கள். கட்சி பிழைத்துவிட்டாலும் அவர்கள் அந்தக் கட்சியிடையே மக்கள் ஆதரவிருந்தால் கால க்கிரமத்தில் மாற்றி அமைப்பார்கள். மக் களை நேசிக்கும் அவர்கள் பாங்கும் ஊழல ற்ற அவர்களின் தன்மையும் அவர்களின் நேர்மையும் அதை செய்வன என மேலும் தெரிவித்தார்.

தென்னிலங்கை அரசியல் வாதிகள் கடும் போக்கு வாதியென கூறும் கருத்துக்கு பதில ளிக்கையில்,

நான் நாட்டு மக்களுக்கோ வெளிநாட்டு க்கோ இதுவரையில் தேர்தல் விஞ்ஞாபன த்தில் கூறப்படாத எந்தவொரு விடயத்தை யும் நான் கூறவில்லை. மாகாண மக்களின் எதிர்பார்ப்புக்களை எடுத்தியம்புவது கடும் போக்கு என்றால், தென்னிலங்கையில் உள் ளவர்கள் கூறுவதை ஏற்று நடப்பது தான் மென் போக்கு என்று கணிக்கிறார்களா? அவ்வா றான மென்போக்கை என்னால் எடுத்து நட க்க முடியாது. நான் அங்கு பிறந்து வளர்ந்த வன். ஆனால் எமது இனம் தென்னவர்களால் வெகு விரைவில் கபளீகரம் செய்யப்பட்டு விடும்.

எமது இனத்தின் நிலைத்த வாழ்வா தென் னிலங்கை எதிர்பார்க்கும் மென்போக்கா முக்கியம் என்பதை அவர்கள் தான் தீர்மா னக்க வேண்டும். அவ்வாறான மென்போக்கு எனக்கு தனிப்பட்ட நன்மைகளை தரும். மத்தியில் அமைச்சர் பதவியும் கிடைக்கும் ஆனால் எமது இனம் விலைபோய்விடும். சத்திரசிகிச்சை அமோக வெற்றி நோயாளர் இறந்துவிட்டார் என்ற நிலை ஏற்படும்.

தமிழ் கட்சிகளிடையே உள்ள குழப்ப நிலை பற்றி கருத்து தெரிவிக்கும் போது,

தமிழ் மக்கள் எங்கிருந்தாலும் அவர்கள் ஒரு குடும்பம், தமிழ் எமது தாய். ஆனால் அந்த தாயின் குழந்தைகளின் பிறவிக்குணம் ஒற் றுமையை நாடாது இருப்பது தான். அறிவு எம்மை முரண்பட வைக்கும். அன்பு ஒன்று தான் எங்களை ஒன்று சேர்க்க கூடியது என மேலும் தெரிவித்தார். (மு-9)

## பதின்நான்காயிரம்...

நடவடிக்கை குழுத் தகவல் வெளியிட்டு ள்ளது.

இலங்கைக்கு அண்மையில் பயணம் மேற்கொண்டிருந்த தன்னிச்சையான தடுப்பு கள் தொடர்பான ஐ.நா குழு கொழும்பில் நட த்திய ஊடக சந்திப்பில் இதனை கூறியுள் ளது.

18 வயதுக்கு உட்பட்ட ஆண் மற்றும் பெண சிறுவர்களான குறித்த 14 ஆயிரம் பேரும் 425 சிறுவர் பராமரிப்பு நிலையங்களில் வாழ்கின்றனர்.

இவற்றுள் 26 சிறுவர் பராமரிப்பு நிலை யங்கள் அரசாங்கத்தால் நடத்தப்படுவதாக வும் ஐக்கிய நாடுகள் குழு குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, அவர்கள் தொடர்பில் உட னடி மறுசீரமைப்புகள் அவசியம் என்றும் வலியுறுத்தியுள்ளது. (மு-1)

NEW SCIENCE WORLD
VICTORY MUST
Brown Road, Jaffna.

க.பொ.த(உ/த) 2018 உயிரியல்
மாதாந்தத் தொடர் பரீட்சை -நவ. 2017

| Index No. | Full Name | School | Marks | Rank |
|---|---|---|---|---|
| J/2149/B | ஆதிரை மணிவண்ணன் | J/M.L.C | 87 | 1 |
| J/2057/B | கிரேசியன் ஜெனோசன் | J/S.H.C | 86 | 2 |
| J/2334/B | பாஸ்கரன் பார்த்தீபன் | J/K.H.C | 86 | 2 |
| Mu/2389/B | சிவராஜா வினோதன் | Mu/M.C.C | 85 | 4 |
| J/0089/B | மாதங்கி தனவேந்தன் | J/V.G.H.S | 85 | 4 |
| J/2082/B | சிவகரன் பிரகாஸ் | J/K.H.C | 84 | 6 |
| J/2085/B | கதிர்காமநாதன் சாயிந்தன் | J/K.H.C | 82 | 7 |
| J/2294/B | றிஸ்மி லெஸ்லி பாஸ்கரதேவன் | J/V.G.H.S | 81 | 8 |
| J/2298/B | கஜானா சிவயோகராசா | J/K.H.C | 80 | 9 |
| J/2249/B | அபினயா சிறிதரன் | J/J.H.L.C | 79 | 10 |
| J/2110/B | டுஷாரா தருமரெத்தினம் | J/C.G.C | 75 | 11 |
| J/2081/B | நவராசா சங்கீர்த்தனன் | J/K.H.C | 75 | 11 |
| J/2552/B | சிறியதாஸ் துவாரகன் | J/K.H.C | 72 | 13 |
| J/2146/B | செளயந்தி காயாரோகணன் | J/C.G.C | 71 | 14 |
| J/2644/B | பாலசுப்பிரமணியம் யுகேந்திரன் | J/M.H.C | 69 | 15 |
| J/2679/B | பிரணவி கியூ லோறன்ஸ் ரெனாறன்ஸ் | J/K.H.C | 68 | 16 |
| J/2153/B | ஆரணி துரைசிங்கம் | J/K.H.C | 64 | 17 |
| Mu/2535/B | கார்த்திகா புவனேந்திரன் | Mu/P.C.C | 64 | 17 |
| Mu/0064/B | அனுஷிகா கிறிஸ்ரிமோகனதாஸ் | Mu/P.C.C | 64 | 17 |
| J/2143/B | அனிஸ் புளொரிடா இருதயநாதன் | J/K.H.C | 62 | 20 |
| J/2091/B | விஜித்திரா றெமீந்திரன் | J/I.C.M.V | 60 | 21 |
| J/0088/B | டிர்சிகா சுந்தரலிங்கம் | J/V.G.H.S | 60 | 21 |

(சி-736)
S.பொன்திவாகரன்

## மன்னாரில் படகு கவிழ்ந்து...

னார் பேசாலை பகுதியை சேர்ந்த மரியதாஸ் அந்தோனி மற்றும் அன்ரன் ராமசிங்கம் என்பவர்கள் நேற்று முன்தினம் கடலில் மீன் பிடித்து கொண்டிருக்கும் போது திடீரென காற்று வேகமாக வீசியதில் படகு கடலில் கவிழ்ந்து மூழ்கியது.

இதனையடுத்து அந்த பகுதியில் மீன்பிடித்து கொண்டிருந்த இந்திய இராமேஸ்வரம் மீனவர்கள், ஒருவர் தத்தளிப்பதை பார்த்து அவரை மட்டும் மீட்டு பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். அந்தோனி என்பவரே மேற்படி மீட்கப்பட்டுள்ளார்.

மற்றொரு மீனவர் நீரில் மூழ்கி மாயமாகியுள்ளார். மீட்கப்பட்ட மீனவரிடம் தமிழக கடலோர காவல் பாதுகாப்பு பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். (மு-9)

வெளிநாடுகளுக்கான பொதிகள் சேவை
11kg மேற்பட்ட பொதிகளுக்கு 1kg க்கான கட்டணம்
UK – 550/-, FRANCE – 700/-, GERMANY – 650/-,
SWISS – 750/-, CANADA – 950/-
மற்ற நாடுகளுக்கும் விசேட கட்டணம் உண்டு.
சகல நாடுகளுக்குமான விசா விண்ணப்ப ஏற்பாடுகள்
நிபுணத்துவம் வாய்ந்தவர்களுடாக
செய்து கொடுக்கப்படும்
(சி-1858)
திருமுருகன் கொம் நெற் (பிறைவெட்) லிமிடெட்
➢ 216, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம். கிளிநொச்சி,
➢ 46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, மன்னார்.
➢ 18, பிரதான வீதி, நெல்லியடி. 0777554528
DHL aramex SKYNET

## மின்சார சபை...

கள் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

அந்த சங்கத்தின் பிரதான செயலாளர் ரஞ்சன் ஜெயலால், உரிய தீர்வு கிடைக்கவில்லையாயின் தொடர் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடப் போவதாக தெரிவித்தார். (மு)

எவரெஸ்ட் குமாரிக்கா
சந்தனாதி தைலம்

■ நீண்ட கூந்தல் வளர்ச்சிக்கும்
■ இளநரையை போக்கவும்
■ பொடுகிலிருந்து நிவாரணம் பெறவும்
■ கண் எரிச்சல், தலை வலியை நீக்கவும்
■ ஞாபக சக்தியை அதிகரிக்கச் செய்யவும்
■ ஏழு வகையான மூலிகைகள் உள் அடங்கிய சிறப்பு தைலம்
100 வீதம் இயற்கையானது
(கற்றாழை, வல்லாரை, நெல்லிக்காய், கரிசலாங்கண்ணி, கறிவேப்பிலை, பொன்னாங்காணி, அவுரி மற்றும் விற்றமின் E)
(1394)
எல்லா மருந்தகங்களிலும் சாதாரண கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்
தயாரிப்பு:
எவரெஸ்ட் மருந்தகம்,
உசன், மிருசுவில்,
யாழ்ப்பாணம்.
ஏக விநியோகஸ்தர்
பிரமநாதன் & Co
என்.28, 26, பேரின்பநாயகம் வீதி,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
கையேசி எண்: 0776389356, 0777153571

விரைவு பொதிகள் சேவை,
விமான பயணச்சீட்டுகள்
விசா சேவைகள்
● அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்
(C-696)

UK-550*/=Kg
DELIVERY IN 3 - 5 DAYS
V2 TRAVELS-0768226240
● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● நெல்லியடி
● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை


A/L, O/L, 10
வரலாறு
பிரத்தியேக, குழு வகுப்புக்கள்
தொடர்பு : 075 675 6767
(1847)

# ஜேர்மனி Fist Ball Team





அன்ரனி பெர்னாண்டோவின் பிள்ளைகளான அஜித் அன்ரனி பெர்னாண்டோ, அன்ரு அன்ரனி பெர்னாண்டோ ஆகிய இருவரும் ஜேர்மனியின் Fist Ball தேசிய அணியில் இடம்பெற்று போலந்து நாட்டில் நடைபெற்ற 2017 ஆம் ஆண்டுக்கான உலகக்கிண்ண இறுதிப் போட்டியில் சுவிஸ்லாந்துக்கு எதிராக விளையாடி உலகக் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டனர். அதனைக் கௌரவிக்கும் முகமாக Fist Ball அணியினருக்கு ஜேர்மன் நாட்டுப் பிரதமர் பதக்கங்களை வழங்கி கௌரவித்தார்.



இவர்களின் தகப்பனார் மண்டைதீவு புனித சம்பேதுறுவார் கோவிலைச் சேர்ந்த சிங்கராயர், அருளம்மாவின் மகனும் யா/புனித பத்திரிசியார் கல்லூரியின் பழைய மாணவருமாவார். இவர்களின் தாயார் வசந்தினி அன்ரனி பெர்னாண்டோ தாளையடி புனித அந்தோனியார் கோவிலைச் சேர்ந்த மலக்கியாஸ், அமிர்தசிலியின் புதல்வியும், யா/இளவாலை திருக்குடும்பக்கன்னியர் மடம் மகா வித்தியாலயத்தின் பழைய மாணவியுமாவார்.

2013: Ajith = World-Games-Gold Medal Winner (in Columbia)
2014: Ajith = European - Champion (in Switzerland)
2015: Ajith = World - Champion (in Argentina)
2016: Andrew & Ajith = European - Champion (in Austria)
2017: Andrew & Ajith = World-Games- Gold Medal Winner (in Poland)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.12.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.